GOKULAM

கோகுலம்

ஜனவரி 2004 ரூ.6/-



கோப்பையை வென்றது ஸ்வார்ட்ஸ் பள்ளி!

ண்டு வளர்த்த மரம்!
ண்ண காலண்டர் 2004
லம் மாணவர் ஸ்பெஷல்

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622 / 23 / 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :

ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-
ஆறு மாதம் : ரூ.36/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.400/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

குழந்தைகள் மனம் கவர்ந்த இதழ்

ஓவியப் போட்டி முடிவு 72



அமிர்தமும் விஷமும் 32



ஜனவரி 2004 மலர் : 21 இதழ் : 12

கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்

தொண்டையில் சிக்கிய மீசை!

நெட் பிட்ஸ்

இரண்டு நண்பர்கள், கடற்கரையில் நடந்து போய்க் கொண்டு இருந்தார்கள். பேச்சுக்கு இடையில், அவர்களுக்குள் ஏதோ வாக்குவாதம் ஏற்பட்டது. ஒரு கட்டத்தில், ஒரு நண்பர், இன்னொருவரைப் பளாரென்று அறைந்துவிட்டார்.

உடனே, அடிபட்ட நண்பர், கடற்கரை மணலில், 'இன்று என்னுடைய நெருங்கிய நண்பன், என்னை அடித்துவிட்டான்' என்று எழுதி வைத்தான். சிறிது நேரத்தில் வந்த பெரிய அலையொன்று, அவர் மணலில் எழுதி வைத்ததை அழித்துவிட்டுப் போய்விட்டது.

இருவரும் கடலில் குளிக்கப் போனார்கள். நீந்தியபடியே ஆழமான பகுதிக்குப் போய்விட, அடிபட்ட நண்பர், கடலில் மூழ்கி, தத்தளிக்க ஆரம்பித்தார். உடனே பாய்ந்து வந்த நண்பர், அவரைக் காப்பாற்றிக் கரை சேர்த்தார்.

அவருக்கு நன்றி சொன்ன நண்பர், அங்கிருந்த பாறையொன்றில், 'இன்று என்னுடைய நெருங்கிய நண்பன், என் உயிரைக் காப்பாற்றினான்' என்று ஒரு கூரிய கல்லை எடுத்து, செதுக்கி வைத்தார்.

"உன் செயல் ரொம்பப் புதிராக இருக்கிறதே! நான் உன்னை அடித்தபோது, அதைக் கடற்கரை மணலில் எழுதி வைத்தாய். இப்போது உயிரைக் காப்பாற்றியவுடன் பாறையில் செதுக்கி வைக்கிறாயே! என்ன காரணம்?" என்று கேட்டார். அதற்கு அவரது நண்பர் சொன்ன பதில் :

"நமக்கு வருத்தம் ஏற்படுத்தும் ஒரு காரியத்தை ஒருவர் செய்தால், அதை மணலில் எழுதி வைக்க வேண்டும். கடல் அலை, அந்த எழுத்துகளை அழித்துச் சென்றுவிடுவதுபோல, மனிதனின் மன்னிக்கிற குணம் அந்த வருத்த மூட்டும் செயலை நாளடைவில் மறக்கச் செய்துவிடும். ஆனால் ஒருவர் இன்னொருவருக்குச் செய்கிற உதவியை, நன்றி மறவாமை என்கிற பாறையில் பொறித்து வைக்க வேண்டும். அப்போது தான் செய்த உதவி வாழ்நாள் முழுதும் மறக்காது" என்றார்.

ஆகவே நீங்களும் எழுதப் பழகுங்கள். கடற்கரை மணலிலா, பாறையிலா என்பதை அவ்வப்போது சரியானபடி தீர்மானித்துக் கொள்ளுங்கள்.



உங்கள் வீட்டில் கால்குலேட்டர் இருக்கிறதா? அதை வைத்துக் கொண்டு, வார்த்தை விளையாட்டு விளையாடலாமா?

கால்குலேட்டரை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் 77345 என்ற எண்களை அழுத்துங்கள். அப்படியே கால்குலேட்டரைத் தலைகீழாகத் திருப்பி, அந்த எண்கள், ஒரு ஆங்கில வார்த்தையாக மாறியிருப்பதைக் கவனியுங்கள். SHELL என்று வருகிறதா?

எங்கே, பின் வரும் எண்களையும் அழுத்தி, அதிலிருந்து என்னென்ன வார்த்தைகள் வருகின்றன என்று முதலில் யூகம் செய்துவிட்டு, அதன்பின் கால்குலேட்டரைத் தலைகீழாகத் திருப்பி, சரி பார்த்துக் கொள்ளுங்களேன்.

(1) 38079 (2) 3215 (3) 4509
(4) 378804 (5) 3200

அடுத்து ஒரு ஜோக் :

ஒருவர், விமான நிலையத்தில் காத்துக் கொண்டு இருந்தார். பக்கத்தில் இருந்தவர்

கேட்டார் :

''யாருக்காக காத்துக் கொண்டிருக் கிறீர்கள்?''

''என் சிறு வயது நண்பனுக்காக, நாங் கள் பிரிந்து நாற்பது வருடங்களாகி விட்டன. இத்தனை வருடங்களுக்குப் பின் இப்போதான் நம் ஊருக்கு முதல் தடவை யாக வருகிறார்.''

''நாற்பது வருஷம் கழிச்சு பார்க்கறீங் களா? எப்படி ஆளை அடையாளம் கண்டு பிடிப்பீங்க?''

''வெளிநாடு போய்விட்ட அவரை அடையாளம் கண்டுபிடிப்பது எனக்குக் கஷ்டம்தான். ஆனால், அவர் என்னைச் சுலபமாக அடையாளம் கண்டுபிடிச்சிடு வாரு.''

''எப்படி?''

''நான்தான் வெளிநாடு போகாமல் இங்கேயே இருக்கேனே!''

அடுத்தபடியாக சில விசித்திரமான தகவல்களைப் பார்க்கலாமா?

* வால்டர் மிட்லே என்பவர் புகழ்பெற்ற மேடைப் பாடகர். அவர் 1953ல் லண்ட னில் ஒரு நிகழ்ச்சியில் பாடினார். குறிப் பிட்ட மிகப் பிரபலமான பாடலை அவர் உச்சஸ்தாயியில் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பாடி, ரசிகர்களை மகிழ்விப்பது வழக்கம். ஆனால் அன்றைய தினம், அவர் வழக்கம் போல, உச்சஸ்தாயியில் பாடவில்லை என்ப தால், அவரது ரசிகர் களுக்குப் பெரும் ஏமாற்றம். நிகழ்ச்சி முடிந்தபோது அதற் கான காரணத்தை ரசிகர்களிடம் சொன் னார். உச்சஸ்தாயியில் பாட குரலெடுத்த சம யம், அவர் ஒட்டியிருந்த செயற்கை மீசை தவறு தலாக வாய்க்குள் போய் தொண்டையில் சிக்கிக் கொண்டு விட்டதாம்!

ஸ்வீடன் சூப்பர்



மார்க்கெட் ஒன்றில் ஒரு டிப்டாப் ஆசாமி திருடச் சென்றான். கேஷ் கவுண்டரில் அமர்ந்திருந்த பெண்ணின் முன்னால் சென்று நின்றுகொண்டு, மேஜைமீது குனிந்து அந்தப் பெண்ணிடம், பணத் தைக் கொடுக்கும்படி மிரட்டினான். சம யோஜிதமாக அந்தப் பெண் என்ன செய் தாள் தெரியுமா? திருடன் கழுத்தில் கட்டி யிருந்த 'டை'யை இழுத்து, மேஜை டிராய ருக்குள் அதன் ஒருபகுதியை வைத்து, டிராயரைப் பட்டென்று பூட்டிவிட்டாள். திருடன் வசமாய் சிக்கிக் கொண்டான்.

கடைசியாக, கீழே உள்ள படத்தைப் பாருங்கள். என்ன தெரிகிறது? ஒரு முதிய வரும், மூதாட்டியுமா? இல்லை இசையில் லயித்த இளம் ஜோடியா? இரண்டும் தானே?

தொகுப்பு : எஸ். சந்திரமௌலி





நண்டு வளர்த்த



அந்த வனத்தில் வசித்த வயதான நண்டு நல்லக்காள், பகல் முழுவதும் கஷ்டப்பட்டு உழைத்துச் சேர்த்த நெல்லைச் சமைத்து சாதமாக்கியது. தன் குழந்தைகளுக்காக எடுத்துச் சென்று கொண்டிருந்தது.

அப்போது எதிரே வந்த குரங்கு குப்பண்ணா. நல்லக்காள் சாதம் கொண்டு செல்வதை கவனித்து விட்டது. 'இதை எப்படியாவது ஏமாற்றி, இந்தச் சாதம் முழுவதையும் தின்று, இன்றைய பசியைப் போக்கிக் கொள்ளலாம்' என மனதிற்குள்ளாகத் திட்டம் தீட்டிக் கொண்டது.

"நண்டே நண்டே நல்லக்கா - நீ
நகர்ந்து செல்வது அழகக்கா!
உண்டிடத் தானே இச்சாதம்
உடனே எனக்குக் குடுக்கா"

என்று நண்டைப் பார்த்து குரங்கு கேட்டது.

"குரங்கண்ணா குப்பண்ணா
குசும்போ உனக்கு ரொம்
பண்ணா - என்
குஞ்சுகள் பசியில்
கிடக்கண்ணா
பஞ்சென இருக்கும்
இச் சாதம்
பசிக்கு விருந்தாய்
இருக்கண்ணா" என

நண்டு நல்லக்காள் பதில் கூறி விட்டு தன் வழியே நடக்கத் தொடங்கியது.

குரங்கின் மனதில் புதிய திட்டம் ஒன்று உருவானது. அது வேகமாகச் சென்று, அங்குமிங்குமாகத் தேடி ஆற்றங்கரை மாமரத்தடியில் கிடந்த ஒரு காய்ந்த மாங்கொட்டையைக் கையில் எடுத்துக் கொண்டது. மீண்டும் நண்டை வழி மறித்தது.

"நண்டே நண்டே நல்லக்கா நீ
நகர்வது ரொம்ப அழகக்கா
கண்டாயே மாவிதையை - அது
கனத்த மரமாய் வளர்ந்து பின்னே
கனிந்த கனியைத் தருமக்கா
இதோ அந்த விதையக்கா
எடுத்துச் சென்று நீ வளருக்கா
பதிலாய் சாதம் எனக்குத்தான்
பசிக்காய் தந்தால் போதுங்க்கா!" என்று


கேட்டது.

நண்டு நல்லக்காள் சிறிது நேரம் யோசித்து, குரங்கு சொல்வதில் தனக்கு லாபம் இருப்பதாக அது கருதியது. 'சாத உருண்டை தன் குடும்பத்திற்கு ஒருவேளை உணவுக்கு மட்டுமே பயன்படும். ஆனால் இந்த மாவிதையே மரமாகி, காய்த்து, கனிந்து விட்டால் தன் குடும்பத்தினருக்குப் பல மாதங்களுக்கு உணவு கிடைக்குமே' என



மரம்!

பா.முருகேசன்



அது நினைத்தது.

''குரங்கண்ணா குப்பண்ணா - நீ
சொன்னதும் மெத்தச் சரியண்ணா
கொட்டையை எனக்குக் கொடுத்தண்ணா - சாத
உருண்டையை வாங்கிச் செல்லண்ணா'' என்று குரங்கைப் பார்த்து கூறியது. குரங்கின் கையிலிருந்த மாங்கொட்டையை வாங்கிக் கொண்டு, தன் கையிலிருந்த சாத உருண்டையை அதனிடம் கொடுத்தது. பின் தன் வீட்டை அடைந்தது.


கொட்டையுடன் வீட்டிற்கு வந்த நண்டு நல்லக்காள் ஆழமாக ஒரு குழியைத் தோண்டி, அதற்குள் அந்த மாங்கொட்டையைப் போட்டு மூடி வைத்தது. மறுநாள் அங்கு நீர் ஊற்றியபடியே,

''மண்ணில் கிடக்கும் மாவிதையே
மரமாய் என்றோ வருவாயோ?
தின்னப் பழங்கள் தருவாயா
திகட்டும் இனிப்புச் சுவையோடு!'' என்று மண்ணில் கிடந்த மாங்கொட்டையைக் கேட்டது.

''நண்டு அக்கா நல்லக்கா
நலமாய் நானிங்கு வளர்வதற்கு
அண்டை வீட்டின் பசுங்கன்றின்
அருமைச் சாண எரு வேணும்'' என்று
மாங்கொட்டை கூறியதைக் கேட்ட நண்டு, வேகமாகத் தன் பக்கத்து வீட்டில் குடியிருக்கும் பசுவிடம் சென்றது.

''பாசமுள்ள பசுவம்மா
நேசம் உனக்கு நிறையம்மா
குரங்கு குப்பு தந்திட்ட
கொட்டை மரமாய் முளைப்பதற்கு
உரமாய் கன்றின் சாணம்தா
மரமாய் அதுவும் வளர்ந்த பின்னே
உனக்கும் கொஞ்சம் மாங்கனியை
கணக்காய் தருவேன் நானம்மா'' என்று கேட்டது.

இதைக் கேட்ட பசு தனது கன்றின் சாணத்தை எடுத்து நல்லக்காளிடம் கொடுத்தனுப்பி வைத்தது. பசு கொடுத்த சாணத்தை மிகவும் கஷ்டப்பட்டுச் சுமந்து கொண்டு வந்த நண்டு நல்லக்காள், அதை மாங்கொட்டை இருந்த இடத்தில் போட்டது. மாங்கொட்டை முளைத்து நன்றாக வளர்ந்தது.



குன்றாக இருந்து செடியாக வளர்ந்த மாங்கன்றுக்கு நீர் ஊற்றியபடியே நண்டு நல்லக்காள் மீண்டும்

''பச்சை நிறத்து மாங்கன்றே - உன்னைப்
பார்த்து உள்ளம் மகிழ்கின்றேன்
உச்சியைத் தொடும் மரமாக - நீ
உருவாவது என்றோ மாங்கன்றே
இச்சை யுண்டு உன் கனி தின்ன
என்றோ அது வரும் நான் தின்ன'' என்று

மாங்கன்றைக் கேட்டது.

''நண்டு அக்கா நல்லக்கா
நலமாய் நானும் வளர்வதற்கு
கொண்டு வருவாய் நீ எனக்கு
கொழுத்த மூங்கில் தடியக்கா - என்
தண்டுடன் அதனை நட்டு வைக்க
தானாய் நானும் வளர்வேனே!'' என்று

மாங்கன்று பதில் கூறியது.

அது கேட்ட நண்டு நல்லக்காள், அந்தக் காட்டின் ஓரமாய் அடர்ந்து வளர்ந்திருந்த மூங்கிலை அடைந்தது. தனக்கு ஒரு நல்ல மூங்கில் கழி வேண்டுமெனக் கேட்டது.

''எட்டா உயரம் வளர்ந்தவனே
முற்றிய மூங்கில் மரத்தவனே
கொட்டையில் முளைத்த மாங்கன்று
சட்டெனத் தானும் வளர்வதற்கு
வெட்டித் தாயேன் ஒரு கழியை
வெல்லம் போல இனிக்கும் கனி
விரும்பித் தருவேன் உனக்கும் நான்''

என்று மூங்கில் மரத்திடம் கேட்டது. ஒரு வளர்ந்த கிளையை வெட்டி மூங்கில் மரம் தந்தது. அதை வாங்கிக் கொண்டு வேக மாக வந்த நண்டு நல்லக்காள், அந்த மூங்கில் கழியை மாங் கன்றின் அருகே நட்டு வைத்தது. அந்தக் கழியைப் பிடித்தவாறே விடுவிடுவென மரம் வளரத் தொடங்கியது. மரத்தில் பூக்கள் பூத்துக் குலுங்கின. இதைக் கண்ட நண்டு நல்லக் காள் மீண்டும் மரத்திடம் சென்றது. இப் போது மரம் நல்லக்காளை அழைத்தது. பின்,

''நண்டு அக்கா நல்லக்கா
நலமா நீயும் கூறக்கா
இன்று எந்தன் உடல் மீதே
எத்தனை எத்தனை மலரக்கா!
இத்தனை மலரும் காய்ப்பதற்கு
இனிய தேனீயை அழைத்திங்கு
கனிவாய் எந்தன் மலர் மீது
கருணை காட்டச் சொல்லக்கா'' என்றது


மரம்.

இது கேட்ட நண்டு நல்லக்காள், தேனீ யைத் தேடி அதன் கூட்டை நோக்கிச் சென்றது.

''தேனாய் இனிக்கும் தேனம்மா
திரும்பி என்னைப் பாரம்மா
தானாய் உன்னை அழைத்து வர
சொன்னது எந்தன் மாமரமும்
சீராய் தொங்கும் மலர்மீது
சிறிது உடல் படும்போது
சிறந்த கனியென மாறிடுமாம் - அதில்
சிறிது உனக்கும் தருவேனாம்'' என்று

கூறி அந்தத் தேனீயை அழைத்துச் சென்று மரத்தைக் காட்டியது.

மாமரத்தைக் கண்ட தேனீயும் தன் கூட்டத்தோடு வந்து மரத்தை மொய்த்தது. மாமரமும் காய்த்துக் குலுங்கியது. அப்போது அவ்வழியே வந்த குரங்கு குப் பண்ணா நண்டு வளர்த்த மாமரத்தையும் காய்ந்து குலுங் கும் அதன் காய்களையும் கண்டதும் அம் மரத்தின் மீது தாவி ஏறியது. அதிலிருந்த பழங் களைப் பறித்து தின்ன ஆரம்பித்தது. இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த நண்டு நல்லக்காள், தனக்கும் சில கனிகளைப் பறித்துத் தருமாறு குரங்கிடம் கேட் டது. 'சரி' எனக் கூறிய குரங்கு குப் பண்ணா, நல்ல



காய்களைப் பறித்து நண்டின் உடல் மீது குறி பார்த்து எறிந்தது. குரங்கு எறிந்த காய்கள் நண்டு நல்லக்காளின் உடலில் பெருத்த காயத்தை உண்டாக்கின.



குரங்கு குப்பண்ணாவின் தீய எண்ணத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்ட நண்டு நல்லக்காள் தன் உடலில் ஏற்பட்ட காயத்தோடு நகர்ந்து சென்று பசுவிடம் உதவி கேட்டது. பசுவும் நண்டும் மூங்கிலிடம் சென்றன.

"உந்தன் கழியால் தானண்ணா
உண்டிட ஏற்ற கனிகள் ஏராளம்
உடைய மரமாய் இருக்கண்ணா
பயமே எனக்கு மரம் ஏற
பாயுது தாவுது குரங்கதிலே
எனக்கும் ஒருபழம் கேட்டதற்கு
எறியுது காயை என் உடல் மீது
வலியும் வந்தது அதனாலே - நீ
வருவாயா எனக்குத் துணையாக
பொல்லாக் குரங்கை விரட்டிவிட்டு
பறித்து உண்போம் மாங்கனியை!" என்று

மூங்கிலை அழைத்தது. மூங்கிலும் தான் வருவதாக ஒப்புக் கொண்டது. தன்னுடன் உதவிக்குத் தேனீயையும் அழைத்து வருமாறு நண்டு நல்லக்காளிடம் கூறி, அதைத் தேனீக் கூட்டிற்கு அனுப்பி வைத்தது.

குரங்கு எறிந்த காய்கள் பட்டு முதுகில் ஏற்பட்ட வலியோடு, தேன் கூட்டை அடைந்த நண்டு நல்லக்காள் தேனீயை அழைத்தது.

"தேனாய் இனிக்கும் தேனம்மா
திரும்பி என்னைப் பாரம்மா
வீணாய் உனக்கும் தொல்லைதான்
வேறு வழியும் எனக்கில்லைதான்
காய்கள் மிகவும் பழுத்திடவே
கனிந்தே கிடக்குது மரத்தினிலே
பாய்ந்தே தாவி ஏறி அதை
பறித்துத் தின்னுது குப்பண்ணா
அமைதியாய் எனக்கொரு பழம் கேட்டேன்.
அடித்தான் காயால் என் மீது
அதிகம் வலிக்குது அதனாலே
பொல்லாக் குரங்கை விரட்டிடவே
துணையாய் நீயும் வருவாயா?
எல்லாக் கனியையும் நாம் பறித்து
இனிதாய் உண்டு மகிழ்ந்திடலாம்''

என்று நண்டு கூறியதைக் கேட்டு, தேனீயும் தன் கூட்டத்தோடு வருவதாக ஒப்புக் கொண்டது.

அதன்படியே நல்லக்காளைத் தொடர்ந்து தேனீக்கூட்டமும், மூங்கில் மரமும், பசுவும் வந்து மாமரத்தை அடைந்தன.

வயிறு புடைக்கக் கனிகளைத் தின்று அங்கேயே உறங்கிக் கொண்டிருந்த குரங்கு குப்பண்ணாவை, தேனீக்கள் மொய்க்க ஆரம்பித்தன. அதைத் தாங்க இயலாத குரங்கு வேறு மரத்திற்குப் போக கீழே இறங்கியது. அதைக் கண்ட பசுவம்மா தன் கொம்பால் அதை முட்டியது. மாட்டிடமிருந்து தப்பிக்க மீண்டும் மரமேறி அடுத்த மரத்தை நோக்கித் தாவ ஆரம்பித்தது. அப்போது மூங்கில் அதனை அடிக்கத் தொடங்கியது. மூங்கிலின் அடியைத் தாங்க முடியாத குரங்கு வேகமாக ஓடியது. அதன் பிறகு அந்த மரத்தின் பக்கமே தலை வைத்து படுக்கவில்லை. தேனீக்கள் கடித்த இடங்களில் புண்ணாகி விட அடிக்கடி அதைத் தடவித் தடவிப் பார்த்துக் கொள்வதையும், மூங்கில் அடித்த அடி முதுகுத்தண்டில் நேராக இருப்பதையும், மாடு தன் கொம்பால் முட்டியதால் நடு மண்டையில் சிறிய பள்ளத்தையும் இன்றும் கூட குரங்குகளிடம் காண முடியும்.

ஒரு வழியாகக் குரங்கை விரட்டிய பின் நண்டு நல்லக்காவுடன் பசு, தேனீ, மூங்கில் ஆகிய அனைத்தும் அங்கிருந்த பழங்களைப் பங்கிட்டு உண்டு மகிழ்ந்தன. இன்றும்கூட அம்மரத்தைச் சுற்றி இவை மூன்றும்

"இனிக்குது இனிக்குது பழமிங்கு
இன்று கிடைத்தது நமக்கென்று
துணிவுடன் நாமும் இணைந்திங்கு
துயரம் நீங்கி வாழ்ந்திடுவோம்'' என

ஆடிப்பாடி மகிழ்கின்றன. ●



மேப் வரைவோமா?

மேப் எனப்படும் வரைபடம் எங்கெல்லாம் பயன்படுகிறது? வாகன ஓட்டிகள், சுற்றுலாப் பயணிகள், கட்டட இஞ்சினியர்கள், வானூர்தியாளர்கள், இன்னும் பலருக்கும் மேப் மிகவும் உதவுகிறது.

வாகன ஓட்டிகளுக்கு எந்தச் சாலைகளில் எப்படி போனால் குறிப்பிட்ட இடத்தை அடைய முடியும் என்பதை வரைபடத்தின் உதவி கொண்டே தெரிந்து கொள்ள முடிகிறது.

சுற்றுலாப் பயணிகளுக்குப் பயன்படும் வரைபடம் சாலைகளைப் பயன்படுத்துவோரின் வரைபடத்தை விட வித்தியாசமானது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்கள், ஓவியக் கூடங்கள் மற்றும் சுற்றிப் பார்க்க வேண்டிய இடங்களை உள்ளடக்கியது.

ரயில் பயணிகளின் மேப்பில் வனப் பகுதிகள், மலைகள், வயல் வெளிகள், ஸ்டேஷன்கள் போன்றவை இடம் பெற்றிருக்கும். இந்த மேப் சிலந்தியின் வலைப் பின்னல் போன்று ஏராளமான கோடுகளைக் கொண்டது.


கட்டட இஞ்சினியர்களின் மேப்பை, பிளான் என்று அழைப்பார்கள். சிறிய வீடுகள் முதல் பெரிய கட்டடங்கள் வரை எதைக் கட்டவும் பிளான் அவசியம்.

வானூர்திகளை ஓட்டுபவர்களுக்கும் மேப் தான் சிறந்த வழிகாட்டி. இது ரேடார் மேப் என்று அழைக்கப்படுகிறது.

கப்பலைச் செலுத்த சார்ட் என்று அழைக்கப்படும் மேப் தான் உதவுகிறது. கடற்கரை, மலைகள் போன்றவற்றை இந்த மேப்பின் உதவியால் அறிந்து கொள்ளலாம்.

மேப் பொதுவாகப் பறவைப் பார்வையில் தான் உருவாக்கப்படும். பறவைப் பார்வை என்றால் மேலிருந்து






பார்க்கும்போது கீழே தெரியும் பொருட்கள் என்ன வடிவில் இருக்கிறதோ, அதே போல் தான் மேப்பிலும் உருவாக்கப்படும்.

மரங்கள் சூழ்ந்த பகுதியில் ஒரு வீடு இருப்பதை இந்தப் படத்தில் பாருங்கள். மரங்களுக்கு நடுவில் ஒரு மண் பாதை. பாதையின் முடிவில் ஒரு வீடு. இந்த வீட்டுக்குப் பின் புறத்தில் சிறிது தூரத்தில் இடது பக்கம் ஒரு சிறிய அறை உள்ளது. வலது பக்கத்தில் பழத் தோட்டம் இருக்கிறது. இந்தக் குறிப்புகளைக் கொண்டு ஒரு





ஸ்நேகா

மேப்பை உருவாக்குங்கள் பார்க்கலாம்.

நீங்கள் உருவாக்கின மேப்பும், இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் மேப்பும் ஒரே மாதிரியாக இருந்தால் 'சபாஷ்!' சொல்லிக் கொள்ளுங்கள். மேப் போட வரவில்லை என்றால், இந்த மேப்பைப் பார்த்து வரைந்து பழகுங்கள்.

அடுத்த மாதம் இன்னொரு சுவாரசியமான மேப் செய்யலாம், காத்திருங்கள்.

ஆபத்திலிருந்து தப்பிப்பது எப்படி?

மோஹன்.சி
சாந்தூ




அம்மா, நான் இங்கே இருக்கேன்.
ஐயோ!
!
ஆன்ட்டி தூங்கிட்டாங்க. நான் எப்படி வெளியில் வர முடியும்?
மன்னிச் சிடு மினு
என் மகள் எவ்வளவு கஷ்டப் பட்டுவிட்டாள்!
மறுநாள்-
இன்னிக்கும் நீதான் வந் திருக்கியா?
அம்மா இன் னும் குண மாகலை.
இன்னிக்காவது ஒழுங்கா சுத்தம் பண்ணணும், சரியா?
நல்லா பண்ணிட றேன்.
ஆன்ட்டி, வாயைத் திறங்க.
இப்ப எந்த அபாய மும் இல்லை.
© 2002 MALAY FEATURES WORLD RIGHTS RESERVED
எந்த மாதிரி சூழ்நிலையிலும் புத்தி சாலித்தனமா யோசிச்சா ஆபத்தி லிருந்து தப்பிச்சிடலாம்.
ஹா... ஹா... ஹா...

எரிபொருள் சேமிப்பு சோதனை!

'பெட்ரோலியம் கன்சர்வேஷன் ரிசர்ச் அசோசியேஷன்' எரிபொருள் சேமிப்பின் அவசியத்தை விளக்குகிறது.

அடுப்பெரிக்க உதவும் கேஸை எப்படி சேமிப்பது என்று ஒரு சிறிய சோதனை மூலம் செய்து பாருங்கள்.

சிறிதளவு கொண்டைக் கடலையை முதல் நாள் இரவு தண்ணீர் ஊற்றி ஊற வையுங்கள். மறுநாள் காலை ஒரு பாத்திரத்தில் ஊறிய கொண்டைக் கடலையையும், இன்னொரு பாத்திரத்தில் ஊறாத கொண்டைக் கடலையையும் வேக விடுங்கள். இரண்டில் எது முதலில் வெந்து விடுகிறது என்பதைக் கவனியுங்கள்.

ஊறிய கொண்டைக் கடலை விரைவில் வெந்து விடும். இதனால் கேஸ் மிச்சமாகும்.

ஊறாத கொண்டைக் கடலை வேக, நீண்ட நேரம் ஆகும். இதனால் கேஸ் நிறைய செலவாகும்.



காரணம் என்ன?

காய்ந்த கொண்டைக் கடலையில் தண்ணீர் சத்து குறைவாக இருக்கிறது. எனவே அது ஊறி, வேக நேரமாகிறது. ஊறிய கொண்டைக் கடலையில் தண்ணீர் சத்து அதிகம் இருப்பதால் மென்மையாகி விரைவில் வெந்து விடுகிறது. ஊறிய கொண்டைக் கடலை உபயோகிப்பதன் மூலம் 22% எரிபொருளைச் சேமிக்கலாம்.



• நடராஜன், வைஸ் பிரின்ஸ்பல் மற்றும் மாணவர்கள்



கோப்பையை வென்றது ஸ்வார்ட்ஸ் பள்ளி!

ஒரு வருடமாக சுழல் கோப்பையை வெல்வதற்கான போட்டி நடந்து வந்தது. 2003ஆம் ஆண்டில் அதிக படைப்புகளை அனுப்பி ஸ்வார்ட்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி சுழல் கோப்பையை வென்று விட்டது.

சுழல் கோப்பை திட்டம் ஆரம்பித்து ஆறு வருடங் களாகிவிட்டது. வத்தல குண்டு, செந்துறை, ஆண்டிப் பட்டி, இராமநாதபுரம், தூத்துக்குடி மாவட் டங்களைத் தொடர்ந்து இந்த ஆண்டும் இராமநாதபுரம் மாவட்டமே கோப்பையை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

நவம்பர் 28ந் தேதி ஸ்வார்ட்ஸ் பள்ளி யில் சுழல் கோப்பை வழங்கும் விழா. புயல் அறிகுறியால் விடாமல் மழை பெய்து கொண்டிருந்தது. இதனால் விழாவை மிகவும் எளிமையாக நடத்த வேண்டிய சூழ்நிலை.

மழை சற்றுக் குறைந்து லேசான தூற லின் போது விழா தொடங்கியது. பெற்றோர் - ஆசிரியர் சங்கத்தின் தலைவர் நடராஜன் தலைமையேற்று பேசினார். பிரவீன் ஞானக்குமார், சுகன்யா, ஷீபா, நுஷ்ரத், தமீம் மினாஸ், விமல் ஆகிய மாணவர்கள் தான் தொடர்ந்து கோகுலத்துக்குப் படைப்புகளை அனுப்பியவர்கள். இவர்கள் ஐந்து பேருடன் வைஸ் பிரின்ஸ்பாலிடமும் நடராஜன் கோப்பையை வழங்கினார். கர வொலிக்கிடையே மகிழ்ச்சி பொங்க கோப் பையைப் பெற்றுக் கொண்டனர். மாணவர் களுக்குப் பரிசும் வழங்கப்பட்டது.

1986ஆம் ஆண்டு ஸ்வார்ட்ஸ்



படித்திருக்கிறார். இந்த விஷயத்தை ஆசிரியர்களும் மாணவர்களும் மகிழ்ச்சியுடன் சொல்லி பெருமை கொள்கின்றனர்.

கடந்த மாதம் இந்தப் பள்ளியிலிருந்து சில மாணவ, மாணவியர் டெல்லி சென்று குடியரசுத் தலைவருடன் ஒரு நாள் முழுவதும் செலவிட்டதைப் பெரும் பேறாகக் கருதுகின்றனர்.

சுழல் கோப்பை பெறும் போது 'அடுத்த ஆண்டும் தாங்களே கோப்பையை வெல்வோம்' என மாணவர்கள் குறிப்பிடுவர். அதே போல் இந்தப் பள்ளி மாணவர்களும் கூறியிருக்கின்றனர்.

2004ஆம் ஆண்டு சுழல் கோப்பையை வெல்ல ஸ்வார்ட்ஸ் பள்ளி தயாராகி வருகிறது. நீங்கள் மட்டும் சளைத்தவர்களா, என்ன? உடனே வேலையில் இறங்குங்கள். கோப்பையை வெல்லத் தயாராகுங்கள். வாழ்த்துகள்.

* நுஷ்ரத், ஷீபா, சுகன்யா, பிரவீன் ஞானக்குமார், விமல் (இடமிருந்து வலமாக)

மெட்ரிகுலேஷன் பள்ளி துவக்கப்பட்டது. 70 மாணவர்களுடன் ஆரம்பித்த இப் பள்ளியில் 1400 மாணவ, மாணவியர் இப்போது பயில்கின்றனர். தொடர்ந்து நூறு சதவித தேர்ச்சியைப் பெற்று வருகிறது இப்பள்ளி. கராத்தே, இசை, நடனம், யோகா போன்ற மற்ற கலைகளிலும் இப்பள்ளி மாணவர்கள் தங்கள் திறமைகளைக் காட்டி வருகின்றனர்.

ஸ்வார்ட்ஸ் பள்ளிக்கு இன்னும் ஒரு சிறப்பும் இருக்கிறது. இதே நிர்வாகத்தைச் சேர்ந்த ஸ்வார்ட்ஸ் மேல்நிலைப் பள்ளியில் தான் நமது குடியரசுத் தலைவர்

முதல் ஐந்து இடங்களைப் பெற்ற பள்ளிகள் :

1. *ஸ்வார்ட்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, இராமநாதபுரம்*
2. *அரசு மேல்நிலைப் பள்ளி, நல்லூர்*
3. *சேனைத் தலைவர் உயர்நிலைப் பள்ளி, விக்கிரமசிங்கபுரம்*
4. *பிரின்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, மடிப்பாக்கம்*
5. *புனித அலாய்சியஸ் பள்ளி, தூத்துக்குடி*

அட்டையில் : **நுஷ்ரத், ஷீபா, சுகன்யா, பிரவீன் ஞானக்குமார், விமல்**

அட்டை மற்றும் படங்கள் : **ஸ்ரீஹரி**

கரூர் மாவட்டச் சிறப்பிதழ்

பிப்ரவரி இதழ் கரூர் சிறப்பிதழாக வெளிவர இருக்கிறது.

அடுத்தது தஞ்சாவூர் மாவட்டச் சிறப்பிதழ்

தஞ்சாவூர் பள்ளி மாணவ, மாணவியர் தங்களின் படைப்புகளை அனுப்பி வைக்கலாம். கதைகள், ஜோக்ஸ், புதிர்கள், அனுபவங்கள் மட்டுமின்றி, உங்கள் மாவட்டத்தின் சிறப்புகள், வரலாற்று அம்சங்களையும் எழுதலாம்.

கடைசித் தேதி 15.01.2004. பிரசுரமானால் பரிசு உண்டு.

பணம் செலவாகுமே!

ஜோக்ஸ் கார்னர்



"டாக்டர் என் பையன் கதை சொன்னா தான் தூங்கறான்."

"இதெல்லாம் சகஜம்தானே?"

"இல்லை டாக்டர். அவனே கதை சொல்லிட்டு, அவனே தூங்கறான்!"


- ஆ. பஞ்சலிங்கம், கோவை

"ஏம்பா... ஊசி போடும்போது வலி தெரியாமல் இருக்க நான் பாட்டுப் பாடட்டா..?"

"ஒரே நேரத்தில ரெண்டு வலியையும் தாங்கிக்க முடியாதே டாக்டர்!"

- தஞ்சை எம். ஷண்முகராஜா, பசுபதி கோவில்





"உங்க பையன்தான் ஸ்கூல் ஃபர்ஸ்ட்டாமே?"

"ஆமாம்... பத்து மணி ஸ்கூலுக்கு எட்டு மணிக்கே போயிடுவான்!"


- தா. முகமது இக்பால், தஞ்சாவூர்

"என்ன... நாய் கடித்துவிட்டதா? கடித்த இடத்தை டெட்டால்போட்டு உடனே கழுவிடணும்."

"கோடம்பாக்கத்தில் கடித்தது டாக்டர். அவ்வளவு பெரிய இடத்தையும் டெட்டால் போட்டுக் கழுவ, ஏராளமாகப் பணம் செலவாகுமே!"

- எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி





யானைகளுக்கு ஓய்வு தேவையா?

விவாத மேடை

ப்ரீயாவும் விவேக்கும் நண்பர்கள். ஆனால் நிறைய விஷயங்களில் இருவரும் நேர்மாறான கருத்துகளைக் கொண்டிருப்பார்கள். இதோ நீங்களே பாருங்களேன்.

டென்னிஸ் பேட்டுடன் மெதுவாக வந்து கொண்டிருந்தான் விவேக்.

"விவேக், உன்னை நாலு மணிக்கு விளையாட வரச் சொன்னால் நாலரை மணிக்கு மெதுவாக யானை மாதிரி அசைஞ்சு வர்றே?" என்று லேசான கோபத்தைக் காட்டினாள் ப்ரியா.

"உனக்கும் யானை டாபிக் தொத்திக்கிடுச்சா? தமிழ்நாடே அதைப் பத்திதான் பேசிக்கிட்டு இருக்கு" என்று கிண்டலடித்தான் விவேக்.

"யானைகளை ஓய்வுக்காக காட்டுக்குள் விட்டது தப்புன்னு பாதிப்பேர் சொல்றாங்க. மீதிப் பேர் விட்டதுதான் சரின்னு சொல்றாங்க. நீ என்னடா சொல்றே?"

"வருஷமெல்லாம் மனிதர்களுக்கு வேலை செய்து, சம்பாரிச்சுக் கொடுக்குது யானை. அந்த யானைக்குக் கொஞ்ச நாள் ஓய்வுங்கிறது நல்ல விஷயம் தானே!"

"நாட்டுச் சூழலில் வளர்ந்த யானைகள் காட்டுச் சூழலைக் கண்டு மிரளாதா? சாப்பாட்டு விஷயத்திலிருந்து எல்லாம் பிரச்னைதானே விவேக்?" என்ற ப்ரியா மைதானத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

"அப்ப ஓய்வு கொடுத்து காட்டுக்கு அனுப்பினது தப்புன்னு சொல்றீயா?"

"என்னைப் பொறுத்தவரை ரெண்டுமே தப்புன்னுதான் சொல்வேன். யானை எவ்வளவு பெரிய விலங்கு! அதை அடிமைப்படுத்தி இந்த மனிதன் எப்படி பாடாய் படுத்தறான்! காட்டுப் பிராணிகளை அவற்றின் வாழ் இடத்திலேயே சுதந்திரமா வாழ விடுவதுதான் நல்லதுன்னு எனக்குத் தோணுது. புலி, சிங்கமெல்லாமா வளர்க்கறோம்? அதே மாதிரி யானைகளையும் விட்டுடணும். இதுக்கு ஒரு சட்டம் கொண்டு வந்தால் தான் நல்லது" என்று ப்ரியா நிறுத்தவும் மைதானத்தில் நண்பர்கள் வரவும் சரியாக இருந்தது.



"என்ன ரெண்டு பேருக்கும் வாக்கு வாதமா? அதை நிறுத்திட்டு பிராக்டீஸ்க்கு வாங்க" என்றாள் ஒரு தோழி.

ப்ரியா, விவேக் விவாதத்தைப் பார்த்தீர்களா? உங்களுக்கு எது சரி என்று படுகிறது? யானைகளுக்கு ஓய்வு தேவை, தேவையில்லை, காட்டுக்கு அனுப்புவது நல்லது. இந்த மூன்று கருத்துகளில் உங்களின் கருத்து என்ன? **'விவாத மேடை'** என்று குறிப்பிட்டு பத்து வரிகளுக்குள் உங்கள் கருத்துகளை எழுதி அனுப்புங்கள். சிறந்த கருத்துகள் கோகுலத்தில் பிரசுரமாகும். சன்மானமும் உண்டு.

- தம்பிப்பயல்



குரங்கிடம் கற்ற பாடம்!

கொ.மா.கோதண்டம்

நண்பர்கள் காட்டழகர் கோவிலுக்குப் புறப்பட்டனர். காட்டுவாசிச் சிறுவன் நீலனுக்கும் முதலிலேயே காட்டழகர் கோயில் பாதையில் இருக்குமாறு சொல்லி அனுப்பியிருந்தனர். அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து பஸ்ஸில் செண்பகத்தோப்பு வந்து இறங்கினர். அங்கு காத்திருந்த நீலனுடன் நடந்தனர். ஒற்றையடிப்பாதையில் வனத்தில் மூன்று மைல் நடந்துதான் கோவிலை அடைய வேண்டும். அந்தப் பாதையில் யானைகள் நடமாட்டம் இருக்குமென்பதால் பேசாமல் அமைதியாக நடந்தனர். கோவில் அருகில் வந்ததும்,

"தொட்டியில் குளிக்கவா? ஆற்றில் குளிக்கக் கூட்டிட்டுப் போறீயா?" என்று நீலனிடம் கேட்டனர்.

"கோவில்ல சாமி கும்புட்டு வாங்க. அப்புறமா ஆத்துக்குப் போகலாம்" அவன் சொன்னதும் படிகளில் ஏறி கோவிலுக்குச் சென்றனர்.

நீண்ட தூரப் படிக்கட்டுகளில் ஆங்காங்கே கற்றாழை போலிருக்கும் தானாங்காய்ச்சி மரவிதைகள் விழுந்து கிடந்தன.

ஒவ்வொன்றாக அவற்றை எடுத்து மேலே வீசினார்கள். அவை கீழே வரும்போது சுழன்று கொண்டே வந்தது பார்க்க அழகாக இருக்கவே, அந்த மாணவர்கள் ஆரவாரித்தபடி விளையாடிக் கொண்டே சென்றனர். கண்ணன், கேசவன் இருவருமே ஒரு பையில் அந்த விதைகளைச் சேகரித்தனர். ஊரில் நண்பர்களுக்குத் தருவதற்காக கோவிலுக்குச் சென்று விட்டு, பின்புற வழியாகக் கீழே இறங்கலானார்கள்.

ஓர் இடத்தில் மரக் கிளைகளில் குரங்குகள் கூட்டங் கூட்டமாகக் கீழே குதிப்பதும் கிளைகளில் தாவுவதுமாக விளையாடிக் கொண்டிருந்தன. கேசவன் கைகளைத் தட்டி அவற்றை விரட்டினான்.

"சாமி, பேசாம இருங்க. குரங்குக் கூட்டத்தை விரட்டக் கூடாது. ஒண்ணு சேர்ந்து நம்மை விரட்டிடும்."

எல்லாக் குரங்குகளும் குதிப்பதும், அடித்துக் கொள்வதும், பெரிதாகச் சத்தமிடுவதுமாக ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தன.

"என்ன நீலா?" என்றான் அமுதன்.

"சாமி நமக்குத் தொந்தரவு தர வந்திருக்காங்கன்னு நெனச்சி, அதுக்கு எதிர்ப்பாதான் இப்படி செய்யுது. கொஞ்ச நேரம் நாம சும்மா இருந்தோமுன்னா அதுகளும் பேசாம இருந்துடும்."

"அப்ப நம்மை எதிரியா நினைக்கிதுகளா?" என்று கேட்டான் இளங்கோ.

"அப்படி இல்ல சாமி, பொதுவா குரங்குகளுக்கு எதிரி மலைப்பாம்பு. அது மரக்கிளையில ஒட்டி அமைதியா இருக்கும். குரங்கு வரும்போது படக்குன்னு பாய்ஞ்சி புடிச்சிவிழுங்கிடும். அப்புறம் அங்கங்க தண்ணியில முதலைங்க கரைப் பக்கம் பதுங்கியிருக்கும். குரங்கு தண்ணி குடிக்க வரும்போது லபக்குன்னு புடிச்சிடும். புலியும் சிறுத்தையும் சில சமயங்கள்ல குரங்குகளைப்



புடிச்சிக் கொன்னு போடும். இது தவிர மனுசங்களும் இதுகளுக்குத் தொந்தரவு தருவாங்க. சாமி, பல சமயங்கள்ல விலங்குகளுக்கு எச்சரிக்கை பண்ணி, விலகச் சொல்லி காப்பாத்திடும். இது காட்டுக் காவலாளி சாமி'' - நீலன்.

''அதுகளுக்குள்ள சண்டை போடுமா?''

''ஒரு கூட்டத்துல ஒரு நாட்டாமை ஆண் குரங்கு இருக்கும். அது சொல்படித் தான் எல்லாம் கேட்கும். அதுக்குப் பின்னாலதான் எல்லாக் குரங்கும் போகணும். அந்த நாட்டாமை இடத்தைப் புடிக்கிறதுக்கு ஆண் குரங்குகள் சண்டை போடும். ஜெயிச்ச குரங்கு நாட்டாமையாயிடும், தோத்தது ஓடிப் போயிடும்.''

''அப்ப பெண் குரங்குகள் சண்டை போடாதா?''

''அதிகமா சண்டை போடாது. ஆண் குரங்குகள் சண்டை போடுறப்ப, இது காச் மூச்சுன்னு கத்திக்கிட்டே இருக்கும்.''

அப்போது மாணவர்கள் எதற்காகவோ சிரித்தனர். கூடவே சில குரங்குகள் ஈயென்று பல்லைக் காட்டின.

''சாமி, நாம என்ன செய்யறமோ, இதுகளும் அந்த மாதிரியே செய்யும். சாமி, குரங்குகள் சந்தோசமா இருந்தா நாலு காலோட குதிக்கும். கோபமோ, பயமோ வந்தா பின் கால்களால் நின்னுகிட்டு முன் கால்களால மரக்கிளையைப் புடிச்சி வேகமா ஆட்டும். மரக்கிளை வழியா ஆத்தைக் கடக்கும்போது பெரிய குரங்கு மேல சின்னக் குரங்கு ஏறிடும். திங்கிறது கீழே சிந்திட்டா கையால மண்ணைத் துடைச்சி சாப்பிடும். மண்ணே போகாட்டா, தண்ணியில முக்கி அலசித் தான் திங்கும். குட்டி தப்பு செஞ்சா, தாய் வந்து சப்பு சப்புன்னு அடிக்கும்.''



சிறிது நேரத்தில் மரக் கிளைகளில் இருந்த குரங்குக் கூட்டம் போய் விட்டிருந்தன.

''இதையெல்லாம் பார்த்துட்டுதான் குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்னு சொல்றாங்களோ?''

''அது இந்தக் குரங்கே இல்லப்பா.



பெரிய வகை குரங்குகளைத் தான் அப்படி சொன்னாங்க.''

''சாமி, குரங்குகள் கிட்ட நாம அன்பா பழகினா இதுவும் நாய் மாதிரி நம்மள சுத்தியே வரும். மடியில படுத்துக்கும்.''

''கடிச்சி, பிராண்டியெல்லாம் வச்சிடாதா?''

''மனுசங்க அதுக்குத் தொந்தரவு தராம இருந்தா அது எதுவும் செய்யாது.'' அதற்குள் அவர்கள் இறங்கி ஆற்றுக்கு வந்து விட்டனர். ஆற்றில் குதித்து விளையாடினார்கள். குளித்து முடித்ததும் கொண்டு வந்திருந்த உணவுப் பொட்டலங்களைப் பிரித்துச் சாப்பிட்டார்கள்.

நீலனிடம் கண்ணன் ஏதோ சொன்னான்.

''போகும்போது பார்க்கலாம் சாமி'' என்றான் அவன். அவர்கள் செண்பகத் தோப்பை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

''சாமி வாதாங் கொட்டையை உடைச்சி பருப்பு சாப்புடுறீங்களா?''

''எங்கப்பா இருக்கு?'' நீலன் ஒரு இடத்திற்குக் கூட்டிச் சென்றான். வாதா மரத்தடியில் வாதாம் பழங்கள் கிடந்தன. மாணவர்கள் அவற்றைச் சேகரித்து பாறையில் வைத்து கல்லால் அடித்து ஒவ்வொன்றாக உடைத்து பருப்புகளை உண்டனர்.

''நீலா, இந்த வாதாங் கொட்டையை குரங்குகள் என்ன செய்யும்?''

''நாம எப்படி பாறையில வச்சி உடைச்சோமோ, அதுபோலவே குரங்குகளும் கல்லால கொட்டையை உடைச்சிதான் பருப்பைத் தின்னும். சரி சாமி, போகலாம். அந்தக் கிணத்துப் பக்கம் தண்ணீரைக் குடிச்சிட்டு நீங்க கிளம்புங்க. நான் இப்படியே அய்யனார் கோவிலுக்கு நடந்து போயிடுவேன்.''

அங்கே ஒரு கிணற்றில் காட்டுக்கு வருகிறவர்கள் தண்ணீர் குடிப்பதற்கு ஒரு மர உருளை கட்டி, வாளியில் கயிறு கட்டி போட்டிருந்தனர்.

கேசவன் அருகில் சென்றான் நீலன்.

''சாமி, இந்தக் குரங்கு இருக்கே, எப்படி வீடு கட்டும் தெரியுமா? ஒரு மரக்கிளையில இலைகளோட பல கிளைகளை இழுத்துக் கட்டி கூடு மாதிரி செய்யும். இந்த வீட்டுல தொடர்ந்து இருக்காது. சில நாள்லே வேற வீடு கட்டும். இதுல சலிக்கவே சலிக்காது சாமி.''

''ஆமா, இது ஏன் எங்கிட்ட மட்டும் சொல்றே?'' என்றான் கேசவன்.

ஒரு பாறையில் எறும்புகள் சாரை சாரையாகப் போய்க் கொண்டிருந்தன.

''இங்க பார். நீங்க போனாக்கூட இந்தப் பாதை தேயாது. ஆனா எறும்புகள் தொடர்ந்து போனதால இந்தப் பாறையில தேய்மானம் தெரியுது பாருங்க.''

அவர்கள் அந்தக் கிணற்றுப் பக்கம் வந்து விட்டனர். தண்ணீர் இறைத்து முடித்தனர்.

''சாமி, இந்த மர உருளையைப் பாருங்க, இது கருங்காலி மரக்கட்டை. இதை உடைக்க முடியாது. இரும்புக் கோடாலியால ஓங்கி அடிச்சாக்கூட கோடாலி எகிறுமே தவிர, கட்டை உடையாது. அவ்வளவு பலம் இந்தக் கட்டைக்கி. ஆனா தொடர்ந்து கயிறோட தண்ணி இறைக்கிறதால இந்த மரக் கட்டை தேய்ந்து, வாய்க்கா கணக்கா பள்ளம் விழுந்துருச்சு பார்த்தீங்களா?''

''ஆமா, இதெல்லாம் ஏன் எங்கிட்டவே சொல்றே?''

''சாமி, இன்னக்கி இங்க வந்ததே உங்ககூட பேசுறதுக்காகத்தான்.''

''என்ன சொல்றே?''

''சாமி, பள்ளிக்கூடத்துல நீங்க சரியா படிக்காம மார்க்குக் குறைச்சு வாங்குறீ களாம். ஏன்னு கேட்டா மண்டையில ஏற மாட்டேங்குது. நான் என்ன செய்வேன்னு சொல்றீங்களாம்.''

''நல்லா சொல்லுப்பா'' என்றான் கண்ணன்.


''சாமி, குரங்குகள் எத்தனை தடவை வேணா சலிக்காம வீடு கட்டுறது இல்ல, அது மாதிரி நாமளும் மறுபடியும் மறு படியும் சலிக்காம படிச்சோமுன்னா எல் லாப் பாடமும் லேசா புரியும். எப்படி எறும் புகள் போயி போயி பாறையே தேயுதோ, அது மாதிரி திருப்பித் திருப்பிப் படிச்சா கல்லா இருந்த மனசுகூட லேசாயிரும், எப்படி கயிறு பட்டுப்பட்டு கருங்காலி மரப்பட்டை தேயுதோ, அப்படியே நம்ம அசட்டுத்தனமும் அறியாமையும் படிக்க, படிக்கத் தேஞ்சிடும் சாமி. அதனால இனிமே நல்லா படிங்க சாமி.''

''ஏம்பா நீலா, இன்னிக்கு நீ சொன்ன விஷயம் கேசவனுக்கு மட்டுமில்ல, எங்க எல்லாத்துக்கும்தான்'' என்றான் அமுதன்.

''நான் இதை அப்படியே கட்டுரையா எழுதப் போறேன்'' இது இளங்கோ.


''இனிமேல் நான் நல்லாப் படிப்பேன் நீலா'' என்றான் கேசவன்.

''நன்றிப்பா. அதோ பஸ் வருது. நாங்க வர்றோம்'' என்ற கண்ணனைத் தொடர்ந்து மற்றவர்களும் நீலனிடம் விடை பெற்று பஸ்ஸை நோக்கிச் சென்றனர்.



கி.மு. 45ம் ஆண்டுதான் ஏப்ரல் மாதம் ஆண்டின் நான்காவது மாதமாக ஆக்கப்பட்டது. 'ஜூலியன் கிரகோரியன்' காலண்டரில்தான் இப்படி மாற்றம் அமைந்தது. இது ஜூலியஸ் சீசரின் காலத்தில் ஏற்பட்டதாகும்.

வல்லாரை மாத்திரையைச் சாப்பிடலாமா?



ஹலோ சுகமா?

டாக்டர் கு. கணேசன்

● எம். வினோத், சங்கரன்கோவில்

? சாப்பாட்டில் கறிவேப்பிலை இருந்தால் அதை உண்ணாமல் கீழே போட்டு விடுகிறோம். கறிவேப்பிலையைச் சாப்பிடக் கூடாதா டாக்டர்?

! கறிவேப்பிலையைத் தாராளமாகச் சாப்பிடலாம் வினோத். கறிவேப்பிலையில் பீட்டாகரோட்டீன் என்ற சத்து உள்ளது. இது ரத்தத்தை அடைந்ததும் 'வைட்டமின்-ஏ'வாக மாறி நமக்குப் பலன்தரும். வைட்டமின்-ஏ கண்களுக்கும் தோலுக்கும் நல்லது என்பதை நீ அறிவாயல்லவா?

● தி.சே. அறிவழகன், திருப்புலிவனம்

? உடற்பயிற்சி செய்வதால் கொலஸ்ட்ரால் அளவும் உடல் எடையும் எப்படி குறைகிறது டாக்டர்?

! நடைப்பயிற்சி, மெல்லோட்டம் போன்ற உடற்பயிற்சிகள் கொலஸ்ட்ராலைக் குறைக்க உதவுகின்றன. உடற்பயிற்சி செய்யும்போது உடலில் அதிகப்படியாக உள்ள கொழுப்பிலிருந்து சக்தி செலவாகிறது. இதனால் கொழுப்பு குறைகிறது. கொழுப்பிலிருந்துதான் கொலஸ்ட்ரால் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆகையால், கொழுப்பு குறையும் போது கொலஸ்ட்ராலும் குறைகிறது. கொழுப்பும் கொலஸ்ட்ராலும் குறையக் குறைய உடல் எடையும் குறையும்.

● பா. ஷண்முகப்பிரியா, திண்டுக்கல்

? வல்லாரை மாத்திரை அனைவரும் சாப்பிடலாமா? அல்லது ஞாபக சக்தி குறைந்தவர்கள் மட்டும்தான் சாப்பிட வேண்டுமா?

! வல்லாரையில் மூளைக்குப் புத்துணர்ச்சி தரும் வைட்டமின்களும் தாதுக்களும் உள்ளன. எனவே, வல்லாரை மாத்திரையை அனைவரும் சாப்பிடலாம்.

● ஆ. குமரேசன், சென்னை - 12

? சர்க்கரை நோயைத் தடுக்க முடியுமா டாக்டர்?

! முயற்சித் திருவினையாக்கும் குமரேசன். சர்க்கரை நோய் பெரும்பாலும் பரம்பரை காரணமாகத்தான் வருகிறது. பெற்றோருக்குச் சர்க்கரை நோய் இருந்தால் அவர்களின் குழந்தைகளுக்கும் இந்த நோய் வரும் வாய்ப்பு அதிகம். இந்தக் குழந்தைகள் தங்கள் உடல் எடையைச் சீராக வைத்துக்கொள்ள வேண்டும். பருமனாக விடக்கூடாது. அதிகக் கொழுப்புள்ள உணவுகளைச் சாப்பிடக் கூடாது. நொறுக்குத் தீனிகளை ஒதுக்க வேண்டும். தினமும் அரை மணி நேரம் விளையாட வேண்டும். அல்லது உடற்பயிற்சி செய்ய வேண்டும். இனிப்பு உணவுகளைக் குறைந்த அளவில் உண்ண வேண்டும். நார்ச்சத்து நிறைந்த காய்கறிகளையும் கீரைகளையும் அதிகமாகச் சாப்பிட வேண்டும்.






மன உளைச்சலைத் தவிர்க்க வேண்டும். தியானம் மற்றும் யோகாசனப் பயிற்சிகளைச் சிறுவயதிலிருந்தே பழக்கப்படுத்திக் கொள்வது நல்லது. இம்மாதிரி நம் வாழ்க்கை முறைகளில் சில மாறுதல்களைச் செய்து கொண்டால் சர்க்கரை நோயைத் தள்ளிப்போடலாம். ஏன், தடுக்கவும் முடியும்.

● நா. அதியமான், தூத்துக்குடி

? விஷப்பாம்பு கடித்தால் என்ன அறிகுறிகள் தோன்றும் டாக்டர்?

! பாம்பு கடித்த இடத்தில் வலி ஏற்படும். வீக்கம் காணப்படும். கடிபட்ட இடம் நிறம் மாறும். கடிபட்ட நபருக்கு வயிற்றுவலி வரும். பார்வை குறையும். பேச்சு குழறும். மூச்சுத்திணறல் உண்டாகும். மயக்கம் வரும். இவற்றில் ஒன்றோ, பலவோ காணப்பட்டால் அது விஷப்பாம்பு கடித்ததிற்கான அறிகுறி என் எடுத்துக் கொண்டு உடனடியாக மருத்துவச் சிகிச்சையைப் பெற வேண்டும். அப்போதுதான் உயிர் காக்க இயலும்.

புதிர் இங்கே! விடை கீழே!



1. இயல்பான ரத்த அழுத்தம் எவ்வளவு?
   அ. 90/70 மி.மீ. பாதரச அளவு
   ஆ. 110/80 மி.மீ. பாதரச அளவு
   இ. 120/80 மி.மீ. பாதரச அளவு

2. மனிதனுக்கு ரத்த சோகையை உண்டாக்கும் குடல்புழு எது?
   அ. கொக்கிப்புழு
   ஆ. நாடாப்புழு
   இ. வட்டப்புழு



3. இதயத்தை மூடியிருக்கும் உறையின் பெயர் என்ன?
   அ. புளூரா
   ஆ. பெரிகார்டியம்
   இ. எண்டோகார்டியம்




4. அட்ரீனல் சுரப்பிகள் எங்குள்ளன?
   அ. கழுத்தின் முன்பகுதியில்
   ஆ. மூளைக்குள்
   இ. சிறுநீரகங்களின் மேல்














5. உண்ட உணவு செரித்த பிறகு அடுத்த உணவை உண்போருக்கு மருந்து தேவையில்லை என்று கூறியவர் யார்?
   அ. பாரதியார்
   ஆ. பாரதிதாசன்
   இ. திருவள்ளுவர்


விடைகள்!
1. இ 2. அ 3. ஆ 4. இ 5. இ

கழுகும் கண்ணனும்


 கழுகு  மின்சாரக் கம்பி  கண்ணன்  கூடு

 வயல்  கண்  மாலை  முட்டை

 தன்  ல் 11  களை இட்டது. இரை தேடி விட்டு  யில்  க்குத் திரும்பும்.  ன்  மிகவும் சக்தி வாய்ந்தது. ஒரு சிறிய  கூட இதன்  களில் இருந்து தப்ப முடியாது.  சிறிய பிராணிகளின் எதிரி. ஒருநாள்  இரை தேடி காலியான  வெளிக்குச் சென்றது. அங்கு கிடந்த  யை அது கவனிக்கவில்லை.  என்ற சிறுவன்  வெளிக்குள் நுழைந்தான். தன்  மூலம்  ன் சத்தத்தைக் கேட்டான்.  உடனே  இருக்கும் இடம் நோக்கிச் சென்றான்.  யை எடுத்து விட்டான்.  நிம்மதியடைந்தது.  ன் உதவியால்  மகிழ்ச்சியுடன் தன்  க்குத் திரும்பியது.  களிலிருந்து 8 குஞ்சுகள் வெளி வந்தன.  க்கும்  க்கும் இது சிறந்த அனுபவமாக அமைந்தது.



குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம் :

1. இராமனின் தந்தை (5)
5. குரங்குக்கு இது நீளம் (2)
7. வதந்தி (3)
14. தேர் (3)

வலமிருந்து இடம் :


3. சடுகுடு விளையாட்டு (3)
6. பாட்டு (3)
10. வேலி ஓரங்களில் திரியும் இப்பிராணி பச்சோந்திக்கு உறவு (3)
11. .... க்கு முந்து, படைக்குப் பிந்து என்பார்கள் (3)
12. பொருட்களை எடுத்துச் செல்ல இது உதவும் (2)
15. தேவலோகத்துக்கு அதிபதி (5)

மேலிருந்து கீழ் :

1. ஆண் யானைக்கு இது உண்டு (4)
2. உயிர்த்திரவம் (4)
3. குளிரிலிருந்து நம்மைக் காக்கக் கூடியது (4)
8. அழகி (2)
9. அந்தக் காலத்தில் ஆறு பைசா என்பது ஒரு .... (2)
10. ஓடுகின்ற தண்ணீர் (2)
11. கரிசல் மண்ணில் விளையக் கூடியது. நமக்கு இன்றியமையாதது (4)
13. தேனீயின் அடைகளில் இருக்கும் (மலர்களிலிருப்பது) பொருள் (2)

கீழிருந்து மேல் :

4. நீண்ட விடுமுறைக்குப் பின் பள்ளி திறக்கும் மாதம் .... (2)
7. கரும்பு, மூங்கில் போன்றவை .... இனத் தாவரங்கள் (2)
14. பர்மாவின் தலைநகர் (4)
15. சுவைகளில் ஒன்று: எல்லோரும் விரும்பக் கூடியது (4)



- கி. மகிழ்மாறன், பத்தாம் வகுப்பு, திருநின்றவூர்

விடை : 64ஆம் பக்கம்

சேலம் ஸ்பெஷல்

சித்தர் கோயில்

சேலம் மாநகருக்கு மிக அருகில் அமைந்துள்ளதும், 'அமாவாசைக் கோயில்' என்று எல்லோராலும் அழைக்கப்படுவது சித்தேசுவர சுவாமி கோயில். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் 3 வகை சிறப்புகளையும் பெற்று திகழ்கிறது.

ஔவைக்கு அதியமான் அளித்த கரு நெல்லிக்கனி விளைந்தது இங்குதான். இத்திருகோயில் அமைந்துள்ள கஞ்சமலை கனிவளம் மிகுந்தது.

ஏற்காடு

சேலம் மாவட்டத்தில், சேர்வராயன் மலைகளில் அமைந்துள்ள மலைவாழ் ஓய்விடம் 'ஏற்காடு'. இது 'ஏழைகளின் ஊட்டி' என அழைக்கப்படும். இங்கு காண வேண்டிய இடங்கள்: ஏரி, அண்ணா பூங்கா, கலைக்கூடம், லேடீஸ் சீட், பகோடா பாயிண்ட், கரடிக் குகை மற்றும் சேர்வராயன் கோயில் முதலியன.

அண்ணா பூங்கா

சேலம் மாநகர மக்களுக்குப் பொழுது போக்காக அமைந்துள்ள ஒரே இடம் ஓமலூர் ரோட்டிலுள்ள அண்ணா பூங்காவாகும்.

சேலத்து மாம்பழம்


'சேலம் மாம்பழம்' என்றால் அதற்குத் தனி ருசிதான். சேலத்து மாம்பழம் என்றால் அவ்வளவு சிறப்பு வாய்ந்தது. பார்ப்பதற்குக் கவர்ச்சியான நிறத்துடனும், அழகானதாகவும், உண்பதற்கு ருசியுடனும் இருக்கும்.

- எம். லலித்குமார், ஆறாம் வகுப்பு, ஸ்ரீ சாரதா பாலமந்திர் பள்ளி, சேலம்





• ஏற்காடு ஏரி
படம் : இளவரசு



ஜான் அளித்த தானம்!

ஜானும் அவர் மனைவி ஜனாபாயும் இருப்பதைக் கொண்டு இன்பமாக வாழ்ந்தனர். ஒருநாள் ஜனாபாய் தன் கணவரிடம் ''நம்மிடம் இரண்டு எருமைகள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்றை விற்றுவிடலாம் என நினைக்கிறேன். ஒரு மாட்டின் பால் நம் குடும்பத்திற்குப் போதுமானது. வயதாகிவிட்டதால் என்னால் இரண்டு மாடுகளை வைத்துப் பராமரிக்க இயலவில்லை'' என்றார்.

''நல்லது. நாளைக்கு ஒரு எருமையைச் சந்தைக்கு ஓட்டிச் சென்று விற்று விடுகிறேன்'' என்றார் ஜான்.

மறுநாள் எருமையை ஓட்டிக் கொண்டு ஜான் புறப்பட்டார். சந்தை கூடும் இடம் சற்றுத் தொலைவிலிருந்தது. வழியில் குதிரையில் வந்து கொண்டிருந்த ஒருவனை ஜான் சந்தித்தார்.

''ஜான், ஏது இவ்வளவு அதிகாலையிலேயே புறப்பட்டு விட்டீர்கள்?'' என விசாரித்தான்.

''இந்த எருமையைச் சந்தையில் விற்கப் போய்க் கொண்டிருக்கிறேன்'' என்றான் ஜான்.

எருமை பார்ப்பதற்குத் தளதளவென்று நன்றாக இருந்தது. அந்த மனிதன் ''நீங்கள் எதற்கு இதை விற்க வேண்டும்? நீங்கள் விரும்பினால் இக் குதிரையை எருமைக்குப் பதிலாகத் தருகிறேன்'' என்றான்.

குதிரை அதிகத் தொந்தரவு தராத மிருகம். குழந்தைகள் சந்தோஷமாக இதன்மீது சவாரி செய்யலாம் என நினைத்த ஜான், ஒப்புக் கொண்டார். ஜான் குதிரையின் மீது ஏறி சற்றுத் தூரம் சென்றபின்னர் தான், அந்தக் குதிரைக்கு ஒரு கண் தெரியாது என்பது புரிந்தது. இதற்குள் எதிரே ஒருவன் ஆட்டை ஓட்டிக் கொண்டு வந்தான்.

''ஜான் எங்கே போகிறீர்கள்?'' என விசாரித்தான். ஜானும் விளக்கினார்.

''ஜான் இந்தக் குதிரையைவிட எனது ஆடு எவ்வளவோ மேல்; நீங்கள் விரும்பினால் குதிரையைக் கொடுத்துவிட்டு ஆட்டை எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றான் ஆட்டிடையன். சற்று நேரத்திற்குப் பிறகுதான் அந்த ஆடு சீக்குப் பிடித்தது எனத் தெரிந்தது. ஜான் சந்தையை நெருங்குவதற்கு முன், ஒரு கோழிக்காரனைச் சந்தித்தான். எல்லாம் முன்போலவே நடந்தன. ஜான் ஆட்டைக் கொடுத்துவிட்டுக் கோழியை வாங்கிக் கொண்டு சந்தைக்குள் செல்லும்போது நண்பகலாகி விட்டது.

ஒரே பசி. கையில் காசு இல்லை.


மிகுந்த சிரமப்பட்டு அந்தக் கோழியை ஒரு ரூபாய்க்கு விற்றார். அந்த ஒரு ரூபாய்க்குக் கிடைத்த உணவை வாங்கிக் கொண்டு, அமர்ந்தார். ஒரு கவளத்தைக் கையில் எடுத்ததும், அழுக்கும் கந்தலுமாய் உடையணிந்த ஒருவன் அவர் முன்னே வந்து நின்றான். அவனைப் பார்த்தால் பல

சேலம் ஸ்பெஷல்

தாரமங்கலம்

'இந்த இரண்டு ஊர்களின் கோவில்களில் உள்ள சிற்பங்களைப் போல இனி எங்களால் செதுக்க முடியாது' என சிற்பிகளால் சொல்லப்பட்ட இடங்கள்தான் தாரமங்கலமும், தாடிக் கொம்பும்.

அதில், சேலம் மாவட்டத்தில் உள்ள தாரமங்கலம் கைலாய நாதர் ஆலயத்தில், காண்போரை ஆச்சரியத்தில் ஆழ்த்தி, பார்க்கப்



• கல் தாமரை



நாட்களாகச் சாப்பிடாதவன் போல் தோன்றியது.

''ஐயா! மிகவும் பசிக்கிறது. இந்த ஏழைக்கு ஏதேனும் உணவு தாருங்கள்'' என்று கெஞ்சினான்.

அந்த ஏழையின் நிலையைக் கண்டதும் ஜானின் மனம் இரக்கத்தினால் நிறைந்தது. தன் முன்னே விரித்து வைத்திருந்த உணவுப் பொட்டலத்தை எடுத்து, அவன் கையில் கொடுத்துவிட்டு, வீட்டை நோக்கிப் புறப்பட்டார்.

ஜான் நடந்த நிகழ்ச்சிகளை மனைவியிடம் கூறினார்.

''பசித்தவனுக்கு உணவளிப்பது எவ்வளவு சிறந்த செயல்! சரி, எழுந்து சாப்பிட வாருங்கள்'' என்றார் ஜானின் மனைவி.

ஜான், மனைவியின் இதமான சொற்களைக் கேட்டு மகிழ்ந்தார்.

மறுநாள் பொழுது புலர்ந்தது. ஜான் எழுந்து வாயிற் கதவைத் திறந்தார். வியப்பினால் அவர் விழிகள் மலர்ந்தன. மனைவியைக் கூவி அழைத்தார். அவரது மனைவி திகைத்துப்போனார்.

முற்றத்தில் கம்பீரமான குதிரை, ஆட்டுக்கிடா, கோழி எல்லாம் நின்று கொண்டிருந்தன. இவற்றுடன் ஓர் இலையின் மீது ஒரு பொற்காசும் வைக்கப்பட்டிருந்தது.

'இவையெல்லாம் எப்படி வந்தன என்று தெரிந்ததா? நேற்று நீங்கள் பசித்த ஏழை ஒருவனுக்கு உணவளித்தீர்களே! அதன் பலன்' என்று எழுதியிருந்தது.

- ஏ. மரிய அந்தோ சீலா,
ஒன்பதாம் வகுப்பு,
செயின்ட் மேரீஸ் மேல்நிலைப் பள்ளி,
என்.மங்கலம், சேலம்.

பார்க்கப் பரவசமூட்டும் சிற்பங்களும், கலை நயங்களும் ஏராளம்.

முன் கோபுர வாசலில் நீண்ட நெடிய கதவுகளின் ஒவ்வொன்றிலும் அறுபது குமிழ்கள் உள்ளன. அது ஒவ்வொன்றும் ஒவ்வொரு வடிவில் இருப்பதுதான் சிறப்பம்சம்.


கோபுரத்தின் கீழ் நடையில் நீண்ட இரண்டு பவளக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. அது குளிர்காலமானாலும், கோடைக் காலமானாலும் குளிர்ச்சியாகவே இருக்கும்.

கோபுரத்தின் உள்ளே புகுந்து திரும்பிப் பார்த்தால் அந்தக் கோபுரத்தை இரண்டு யானைகள், குதிரைகள், ஆட்கள் என, தேர் போல் பாவித்து இழுத்து வருவது, சிற்பிகளின் கற்பனையைக் காட்டுகிறது.

ஒரே கல்லில் செதுக்கப்பட்ட கல் வளையங்கள், கல் தாமரை மலர் மொக்கினைச் சுற்றியுள்ள வளையம் சுற்றுவது, (ஒரே கல்லில் செதுக்கப்பட்டது) யானையின் வாயில் உள்ள உருண்டையான சுழலும் கல், ஒரு எறும்பு மட்டுமே புகுந்து வரக் கூடிய சிறிய துளை என மனதைக் கவரும் கலையம்சங்கள் பல உள்ளன.

- தா.ஆ. அருண்ராஜ்,
பன்னிரண்டாம் வகுப்பு,
செ.ம. மேல்நிலைப்பள்ளி,
தாரமங்கலம்.

சேலம் ஸ்பெஷல்



"ஏண்டா எதைக் கேட்டாலும் எல்லாம் தெரியும், எல்லாம் தெரியும்ன்னு சொல்லறியே எப்படிடா?"

"எனக்குத்தான் ரெண்டு கண்ணும் நல்லாத் தெரியுமே!"

- ராமன், ஐந்தாம் வகுப்பு,
விவேகானந்தா பாலமந்திர் மெட்ரிக் பள்ளி,
ஆட்டையாம்பட்டி, சேலம்.

சேலம் சிரிப்பு!

"மூன்று பேர் மொட்டை அடித்துக் கொண்டு தண்ணீரில் முழ்குகிறார்கள். இரண்டு பேர் தண்ணீரில் மூழ்கி விடுகின்றனர். ஆனால் ஒருவன் மட்டும் மூழ்கவில்லை. ஏன்?"

"அவன்தான் மரமண்டை ஆச்சே!"

- ச. சுரேந்தர், ஆறாம் வகுப்பு,
விவேகானந்தா பாலமந்திர் மெட்ரிக்
பள்ளி, ஆட்டையாம்பட்டி, சேலம்.



"ஏன் நீங்க மேலே பார்க்கறீங்க?"

"நீங்கதானே ஊசி போட்டா காய்ச்சல் பறந்து போய் விடும்ன்னு சொன்னீங்க. அதான் பார்க்குறேன்!"

- செ. யுவராஜ், எட்டாம் வகுப்பு,
விவேகானந்தா பாலமந்திர் மெட்ரிக் பள்ளி,
ஆட்டையாம்பட்டி, சேலம்.



"முதல் முதல்லே நான் மோட்டார் பைக் வாங்கி ஓட்டக் கத்துக்கிட்ட உடனே எங்கே போனேன் சொல்லு...?"


"கோவில், குளம்ன்னு சாமி கும்பிட எங்கேயாவது போயிருப்பே."

"அதுதான் இல்லை, முதல்ல பெரிய ஆஸ்பத்திரிக்குத்தான் போனேன்."

- எஸ். வினோத், ஐந்தாம் வகுப்பு,
விவேகானந்தா பாலமந்திர் மெட்ரிக்
பள்ளி, ஆட்டையாம்பட்டி,
சேலம்.



ஓவியக் கூடம்




சேலம் ஸ்பெஷல்



வீ. கார்த்திகா,
ஆசிரியை இணைப்புப் பள்ளி,
இடைப்பாடி, சேலம்



சு. கீர்த்தனா,
ஆறாம் வகுப்பு,
விவேகானந்தா
பாலமந்திர்
மெட்ரிகுலேசன் பள்ளி,
ஆட்டையாம்பட்டி,
சேலம்



ச. பிரியதர்சினி,
நான்காம்
வகுப்பு,
விவேகானந்தா
பாலமந்திர்
மெட்ரிகுலேசன்
பள்ளி,
ஆட்டையாம்பட்டி,
சேலம்




செ.பிரபு,
ஏழாம் வகுப்பு,
விவேகானந்தா பாலமந்திர்
மெட்ரிக் பள்ளி,
ஆட்டையாம்பட்டி, சேலம்


மு. தமிழ்ச் செல்வன்,
இரண்டாம் வகுப்பு,
விவேகானந்தா
பாலமந்திர்
மெட்ரிகுலேசன் பள்ளி,
ஆட்டையாம்பட்டி,
சேலம்



ரா.வருணாஸ்ரீ, மூன்றாம்
வகுப்பு, விவேகானந்தா
பாலமந்திர்
மெட்ரிகுலேசன் பள்ளி,
ஆட்டையாம்பட்டி,
சேலம்



கோ. ருக்மணி,
ஒன்பதாம் வகுப்பு,
விவேகானந்தா
பாலமந்திர்
மெட்ரிகுலேசன்
பள்ளி,
ஆட்டையாம்பட்டி,
சேலம்





பண்பில் சிறந்தது...

மலரில் சிறந்தது ரோஜா
சிகரத்தில் சிறந்தது எவரெஸ்ட்
கடலில் சிறந்தது அலை
கனியில் சிறந்தது மா
அழகில் சிறந்தது மயில்
அன்பில் சிறந்தது பாசம்
பண்பில் சிறந்தது ஈகை
பருவத்தில் சிறந்தது வசந்தம்
குரலில் சிறந்தது குயில்
குணத்தில் சிறந்தது இரக்கம்
தானத்தில் சிறந்தது நிதானம்

- சி. வள்ளி, ஒன்பதாம் வகுப்பு, புனித மரியன்னை மேல் நிலைப்பள்ளி, அ.நா. மங்கலம்.

வெள்ளிக் கொலுசுகள், அரக்கு, ஜவ்வரிசி ஆகியவற்றைத் தயாரிப்பதில் சேலம் மாவட்டமே முதன்மையான மாவட்ட மாகும்!

- பி. சுசீலா, உடுமலை.

அனுமந்த விநாயகர்

விநாயகரும், அனுமனும் இணைந்து தோன்றும் அனுமந்த விநாயகர், சேலம் கந்தாசிரமத்தில் காணப் பெறுகிறார்.

- நெ. இராமன், சென்னை

சேலத்தில் மூன்று, நான்கு, ஐந்து ரோடு என எண்களின் பெயரில் பாதைகள் உள்ளன.

மேட்டூர் அணையின் நீளம் 5930 அடி. உயரம் 214 அடி. இதில் அதிக பட்சமாக 120 அடி நீரைத் தேக்கி வைக் கலாம்.


- த. நந்தினி பிரியா, பதினோராம் வகுப்பு, சாரதா மகளிர் மெட்ரிக் பள்ளி, சேலம்.

எருமைப்பட்டி, கோழிக்காட்டனூர், கீரிப்பட்டி, வெள்ளாட்டுக்காரனூர், மாட் டுக்காரனூர், ஆணைப்பட்டி, குதிரைக்கார னூர், புலியம்பட்டி, காக்காப்பாளையம், யானைப்பாதை, காடைப்பட்டி, பல்லிப்பட்டி, சிங்கம்பட்டி, எலியனூர். இவையெல்லாம் என்னவென்று தெரிகிறதா? ஆம்! சேலம் மாவட்டத்திலுள்ள சில கிராமங்களின் பெயர்கள்தான்!

- எம். வினோத், சங்கரன்கோவில்.

சேலம் மாவட்டம்

எல்லைகள்: வடக்கே தர்மபுரி, தெற்கே நாமக்கல், மேற்கே திண்டுக் கல், கிழக்கே விழுப்புரத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.



* கைலாயநாதர் ஆலய

தொழில் வளம்: இரசாயனப் பொருட்கள் தயா ரித்தல், இரும்புக்கு அலுமினிய முலாம் பூசுதல், சந்தன எண்ணெய் தயாரிப்பு, வனஸ்பதி, சோப்பு தயாரித்தல், ஜவ்வரிசி தயாரிப்பு, சேலம் எவர்சில்வர் தொழிற்சாலை, கைத்தறி நெசவு, சர்க்கரை ஆலைகள், மேட்டூர் நீர் மின் உற்பத்தி நிலையம்.

விவசாயம் : நெல், கரும்பு, மரவள்ளிக்

பொது அறிவு

உலகிலேயே கொசுக்களே இல்லாத நாடு - ஃபிரான்ஸ்.

உலகில் மொத்தம் பேசப்படும் மொழிகள் - 2792 மொழிகள்.

உலகிலேயே மீன்களே இல்லாத ஆறு - ஜோர்டான் நதி.

உலகிலேயே உயரமான சிகரம் - எவரெஸ்ட். இதன் உயரம் 8848 மீட்டர்கள்.

மாத்திரைகளே இல்லாத மொழி - ஆங்கில மொழி.

- ஐ. ஜெனட்நிஷாராஜம், எட்டாம் வகுப்பு, செயின்ட் மேரிஸ் மேல்நிலைப்பள்ளி, என். மங்கலம், சேலம் மாவட்டம்



கிழங்கு, சோளம், மாம்பழம், கம்பு, நிலக்கடலை, ராகி, பருத்தி விளைகின்றன.

அணைகள் : மேட்டூர் அணை, வசிஷ்டா நதி அணை.

வழிபாடு, சுற்றுலாத் தளங்கள்: கோட்டை மாரியம்மன் கோயில், ஏற்காடு, மேட்டூர் அணை, கந்தாஸ்ரமம், உருக்காலை.

- சு. கௌதம், எட்டாம் வகுப்பு, விவேகானந்தா, பாலமந்திர் பள்ளி, சேலம்

S - Steel
A - Aluminium
L - Looms
E - Electricity
M - Mango

இவ்விதம் சேலத்தில் பிரபலமாக உள்ளவற்றின் பெயரை உள்ளடக்கி சேலம் என்ற பெயர் அமைந்துள்ளது.

ஆத்தூர்

சேலத்திலிருந்து 51 கிலோமீட்டர் கிழக்கே இந்த ஊர் உள்ளது. பெரிய வர்த்தகத்தலம். வசிஷ்டா என்ற நதியின் கரையில் இந்த ஊர் உள்ளது. பரகேசரி வர்மன் ஆட்சிக் காலக் கல்வெட்டு ஒன்றில் இந்த ஊரின் பெயர் ஆற்றூர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஊரில் புராதனச் சிவாலயம் ஒன்று உள்ளது. காய நிர்மலேசுவரன் என்பது இந்தச் சிவனின் பெயர்.

- எஸ். சிந்துபைரவி, எட்டாம் வகுப்பு, அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி, ஆத்தூர்.


மலைகள் சூழ்ந்த மாவட்டம்!

சேர்வராயன் மலை, கொல்லி மலை, கல்வராயன் மலை, பச்சை மலை, ஏற்காடு மலை ஆகியவை இம் மாவட்டத்தின் மலைப் பகுதிகள். மலைப் பகுதிகள் அதிகமாக இருப்பதால் சேலம் மாவட்டத்தில் எல்லா மாதமும் ஏதாவது ஒரு பழ வகைகள் மலிவாகக் கிடைக்கின்றன.

சேலம் ராசிபுரம் பாதையில் இருக்கும் பொய் மான் கரடு குறிப்பிடத்தக்கது. தூர நின்று பார்த்தால் மலையிடுக்கில் கொம்பு மானொன்று நிற்பது போலிருக்கும். நெருங்கி போனால் மறைந்து விடும்.

- எம். ஜெகதீஸ் சந்தர், பன்னிரண்டாம் வகுப்பு, அமலா மேல்நிலைப் பள்ளி, எடப்பாடி.





அமிர்தமும் விஷமும்

அத்திரி முனிவரின் புத்திரரான துர்வாசர் மிகுந்த கோபக்காரர். அவர் ஒரு முறை ஒரு வில்வ மாலையைச் சிவலிங்கத்துக்கு அணிவித்து எடுத்துக் கொண்டு தேவலோகத்துக்கு வந்தார்.

அப்போது இந்திரன் ஐராவதம் என்ற தன் யானையின் மேல் பவனி வந்து கொண்டிருந்தான். துர்வாசர் அவனை வாழ்த்தி அவனிடம் வில்வ மாலையைக் கொடுத்தார்.

அவன் அலட்சியத்துடன் அதை வாங்கி, யானையின் மத்தகத்தில் போட்டான். யானை அந்த மாலையைத் தும்பிக்கையால் எடுத்து வீசி எறிந்தது.

துர்வாசருக்கு வந்த கோபம் இவ்வளவு அவ்வளவல்ல! ''அடே தூர்த்தா! எந்தப் பதவியில் இப்படி கர்வம் கொண்டு நடந்து கொண்டாயோ, அந்தப் பதவி உன்னை விட்டுப் போகட்டும்'' என்று சபித்து விட்டார்.

மலகாசுரன், நமுசி முதலான அசுரர்கள் தேவலோகத்தின் மீது படையெடுத்து இந்திரலோகமான அமராவதியைக் கைப்பற்றிக் கொண்டனர்.

இந்திரன் மற்ற தேவர்களுடன் சத்திய லோகம் சென்று, பிரம்மாவிடம் தனக்கொரு உபாயம் சொல்லுமாறு வேண்டினான். அவர் அவர்களையும் அழைத்துக் கொண்டு வைகுண்டம் சென்றார். விஷ்ணுவிடம் தங்களைக் காப்பாற்றுமாறு பிரார்த்தித்தனர்.

அவர் ''இந்திரா! அசுரர்களை ஜெயிக்க உங்களுக்குப் பலம் வேண்டும். வலிமை அதிகரிக்க, அமிர்தம் குடிக்க வேண்டும்.



ஆர்.பொன்னம்மாள்



அந்த அமிர்தம் கிடைக்க திருப்பாற்கடலைக் கடைய வேண்டும். சும்மா பாற்கடலைக் கடைந்தால் அமிர்தம் கிடைக்காது. ஓஷதிகளையெல்லாம் கொண்டு வந்து போட வேண்டும். மந்திரபர்வதத்தை எடுத்து வந்து மத்தாக நிறுத்த வேண்டும். வாசுகி என்ற நாகராஜனே மத்தைச் சுற்றும் கயிறாவதற்குப் பொருத்தமானவன். வலி தாளாமல் ஓட மாட்டான். எத்தனை உரசி ரணப்பட்டாலும் பொறுமையோடிருப்பான்'' என்று சொல்லவும் இந்திரன் தளர்ந்தான். நடக்கக் கூடிய காரியமா?

''இந்திரா! சோர்ந்து போகாதே! முயன்றால் முடியாத காரியமே இல்லை! அசுரர்கள் உங்களின் மாற்றாந்தாயின் பிள்ளைகள் தானே! அவர்களிடம் விரோதம் பாராட்டாமல் நயமாகப் பேசு. கயிற்றின் ஒரு பக்கத்தை அவர்கள் பிடிக்கும்படி செய். நாமாகவே கடைந்தாலும்கூட அவர்கள் இடைஞ்சல் செய்வார்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள். சமமாகப் பகிர்ந்து கொள்வோம் என்று சொல்லி அழைத்து வா'' என்றார் விஷ்ணு.

இந்திராதி தேவர்களும் பாதாளத்திற்குச் சென்று மகாபலியைச் சந்தித்து அமிர்தம் கடைய உதவும்படி கேட்டுக் கொண்டனர். மகாபலி மற்ற அசுரர்களோடு கலந்து ஆலோசித்தான்.

திதியின் மைந்தர்கள் சந்தோஷமாகச் சம்மதித்தனர். இந்திரனிடம் தங்கள் ஒத்துழைப்பைக் கூறி, மந்திர பர்வதத்தைப் பூஜித்து அதைப் பெயர்த்து எடுத்து வந்தனர்.

ஓஷதிகளை வாலி தேடிக் கொண்டு வந்து போட்டான். தேவர்கள் வாசுகியைச் சென்று கயிறாக இருந்து அமிர்தம் கிடைக்க உதவும்படி கோரினர். வாசுகியும் மகிழ்ச்சியோடு ஒப்புக் கொள்ள திருப்பாற்கடலில் மந்தர மலையை நிறுத்தி, வாசுகியை மூன்று சுற்றாகச் சுற்றியாயிற்று.

தேவர்கள் வால் பகுதியைப் பிடித்துக் கொள்ள, முகப்பில் மகாவிஷ்ணு நின்று கடையும் வேலையைத் துவக்கினார். மலை நீருள் மூழ்கத் தொடங்கியது. எவருக்குமே தெரியாமல் சிறு ஆமையாக நீருக்குள் சென்ற திருமால் நீருள் வளர்ந்தார்.

நொடிக்கு நொடி பெரிதாகி, மலையைத் தன் கனமான முதுகின் மேல் நெம்பித் தாங்கிக் கொண்டே பெருகினார்.

ஸ்ரீமந் நாராயணன் எண்ணியபடி வாசுகியின் மூச்சுத் திணற, அது விஷத்தைக் கக்கியது. விஷப் புகை தாங்காமல் தேவர்களும், அசுரர்களும் நாலாபுறமும் ஓடினர்.

திருப்பாற் கடல் கடையும் அழகைப் பார்க்க சிவபெருமான் உமாதேவியுடன் வந்திருந்தார். மகாவிஷ்ணுவின் யோஜனைப்படி இந்திராதி தேவர்கள் சிவனைப் பிரார்த்தித்தனர்.

"பிரபோ! நாகங்களையே ஆபரணங்களாகப் பூண்டவர் தாங்கள்! விஷம் உங்களை எதுவும் செய்யாது என்பதை நாங்கள் அறிவோம். வில்வ மாலையைச் சாதாரணமாக எண்ணிய என் மூடத் தனத்தைத் தாங்கள் மன்னிக்க வேண்டும். தங்கள் அனுக்கிரகம் இல்லாமல் அமிர்தம் கிடைக்காது என்பதைப் புரிந்து கொண்டோம். காப்பாற்ற வேண்டும்" என்று இந்திராதி தேவர்களும் ஈச்வரன் பாதங்களை நமஸ்கரித்தனர்.

சிவபெருமான் வாசுகி கக்கிய விஷத்தை எடுத்து அருந்தினார். உமாதேவி விரைந்து வந்து விஷம் வயிற்றுக்குள் போகாமல் கழுத்தை இறுக்கிப் பிடித்தாள். அதனால் விஷம் கழுத்திலேயே தங்கி கழுத்து நீலமாகி விட்டது. இதனால் ஈசனுக்கு நீல கண்டன், நஞ்சுண்டன் என்ற காரணப் பெயர்களும் உண்டாயின.

சிவன் நஞ்சுண்ட தினம் சனிக்கிழமை மாலை நேரம்.

தேவர்கள் விடிய விடிய ஸ்துதித்த நாள் மஹா சிவராத்திரி. அன்று விடிய விடிய பூஜித்தால் சிவபெருமானின் கருணை கிடைக்கும்.

சிவன் நஞ்சை உண்டபோது சில துளிகள் கீழே சிதறின. அவற்றை உண்ட பூச்சிகளே விஷமுள்ள தேள், பூரான், அரணை, நட்டுவாக்களி போன்றவையாகும். சனிப் பிரதோஷம் ரொம்ப விசேஷமானது.



சீன காலண்டரில் முதல் மாதம் ஜனவரி 20ம் தேதிக்கு மேல் வரும். ஏனென்றால், சந்திரனை அடிப்படையாக வைத்து இவர்கள் காலண்டர் அமைக்கின்றனர். ஒவ்வோர் ஆண்டையும் ஒரு விலங்கின் பெயரைக் குறிப்பிட்டே அழைக்கின்றனர்.

விடிந்ததும் ஈசன் கண் விழித்தார். மீண்டும் கடையும் பணி தொடர்ந்தது. காமதேனு உச்சை சிரவஸ் வெண்மையான குதிரை, அடுத்து நான்கு தந்தங்களைக் கொண்ட வெள்ளை யானையும், கற்பக மரமும், சிந்தாமணியும், அப்ஸர மங்கையரும் வெளிப்பட்டனர்.

எல்லாவற்றையும் இந்திராதி தேவர்களுக்குக் கொடுத்தும், அசுரர்கள் அமிர்தம் வரட்டும் என்று பொறுமையோடிருந்தனர்.

சந்திரன் வந்தான். மகாலக்ஷ்மி வெளிப்பட்டு மகாவிஷ்ணுவுக்கு மாலையிட்டாள்.

அமிர்த கலசத்தோடு தன்வந்தரி வந்தார். அசுரர்கள் அமிர்த கலசத்தைப் பிடுங்கிக் கொண்டு வெகுதூரம் ஓடி விட்டனர். தேவர்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை! 'பட்ட பாடெல்லாம் வீண்தானா!' என வருந்தினர்.

"பொறுமையாக இருங்கள். அமிர்தம் உங்களுக்குத்தான்" என்று ஆறுதல் கூறி மறைந்தார் நாராயணன்.

'ஜல், ஜல்' என்ற சதங்கை ஒலி கேட்டுத் திரும்பிய அசுரர்கள் மோகினியின் அழகைக் கண்டு பிரமித்தனர்.

"நீ யார்? எங்கிருந்து வருகிறாய்? உன் பெயரென்ன?" என்று கேள்வி

களைத் தொடுத்தனர்.

"என் பெயர் மோகினி! அமிர்தத்திற்குப் பின் வெளிப்பட்டவள் நான். நான் உங்களுக்காகவே வந்தவள். உங்களை ஏமாற்றுக்காரர்கள் என்று மற்றவர் சொல்வதை நான் விரும்பவில்லை! அந்த அமிர்த கலசத்தை இப்படி கொடுங்கள். ஆளுக்கு ஒரு கரண்டி கொடுத்துவிட்டு கலசத்தோடு உங்கள் முன் நிற்கிறேன்" என்று இனிமையாகக் கூறிக் கடைக் கண்ணால் பார்த்தாள்.

அந்தப் பார்வையில் மயங்கிய அசுரர்கள் மோகினியிடம் அமிர்த கலசத்தைக் கொடுத்தனர். தேவர்கள் வரிசையாக உட்கார, அமிர்தம் வழங்கினார் மோகினியாக வந்த விஷ்ணு.

அடிக்கடி தேவர்களைப் பார்த்துப் புன்னகைத்தார். அந்தப் புன்னகையில் மயங்கிப் பொறுமையாக இருந்தார்கள் அசுரர்கள். ராகு என்ற அசுரன் மோகினியின் செயலில் கபடம் இருப்பதை உணர்ந்தான். மற்ற அசுரர்களிடம் சொல்ல முயற்சித்தான். எவரும் காது கொடுத்துக் கேட்பதாயில்லை! தான் மட்டுமாவது லாபம் காண எண்ணி, பூனை போல் பதுங்கிப் பதுங்கி கடைசியாக அமர்ந்திருந்து சூரிய - சந்திரர்களுக்கிடையே உட்கார்ந்து கையை நீட்டினான்.

கலசத்தின் அடியில் கரண்டி உராயும் சத்தத்தை மூட அசுரர்கள் உணரவில்லை! சூரியனுக்கு அமிர்தம் வழங்கியதும், தன் கையில் அமிர்தம் விழாமல் வேறொரு கையில் அமிர்தம் விழுவது கண்டு சந்திரன் திரும்பிப் பார்த்தான். பின்னால் யார் உட்கார்ந்திருப்பது என்று சூரியனும் திரும்பினான். சந்திரன் தன் கையிலுள்ள அமிர்தத்தைக் குடித்தபடியே ராகுவின் திருட்டுத்தனத்தை மோகினியிடம் அம்பலப்படுத்தினான். சூரியனும் ஏக காலத்தில் அதை ஊர்ஜிதப்படுத்த, தன்னை ஏமாற்றிய ராகுவை கரண்டியையே சக்கரமாக விஷ்ணு ஏவினார். ராகுவின் தலை வேறு, உடல் வேறாகி விழுந்தது. மோகினி மறைந்தாள்.

அமிர்தம் குடித்த ராகுவின் தலையும், உடலும் அழியவில்லை! ஒரு பாம்பை



வெட்டி உடலுக்குத் தலையையும், ராகுவின் தலைக்கு உடலையும் பொருத்தினார் பிரம்மா. தலையுள்ளவன் ராகுவாகவும், பாம்பின் தலையுடைவன் கேது என்ற பெயரிலும் தவம் செய்து கிரகங்களாக பதவி பெற்றனர்.

வெறும் கலசத்தைக் கண்ட அசுரர்கள் உழைப்பு வியர்த்தமானதைக் கண்டு தேவர்கள் மேல் போர் தொடுத்தனர். அமிர்த பலத்தால் தேவர்கள் அசுரர்களை வென்றனர். இந்திரன் தன் ராஜ்ஜியத்தைத் திரும்பப் பெற்றான்.

சூரிய சந்திரர்களைக் கோபம் கொண்ட ராகு மறைக்கும் நாள்தான் கிரகணம் என்கின்றனர். ●



தூக்கணாங்குருவி



ஸ்நேகாவும் ரிஷியும் சென்னையிலிருந்து கிராமத்துக்கு விடுமுறையைக் கழிக்க வந்திருந்தனர்.


''காவியன் இன்னிக்கு எங்களை மலைக் கோயிலுக்குக் கூட்டிட்டுப் போறதாகச் சொன்னியே, கிளம்பலாமா?'' என்றான் ரிஷி.

''மலைக் கோயில் தூரத்தில் இருக்கு. அதனால தின்பண்டம், தண்ணீர் பாட்டில் எல்லாம் எடுத்துட்டுப் போகலாம்'' என்றான் காவியன்.

அரை மணி நேரத்தில் மூவரும் ஆளுக்கொரு சைக்கிளில் கிளம்பினர். பேசிக் கொண்டே சென்றதில் தூரம் பெரிய விஷயமாகப் படவில்லை.

''ஸ்நேகா, ரிஷி சைக்கிளை இங்கேயே விட்டுட்டு, மேல படியேறிப் போகணும்'' காவியன்.





மூவரும் லேசான வெயிலைப் பொருட்படுத்தாமல் மலையில் ஏறினர்.



பல நூறு குடும்பங்கள் சேர்ந்து ஒரே பகுதியில் வசிக்கக் கூடியவை. ஆப்பிரிக்க காடுகளில் கோடிக்கணக்கான கூடுகளுடன் மிகப் பெரிய தூக்கணாங் குருவிக் கூட்டம் இருந்துள்ளதைக் கண்டுபிடித் திருக்கிறார்கள்.

எஸ்.சுஜாதா

"அண்ணா, வேகமாகப் போகாதே! கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துட்டு ஏறலாம்" என்று நிழல் இருக்கும் இடத்தில் அமர்ந்தாள் ஸ்நேகா.

மூவரும் பிஸ்கட்டை எடுத்துச் சாப்பிட்டனர்.

"காவியன், அது என்ன காய்? சுரைக்காய் மாதிரி நிறையத் தொங்குது. நான் இதுவரை இப்படி ஒரு மரத்தையும் காயையும் பார்த்ததில்லையே!" என்று கை நீட்டிக் காட்டினாள் ஸ்நேகா.

"ஸ்நேகா, அது காய் இல்லை. காட்டு இலந்தை மரம். அந்த மரத்துல தூக்கணாங் குருவிகள் கூடுகளை நிறையக் கட்டியிருக்கின்றன" - காவியன்.

"தூக்கணாங்குருவியைப் பற்றிக் கேள்விபட்டிருக்கேன். ஆனால் இப்பதான் அதன் கூட்டை நேரில் பார்க்கறேன்" என்றான் ரிஷி.

"சாதாரணமாக பறவைகளின் கூடுகள் ரொம்ப ஸ்ட்ராங்கா, அதுவும் இப்படி தொங்கற மாதிரி இருக்காதே!" என்று சந்தேகம் கேட்டாள் ஸ்நேகா.

"இந்தப் பறவைகளின் ஸ்பெஷலே அவை கூடு கட்டும் திறமைதான். தூக்கணாங்குருவி சிறிய பறவைதான். ஊர்க்குருவி பார்த்திருப்பீங்களே! அந்த வம்சத்தைச் சேர்ந்ததுதான் இந்தத் தூக்கணாங் குருவிகள். அதோ பாருங்க தூக்கணாங்குருவி ஒண்ணு பறந்து போகுது."



"மஞ்சள் நிறத்தில் ரொம்ப அழகா இருக்கு காவியன்" - ஸ்நேகா.

"தூக்கணாங்குருவிக் கூடைப் பற்றிக் கொஞ்சம் சொல்லேன் காவியன்" என்றான் ரிஷி.

"புல், இலை நரம்புகள், நார்களைக் கொண்டு அழகாகவும், நுட்பமாகவும் கூடு கட்டுவதில் வல்லமையுடையது தூக்கணாங்குருவி. இந்தக் கூட்டின் உள்ளே ஓர் அறை இருக்கும். அதில் மென்மையான நார்களை வைத்திருக்கும். பெரும்பாலும் ஆண் பறவைகள்தான் கூடுகளைக் கட்டுகின்றன. கூட்டைக் கட்டி முடித்து விட்டு ஆண் பறவை பெண் பறவையை அழைத்து வந்து காட்டும். பெண் பறவைக்குக் கூடு பிடித்து விட்டால் இரண்டும் சேர்ந்து அக் கூட்டில் குடும்பம் நடத்தும்" என்று சொல்லிவிட்டு மூச்சு வாங்கினான் காவியன்.

"எத்தனை முட்டை இடும்?" என்றாள் ஸ்நேகா.

"அவ கணக்குல வாங்கற மார்க் மேல எவ்வளவு ஆர்வம்" என்று கிண்டலடித்

தான் ரிஷி.

"உன்னை மாதிரியா நான்? 60 மார்க் வாங்கியிருக்கேன் கிளாஸ் டெஸ்ட்டில்" என்று கோபமானாள் ஸ்நேகா.

"கூட்டைப் பற்றி முழுசா சொல்லிட்டு முட்டைக்கு வர்றேன். கூடு மரக்கிளைகளில் தொங்கிக் கொண்டிருக்கும். கீழ்ப்பக்கத்தில் கூட்டுக்குள் செல்ல வழி இருக்கும். கூடு குறுகலாக ஆரம்பித்து மேலே அகன்று இருக்கும். பாம்பு போன்ற எதிரிகள் கூட கூட்டுக்குள் செல்வது கஷ்டம். 30 செ.மீ முதல் 60 செ.மீ நீளம் வரை கூடு இருக்கும்."

"இது என்ன சாப்பிடும்?"

"உன்னை மாதிரி சாக்லேட், ஐஸ்கிரீம் எல்லாம் கேட்காது. விதைகள், பருப்புகள் தான் முக்கிய உணவு. உணவுக்காகத் தரைக்கு அருகே பறந்து இரை தேடும்."

"ஒரு மரத்துல இவ்வளவு கூடுகள் இருக்கே, கூட்டமாகத்தான் வசிக்குமா?"

"ஆமாம். பல நூறு குடும்பங்கள் சேர்ந்து ஒரே பகுதியில் வசிக்கக் கூடியவை. ஆப்பிரிக்க காடுகளில் கோடிக் கணக்கான கூடுகளுடன் மிகப் பெரிய தூக் கணாங் குருவிக் கூட்டம் இருந்துள்ளதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்."

"ரொம்ப ஆச்சர்யமா இருக்கு!"

"எங்கெல்லாம் தூக்கணாங்குருவிகள் வசிக்கின்றன காவியன்?"

"உலகம் முழுவதும் இவை இருக்கின்றன. இவற்றிற்கு ராட்சத சிவப்பு எறும்புகள்தான் எதிரி. ஒரு தடவைக்கு 3, 4 முட்டைகளைப் பெண் பறவை இடும். 150 வகைகளில் இவை காணப்படுகின்றன.

"நிறைய விஷயம் தெரிஞ்சு வச்சிருக்கே காவியன். சரி, வா கோயிலுக்குப் போயிட்டுக் கிளம்பலாம். வீட்டில் தேடப் போறாங்க" என்றாள் ஸ்நேகா.

மூவரும் மீண்டும் படி ஏற ஆரம்பித்தனர்.

● தூக்கணாங்குருவி ploceidae குடும்பத்தைச் சேர்ந்தது.

● நீர் நிலைகளுக்கு அருகில் கோடை காலங்களில் கூடு கட்டும்.

● கூட்டின் உட்புறம் உள்ள அறையில் களி மண்ணை வைத்து மேலே மெல்லிய நார்களைப் பரப்பி வைத்திருக்கும்.

● ஈச்ச மரம், கருவேல மரம், இலந்தை மரங்களில் கூடுகளைக் கட்டும்.

● கூட்டமாக வசிக்கக் கூடியவை.

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு!

நவம்பர் இதழில் அறிவித்த இந்தப் போட்டியில் நிறையப் பேர் கலந்து கொண்டனர். சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சரியான விடை :

1. நாலந்தா பல்கலைக் கழகம் - பீகார்




2. இந்திய மருத்துவ உலகின் தந்தை - தன்வந்தரி
3. கபடி - இந்தியா
4. சாந்தி நிகேதன் - ரவீந்திரநாத் தாகூர்
5. பீஷ்மரின் தாயார் - கங்கா
6. தாய் - மக்ஸிம் கார்கி
7. கண்கள்
8. ஹோ சி மின்

பரிசு பெற்றவர்கள் :

1. என்.ரேகா, மதுரை
2. கு. வரலக்ஷ்மி, ஐந்தாம் வகுப்பு, சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சிக் கோட்டை.
3. ஜி. முருகன், விக்கிரமசிங்கபுரம், நெல்லை மாவட்டம்.
4. வி. திருமங்கை, மணக்குடி, மயிலாடுதுறை தாலுகா.
5. மு.அப்துல் ஃபத்தா, விட்டுக்கட்டி, திருத்துறைப்பூண்டி வட்டம்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி!


தேர்வு
கதை : கி. கௌதம் ராஜ், ஐந்தாம் வகுப்பு, விவேகானந்தா பால மந்திர் பள்ளி, ஆட்டையாம்பட்டி, சேலம் மாவட்டம்.
படம் : மகேஸ்
மன்னர் ராஜசேகரன் அரசவையில் ஒரு நாள் -
அமைச்சரே, நிதி அமைச்சர் பதவிக்கு ஆள் வேண்டும் முரசறைந்து தெரிவியுங்கள்.
உத்தரவு மன்னா.
மறுவாரம் நிதி அமைச்சர் பதவிக்கான தேர்வு நடந்தது. ஓர் இருட்டறையைக் கடந்து அனைவரும் மண்டபத்தில் கூடியிருந்தனர்.
அமைச்சரே, ஒவ்வொருவராக வந்து நடனமாடச் சொல்லுங்கள்.
நடனமா?
என்ன தேர்வு இது!
என்ன, ஒருவரும் ஆட வர வில்லை?
மன்னா, என் பெயர் வீரன். நான் ஆடு கிறேன்.
வீரன் வேகமாக நடனம் ஆடினான்.
சபாஷ்! நீதான் என் நிதி அமைச்சர்.
மன்னிக்க வேண்டும் மன்னா. நடனத்துக்கும் நிதி அமைச்சர் பதவிக்கும் என்ன சம்பந்தம்?
நீங்கள் கடந்து வந்த இருட்டறையில் தங்க, வெள்ளி நாணயங்களை வைத்திருந்தோம். வீரனைத் தவிர, மற்றவர்கள் எல்லாம் மடியில் நாணயங்களைத் திருடி, கட்டிவிட்டீர்கள். ஆடாததற்குக் காரணம் அதுதான்.


GOKULAM



கோகுலம்

2004

ஜனவரி

ஞா		4	11	18	25
தி		5	12	19	26
செ		6	13	20	27
பு		7	14	21	28
வி	1	8	15	22	29
வெ	2	9	16	23	30
ச	3	10	17	24	31

பிப்ரவரி

ஞா	1	8	15	22	29
தி	2	9	16	23	
செ	3	10	17	24	
பு	4	11	18	25	
வி	5	12	19	26	
வெ	6	13	20	27	
ச	7	14	21	28	

மார்ச்

ஞா		7	14	21	28
தி	1	8	15	22	29
செ	2	9	16	23	30
பு	3	10	17	24	31
வி	4	11	18	25	
வெ	5	12	19	26	
ச	6	13	20	27	

ஏப்ரல்

ஞா		4	11	18	25
தி		5	12	19	26
செ		6	13	20	27
பு		7	14	21	28
வி	1	8	15	22	29
வெ	2	9	16	23	30
ச	3	10	17	24	

மே

ஞா	30	2	9	16	23
தி	31	3	10	17	24
செ		4	11	18	25
பு		5	12	19	26
வி		6	13	20	27
வெ		7	14	21	28
ச	1	8	15	22	29

ஜூன்

ஞா		6	13	20	27
தி		7	14	21	28
செ	1	8	15	22	29
பு	2	9	16	23	30
வி	3	10	17	24	
வெ	4	11	18	25	
ச	5	12	19	26	

ஜூலை

ஞா		4	11	18	25
தி		5	12	19	26
செ		6	13	20	27
பு		7	14	21	28
வி	1	8	15	22	29
வெ	2	9	16	23	30
ச	3	10	17	24	31

ஆகஸ்ட்

ஞா	1	8	15	22	29
தி	2	9	16	23	30
செ	3	10	17	24	31
பு	4	11	18	25	
வி	5	12	19	26	
வெ	6	13	20	27	
ச	7	14	21	28	

செப்டெம்பர்

ஞா		5	12	19	26
தி		6	13	20	27
செ		7	14	21	28
பு	1	8	15	22	29
வி	2	9	16	23	30
வெ	3	10	17	24	
ச	4	11	18	25	

அக்டோபர்

ஞா	31	3	10	17	24
தி		4	11	18	25
செ		5	12	19	26
பு		6	13	20	27
வி		7	14	21	28
வெ	1	8	15	22	29
ச	2	9	16	23	30

நவம்பர்


ஞா		7	14	21	28
தி	1	8	15	22	29
செ	2	9	16	23	30
பு	3	10	17	24	
வி	4	11	18	25	
வெ	5	12	19	26	
ச	6	13	20	27	

டிசம்பர்

ஞா		5	12	19	26
தி		6	13	20	27
செ		7	14	21	28
பு	1	8	15	22	29
வி	2	9	16	23	30
வெ	3	10	17	24	31
ச	4	11	18	25	

மிக்ஸர் பிட்ஸ்

பனி வெண்மையாக இருப்பது ஏன்?



வெண்பனி!

உறைந்த தண்ணீரே பனிக்கட்டிகள். தண்ணீர் மற்றும் பனிக்கு நிறம் கிடையாது என்று தெரியும். அப்புறம் எப்படி பனிக்கட்டிகள் வெண்மையாக இருக்கின்றன? ஒவ்வொரு பனிக்கீற்றும் பலவிதமான முகங்களையுடைய பனிக்கீற்றுகளாக உருவாக்கப்பட்டுள்ளன. இந்தப் பனிக்கீற்றினுள் ஒளி புகும்போது பல புறங்களிலிருந்து அவ்வொளி எதிரொளிப்பதால் அவை வெண்மையாகக் காட்சியளிக்கின்றன.

- இரா. பாலு, வரக்கால்பட்டு

எழுதும் விதங்கள்...

* மெக்ஸிகர்கள் தங்கள் மொழியைக் கீழிருந்து மேலாக எழுதுவார்கள்.



* கிரேக்கர்கள் முதல் வரியை வலமிருந்து இடமாகவும், இரண்டாவது வரியை இடமிருந்து வலமாகவும் மூன்றாவது வரியை மறுபடி வலமிருந்து இடமாகவும் அடுத்தடுத்து இம்முறையிலே எழுதுவர்.

* ஹுப்ரு, துருக்கி, பாரசீகம் போன்ற மொழிகளில் வலப் பக்கத்திலிருந்து இடப்புறமாகவே எழுதுவார்கள்.


* சீனர்கள் தங்களது மொழியை மேலிருந்து கீழாகவும், வலப் புறத்திலிருந்து இடப் புறமாகவும் எழுதுவர்.

* ஜப்பானியர்கள் தங்களது மொழியை மேலிருந்து கீழாகவும் இடப் புறத்தில் இருந்து வலப்புறமாகவும் எழுதுவார்கள்.

- குட்டி பிரசன்னா, கரூர்

தேள்


தேள் 42 கோடி ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றியது. இதில் சில பரிமாண மாற்றங்களுக்குப் பிறகு 30 கோடி ஆண்டுகளாக தற்போதைய தேள் காணப்படுகிறது. பிறந்து மூன்று ஆண்டுகளுக்கு பிறகே இனப் பெருக்கம் செய்யும். தேள் ஆறு ஆண்டுகள் உயிரோடு இருக்கும். இதன் கண்கள் கூட்டுக் கண்கள். தென் ஆப்பிரிக்க காடுகளில் காணப்படும் தேள்கள் 1½ மீட்டர் நீளமுடையன.




- மு.சுகன்யா, ஏழாம் வகுப்பு,
ஸ்வார்ட்ஸ் மெட்ரிக் பள்ளி,
இராமநாதபுரம்

பிரமிட்

* ஆதி காலத்தில் எகிப்துக்கு வந்த கிரேக்கர்கள் பிரமிடுகளின் அமைப்பு கண்டு வியந்தனர். கோதுமையால் செய்யப்பட்ட கேக்குகளைப் போல தோற்ற






மளித்ததால் கோதுமை கேக் என்ற பொருள் படும்படியாக 'பிரமிட்' என்ற சொல்லால் குறிப் பிட்டார்கள். பிறகு அதுவே அவற்றின் பெயராக நிலைத்துவிட்டது.

குளவி

குளவி பருவம் அடையும்போது கூடு கட்டும். கூட்டின் ஒரு பக்கத்தில் முட்டையிடும். பின்பு புழு ஒன்றைப் பிடித்து வந்து கூட்டிலே வைக்கும். அப் பொழுது தன் கொடுக்கினால் அப்புழு வைக் கொட்டிவிடும். இதனால் புழு இறக் காது. உணர்வற்றுவிடும். புழு கூட்டை விட்டு ஓடிவிடாமல் இருக்க இவ்வாறு செய்கிறது. முட்டையில் இருந்து குஞ்சு வந்ததும் அதற்கு உணவு வேண்டும் அல்லவா? இந்த ஏற்பாட்டைச் செய்ததும் கூட்டை மூடிவிட்டு குளவி வெளியே போய் தன் உயிரை விட்டுவிடும்.



- ச. அழகுவேல்,
பத்தாம் வகுப்பு,
அரசு உயர்
நிலைப் பள்ளி,
க.தருமத்துப்பட்டி,
திண்டுக்கல்

முயற்சி


டென்சிங் இருபத்தோராவது முயற்சி யில் எவரெஸ்ட் ஏறி சாதனை படைத்தார். மின் விளக்கை 1201ம் முறையாக முயன்ற போது கண்டுபிடித்தார் தாமஸ் ஆல்வா எடிசன். ராபர்ட் புரூஸ் ஏழாவது முயற்சியில் (படையெடுப்பில்) தன் நாட்டைப் பிடித்தார்.

- க. அஜய்குமார்,
மயிலாடுதுறை

தபால்

முக்கிய இடங்களில் தபால் பெட்டிகள் வைக்கும் முறை முதல் முதலில் இங்கி லாந்து நாட்டில் 1875ல் அம லுக்கு வந்தது. இப்படி தபால் பெட்டிகளை வைக்கலாம் என்று யோசனை கூறியவர் அந்தோணி என்ற எழுத்தாளர். அந்த யோசனையை இங்கி லாந்து தபால் துறை ஏற்றுக் கொண்டு ரோடு ஓரங்களில் தபால் பெட்டிகளை வைத்தது. அதற்கு முன்னால் தபால் அலு வலகங்களுக்குப் போய்த்தான் தபால் போட வேண்டும்.

- தேனி
முருகேசன்



பந்தயம்...


ஒவ்வொரு ஆண்டும் அலாஸ்காவில் நடைபெறும் 'திகிரேட் டிரெய்ல் ரேஸ்' என்னும் பந்தயம்தான் உலகிலேயே கடினமான ரேஸ்.

நாய்களால் இழுக்கப்படும் 'ஸ்லெட்ஜ்' என்னும் பனிச்சறுக்கு வண்டியில் 182 கி.மீ. தூரத்தைப் பனியில் கடந்து செல்ல வேண்டும்


ஆங்கரேஜ், ரோம் ஆகிய இரு நகரங் களுக்கிடையில் அமைந்த இந்தத் தடத் திற்கு முறையான சாலை இல்லை. சுற்றி லும் ஒரே பனிக்காடுதான். ஆங்காங்கே நில் எல்லைக் குறிகள் மட்டும் தெரியும்.

பிப்ரவரி, மார்ச் மாதங்களில் நடை பெறும் இந்தப் பந்தயத்திற்கு உலகின் பல பாகங்களில் இருந்தும் போட்டியாளர்கள் வரு கிறார்கள். இந்தத் தூரத் தைக் கடக்க சுமார் 15 நாட்கள் ஆகும்.

- ஆர்.ஆர். பூபதி,
திண்டுக்கல்





படம்,
கதை :
முத்து
விஞ்ஞானி
கடத்தல்!
9
டார்ச் லைட்டின் உதவியோடு சுரங்கப் பாதையினுள் நடந்தான் ரகு.
இங்கே ஏதோ மர்மம் இருக்குது.
என்ன தம்பி, வழி தவறி வந்துட்டியா? திரும்பிப் போயிடு. இல்லே... அவ்வளவுதான்.
ரகு டார்ச் லைட்டின் உதவியோடு தாக்கினான்.
உன்னை என்ன பண்றேன் பார்!
ஐயோ...


குண்டன் விழுந்துட்டான்!
பிறகு -
தாத்தா!
தாத்தா, நீங்க இங்கேயா இருக்கீங்க?
?!
தாத்தாவா? யார் நீ?
வாங்க தாத்தா, வீட்டுக்குப் போகலாம். ஜானுவும் மாமாவும் மேலே இருக்காங்க.
குட்டிப் பிசாசே, போ. இல்லைன்னா...
தாத்தா!
விஞ்ஞானி சுட ஆரம்பிக்க, தப்பி ஓடினான் ரகு.
அங்கு வந்தான் கடத்தல்காரன் மாரி -
என்ன துப்பாக்கிச் சத்தம்?


இதற்கிடையே ஜானுவும் ஆகாஷும்-
நல்லவேளை! துப்பாக்கி இருந்ததாலே புலியை விரட்டியாச்சு.
ஜீப் ரெடி. ரகு வந்தால் கிளம்பலாம்.
ஆமாம். ரகு போய் ரொம்ப நேரமாச்சு. ஏதும் ஆபத்து வந்திருக்குமோ?
நாம் போய் பார்க்கலாம்.
அங்கே -
கிச்சா!
யாரோ வருகிறார்கள்!
என்னைப் பார்த்து விட்டால்..?
மாய மாத்திரையைச் சாப்பிட்டு மறைந்தான் ரகு.
ஆகாஷும், ஜானுவும் சுரங்கப்பாதையில் நடந்தனர்.
பேச வேண்டாம். ரகுவைத் தவிர யாராவது இருக்கலாம்.


கிச்சா, எழுந்திரு.
ஏதோ அசம்பாவிதம் நடந்திருக்கிறது.
உனக்கு என்ன ஆச்சு கிச்சா?
அங்கிள், எனக்குப் பயமாயிருக்கு.
பதறாதே! அமைதியா இரு.
ஜானுவின் கால் இடறியது.
அங்கிள்... ஐயோ...
அலறல் கேட்டு உஷாரானான் மாரி.
யாருன்னு பார்த்துடலாம்.
ஆனால் -
ஆ... ஐயோ!
அடுத்த இதழில் முடியும்.



சுட்டெரிக்கும் சூரியன்!

மனித இனம் சுமார் ஒரு கோடி ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த குரங்கு போன்ற ஓர் உயிரினத்தில் இருந்து பரிணமித்தது. மனிதன் சில லட்சம் ஆண்டுகளுக்கு முன்புவரை கூட விலங்காகவே வாழ்ந்தான்; ஆடையின்றி அலைந்தான்; நாகரிகம் என்பது தெரியாது. உணவுக்கான தேடலே அவனது நேரம் முழுவதையும் விழுங்கியது. கடந்த ஒரு லட்சம் ஆண்டுகள்தான், மனித வரலாற்றின் முக்கியமான காலகட்டம். இயற்கை சக்திகளைக் கையாண்டு, புரிந்து இணைந்து வாழ்ந்தான். நெருப்பு




* சூரிய முத்திரை



* கொள்ளிவாய் பிசாசு சிற்பம்

என்னும் அற்புதசக்தி, நீரை ஆவியாக்கி, மேகமாக்கி, மழையாக்கி, ஆறுகளை ஓடச் செய்து, குளம், கடல்களை நிரப்பும் 'நீர் சுழற்சி'க்கு ஆதாரமானது ஆகும். இன்று வெப்ப ஆற்றல் மனிதனின் படைப்பு ஆயுதம்; உணவு சமைக்க உதவும் சேவகன்; வேதியியல் வினைகளின் தாதி; வாகனங்களின் இயக்குநர்; உயிர்களின் ஜீவநாடி! உயிர்கள் வாழ குறிப்பிட்ட வெப்பம் தேவை!

நாளைக்குத் திடீரென்று சூரியனே உதிக்காது; நாளைக்கு மட்டுமல்ல, இனி என்றைக்கும் உதிக்காது என ஓர் அறிவிப்பை அரசு செய்ததென்றால், எப்படி இருக்கும்? என்ன ஆகும்? என்று கற்பனை செய்து பார்த்திருக்கிறீர்களா? கற்பனைதான்...! செய்து பாருங்களேன்! பூமி ஒட்டுமொத்தமாய்க் குளிர்ந்து, நிரந்தரக் குளிர் ஏற்பட்டுவிடும். அது மட்டுமா? ஆறு, குளங்களெல்லாம் உறைந்து பனிக்கட்டியாக மாறிவிடும். புவியிலுள்ள அனைத்து உயிர்களும் இறந்து விடும். செடி, கொடி தாவரங்களும் விதி விலக்கல்ல. உங்கள் வாகனங்களிலுள்ள எரிபொருளெல்லாம் - அதுதான், பெட்ரோல், டீசல் கூட



உறைந்துவிடும். காரின் எஞ்ஜின் வேலை செய்யாது. ஆற்றலை உற்பத்தி செய்யும் அனைத்து நிலையங்களும் செயல்படாது. நாம் ஊருக்குப் போக, கடைக்குப் போக என்று எதற்குமே வாகனத்தை இயக்க முடியாது. உலகில் எதுவும் இல்லை. தீயை உண்டு பண்ணவோ, வெளிச்சம் தரவோ எரிபொருள் கிடைக்காமல் போய்விடும்.

வெப்பத்திலிருந்துதான் வெளிச்சம் உண்டாகிறது என்பதை அக்கால மக்கள் உணர்ந்து, அதனைப் பார்த்து பயந்ததுடன் வழிபடவும் செய்தனர். வாழ்க்கையில் ஒளியைத் தரும் சூரியனுக்கே முக்கியத்துவம் தந்தனர்.



• சூரிய ஒளி ஓவியம்


மோகனா

இப்படியெல்லாம் நடக்குமா?

நம்முடைய சூரிய குடும்பத்தைப் பற்றிய தற்போதைய தகவல் மற்றும் அறிவின்படி, அப்படி எதுவும் சமீபத்தில் - அதாவது சுமார் 500 கோடி ஆண்டுகளுக்கு நடைபெறாது என்பதை நாம் நன்றாக அறிவோம். ஆனால் ஆதிகால மனிதனுக்கு இந்தச் செய்தி எல்லாம் தெரியாது. சூரியன் எப்படி வெப்பத்தையும், வெளிச்சத்தையும் தருகிறது என்ற அறிவியல் உண்மை அவர்களுக்குத் தெரியாது. சூரியன் ஏன் வானவெளியில் வலம் வருகிறது என்பதும் தெரியாது. ஆனால், சூரியனைக் கடவுளாகப் பாவித்து, அதனை வழிபடுவதன் மூலம், சூரியன் தங்களை வெப்பத்தால் பொசுக்காமல், விலகிச் செல்கிறது என்று நம்பினார்கள். சதுப்பு நிலத்திலிருந்து பாஸ்பின் என்ற பொருளுடன் இணைந்து, மீதேன் வாயு வெளியேறுவதன் மூலம் உண்டாகும் 'நெருப்பு ஜுவாலை' காற்றில் நகர்ந்து செல்வதைக் கண்ட மக்கள் பயந்து போய் 'தீய



• டு டான் காமென் அரசன்




• சூரிய முகமூடி

சக்தி' என்றும், 'கொள்ளிவாய்' பிசாசு என்றும் நம்பினார்கள்.

ஜெய்ப்பூரிலுள்ள அரண்மனையில், சூரிய அடையாளம் உள்ள சிற்பம் காணப் படுகிறது. இது மகாராஜா ஜெய்சிங்கின் அரசாங்கச் சின்னமாகும். கி.பி. 1728ல் ஜெய்ப்பூரில் கட்டப்பட்ட, வானிலை ஆய்வுக்கூடத்தில், சூரியனைக் கொண்டு நேரம் சொல்லும் மிகப் பெரிய சூரியக் கடிகாரம் உள்ளது. ஈக்வடாரில் வாழும் இன்கா இன மக்கள், சூரிய முகப்பு கொண்ட தங்கமுகமூடியை வைத்து கொண்டாடுகின்றனர். இன்கா இன மக்கள், சூரியனை வழிபட்டதுடன், தங்களின் மூதாதையர்கள், சூரியனின் வழித் தோன் றல்கள் எனவும் நம்பினார்கள்! மெக்சி கோவிலுள்ள (17ம் நூற்றாண்டு) அஸ் டெக்குகளின் பிரமிடுகளில் சூரிய முகம் கொண்ட கற்களைக் கண்டெடுத்தனர். இதனைக் 'காலக்கல்' என்று அழைத்தனர். ஏனெனில், இதன் நடுவில் சூரியனும், அத னைச் சுற்றி பிரபஞ்சத்தின் சின்னங்களும், வருடத்தின் நாட்களும் காண்பிக்கப்பட் டிருந்தன. அதிலுள்ள முக்கோணங்களின் கூட்டு முனைகள், சூரியக் கதிர்களைக் குறித்தன. இந்தச் சூரியக் கற்கள் நாட் களைக் கணிக்க மட்டுமல்ல, எப்போது சூரிய கிரகணங்கள் வருகின்றன என்பதை நிர்ணயிக்கவும் உதவின.

எகிப்திய பாரோ இன மன்னரான 'டு டான் காமென்' கி.மு. 1350ல் வாழ்ந் தார். டு டான் காமென்னின் மாமனார், வழி வழியாக வந்த, பாரம்பரிய தெய்வங்களை யெல்லாம் துடைத்து எறிந்துவிட்டு, அதற் குப் பதிலாக ஒரே ஒரு சூரியக் கடவுளை, அட்ரனை நிர்மாணித்து வழிபட்டார். ஆனால் 'டு டான் காமென்' அரியணை ஏறியதும், பழைய கடவுள்களையெல்லாம் மீண்டும் உண்டாக்கி வழிபட்டார். ஆனால் சூரியக் கடவுளே முக்கியமாக இருந்தது. எப்படியும் வெப்பத்தி லிருந்துதான் வெளிச்சம் உண்டாகிறது என்பதை அக்கால மக்கள் உணர்ந்து, அதனைப் பார்த்து பயந்ததுடன் வழிபட வும் செய்தனர். வாழ்க்கையில் ஒளியைத் தரும் சூரியனுக்கே முக்கியத்துவம் தந்தனர். நீரின்றி மட்டுமல்ல, ஒளியின்றி யும் வாழ்க்கை இல்லை. ஒளிதான் வாழ்வின் ஆதாரம்.



சூரியனை
அடிப்படையாக வைத்து
முதன்முதலாக
காலண்டரை
உருவாக்கியவர்கள்
ரோமானியர்கள்.
ரோமானிய காலண்டரில்
முதல் மாதம் மார்ச்
ஆகும்.

- ஜெபமாலை



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

ஓவியப் போட்டி, பொது அறிவுப் போட்டி, அனுபவங்கள், துணுக்குகள், படக்கதைகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்குச் சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசளியுங்கள்.

பெயர் : ______________________________

முகவரி : ______________________________

____

____

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
கல்கி பில்டிங்க்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.



துரோகி

ஆலிஸின் சித்தி பாண்டுரேஸைத் தன் வீட்டுக்கு அழைத்திருக்காவிட்டால் அதை அவன் பெரிதாக எண்ணியிருக்க மாட்டான். ஆனால் 'உன் சிநேகிதர்களையும் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வா' என்று அந்தச் சித்தி சொன்ன பிறகும் எதற்காக 'அதெல்லாம் வேணாம். நான் மட்டும் வரேன்' என்று ஆலிஸ் கூற வேண்டும்?

கொடைக்கானலில் இந்நேரம் தன் சித்தி வீட்டில் ஆலிஸ் கேக்குகளையும் ஐஸ்க்ரீமையும் ஒரு வெட்டு வெட்டிக் கொண்டிருப்பாள். இந்த எண்ணம் ராஜுவுக்கு உறுத்தவில்லை. ஆனால் பாண்டுரேஸ் நட்புவட்டத்தில் ஒருவர் துரோகம் செய்வதா? இதைத்தான் அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

நடைபாதைப் பெரியவர் சில நாட்களுக்கு முன் எச்சரித்தது நினைவுக்கு வந்தது. அப்படியானால் ஆலிஸ்தான் அந்தத் துரோகியா? நினைக்க நினைக்க வருத்தமாக இருந்தது.

'ஏண்டா ஒரு மாதிரியிருக்கே?' என்று பிரகாஷ் பலதடவை கேட்டும் ராஜு பதிலளிக்கவில்லை. 'உனக்கு உடம்பு சரியில்லையாடா?' என்று அகல்யா அக்கறையாகக் கேட்டபோதும் நினைத்ததைக் கூற முடியவில்லை ராஜுவால். உண்மையைக் கூறி அந்த ரம்மியமான கொடைக்கானல் சூழ்நிலையைக் கெடுப்பானேன்?

பள்ளி மாணவர்கள் தங்குவதற்கு நிர்வாகம் சிறப்பாகவே ஏற்பாடு செய்திருந்தது. நிர்வாகக் குழுவினர் பெரிய தொழிலதிபர்களும்கூட. அவர்களுக்கென்று கொடைக்கானலில் ஒரு எஸ்டேட் இருந்தது. அதன் ஒரு பகுதியைத்தான் மாணவர்கள் தங்குவதற்காக ஒதுக்கியிருந்தார்கள்.

மாலையில் சூடான சிற்றுண்டி. இதே உப்புமாவை



யார்?

அருண் சரண்யா

4

யும் இட்லியையும் வீட்டில் சமைத்திருந் தால் ரசித்திருப்பார்களோ என்னவோ, பிக்னிக் சூழலில் பிற மாணவர்களோடு சிரித்துக் கொண்டும், அரட்டை அடித்துக் கொண்டும் சாப்பிட்டபோது, அது அமிர்த மாக உள்ளே இறங்கியது.

"வயிறு நிறையச் சாப் பிடுங்க. ஆனால் கொஞ்ச நேரம் கழிச்சு நடக் கப் போற விளை யாட்டுப் போட்டி களில் எல்லாரும் கலந்துக்கணும். 'வயிறு முட்ட சாப்பிட்டேன். அதனாலே நடக்க முடியலே, ஓட முடிய லே'ன்னு யாரும் சாக்குப் போக்கு சொல்லக் கூடாது" என்று சிரித்தபடியே எச்சரித்தாள் மரகதம் மிஸ். சிற்றுண்டி முடிந்த கொஞ்ச நேரத்தில் அனைவருக்கும் காபி வழங்கப் பட்டது. அதையும் குடித்து வைத்தார்கள்.



பிறகு, மாணவ மாணவியர் ஐந்துபேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்கப்பட்டார்கள். மொத்தம் ஐந்து போட்டிகள். ஒவ்வொன்றிலும் குழுவுக்கு ஒருவர் என்று கலந்து கொள்ள வேண்டும். இறுதியில் எந்த அணி, அதிக பாயிண்ட்டுகள் எடுத்ததோ அதுவே, வெற்றி பெற்ற அணி என்று செல்வராஜ் சார் அறிவிப்பார். அவர்தான் அந்தப் பள்ளியின் உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுத் துறையின் ஆசிரியர்.

பாண்டூஸ் ஒரே அணியில் இருந்தார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? யாரோ ஓர் ஆசிரியர் கேட்டதற்கு "ஆலிஸ் நிச்சயம் போட்டி தொடங்குவதற்கு முன்னாலயே வந்துடுவா சார்" என்று அழுத்தமாகக் கூறினான் பிரகாஷ்.

மொத்தம் பத்து குழுக்கள். ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு நதியின் பெயர். பாண்டூஸ் அணிக்கு 'கங்கை' என்று பெயர் வைத்தார் ஆசிரியர். உடனே "நாங்கதான் இந்தியாவிலேயே நீளமான ஆறு" என்று உற்சாகமாகக் கத்தினான் சரவணபெருமாள். அகல்யாவின் கண்கள் வாசற்புறத்தையே பார்த்துக் கொண்டிருந்தன. ஆலிஸ் ஏன் இன்னமும் வரவில்லை?

மற்ற அணிகளைச் சேர்ந்தவர்களும் சும்மா இல்லை. 'காவிரி' என்று பெயர் சூட்டப்பட்ட அணியினர் "நாங்கதான் தமிழ்நாட்டிலே பாயும் நதி" என்றார்கள் கம்பீரமாக. "மொதல்ல கர்நாடகத்தைத் தாண்டி வாம்மா" என்று எதிரணியினர் கிண்டலடிக்க, சிரிப்பலைகள் வேகமாகப் பரவின.

ஓட்டமும் நடையுமாக வந்து சேர்ந்தாள் ஆலிஸ். அப்பாடா என்றிருந்தது பிற பாண்டூஸுக்கு.

"எல்லாருக்கும் ஒரு இருபது நிமிஷம் இடைவேளை. கொஞ்ச நேரம் ஓய்வெடுத்துக்கிட்டு, அதோ இருக்குதே அந்த மைதானத்துக்கு வந்து சேருங்க" என்று கூறிவிட்டு நகர்ந்தார் செல்வராஜ் சார்.

ஆலிஸ் கையில் ஒரு சின்ன பார்ஸலோடு வந்திருந்தாள். அதைக் கவனித்த ராஜு 'தன் சித்தி வீட்டிலிருந்து இவள் ஏதாவது தின்பண்டம் கொண்டு வந்திருந்தால் அதைத் தொடவும் கூடாது' என்று தீர்மானித்தான்.

அரைமணி நேரத்துக்குப் பிறகு போட்டிகள் தொடங்கின. முதலில் ஓட்டப் பந்தயம். "நீதானடா எப்பவுமே சாம்பியன்" என்றபடி ராஜுவை தங்கள் பிரதிநிதியாக அனுப்பினார்கள் கங்கை அணியினர்.

போட்டி தொடங்கியது. எல்லா அணியினரும் தங்கள் பிரதிநிதியைப் பாராட்டி உற்சாகப்படுத்த, ஒரே கூச்சல். எல்லைக்கோட்டை நெருங்குவதற்குப் பத்து மீட்டர் தூரம் இருந்தபோது, இரண்டாவதாக வந்து கொண்டிருந்த ராஜு, முழு முயற்சியுடன் ஈடுபட்டு எல்லைக்கோட்டை முதலில் தாண்டி விட்டான். கங்கை அணிக்கு ஐந்து பாயிண்ட்டுகளும், இரண்டாவது இடத்தில் வந்த துங்கபத்ராவுக்கு மூன்று பாயிண்ட்டுகளும், அடுத்து வந்த காவிரி அணிக்கு ஒரு பாயிண்ட்டும் அளிக்கப்பட்டு, அவை ஸ்கோர் போர்டிலும் குறிக்கப்பட்டன.

அடுத்து பெண்களுக்கான




உலகின் பல பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு இரவிலிருந்து தான் நாள் ஆரம்பமாகிறது. பாபிலோனியர்களுக்குச் சூரிய உதயத்திலிருந்து தான் நாள் கணக்கிடப்படுகிறது. நம் தமிழ்நாட்டு காலண்டர் முறையும், சூரிய உதயத்தை நாளின் ஆரம்பமாகக் கொண்டதுதான். யூதர்களுக்கோ சூரியன் மறைவிலிருந்துதான் நாள் குறிக்கப்படுகிறது. மேலும் யூதர்களுடைய புது வருடம் வெள்ளி, புதன் ஆகிய கிழமைகளில் தொடங்காது.

ஓட்டப்பந்தயம். அதில் ஆலிஸ் இரண்டாவதாக வந்து சேர, கங்கை அணியின் ஸ்கோர் ஏழு என்று ஏறியது.

தொடர்ந்து 'சொல் என்ன சொல்' என்ற வார்த்தை விளையாட்டு. சரவணபெருமாள் நன்றாகவே யூகித்தான். என்றாலும், இரண்டாவது இடத்தைத்தான் பெற முடிந்தது.

அடுத்து பந்தை அதிக தூரம் வீசும் போட்டி. மூன்றாவது இடத்தைப் பெற்றுக் கொண்டு தலை குனிந்தபடி வந்து சேர்ந்தான் பிரகாஷ். ''பத்துப் பேரில் மூன்றாவதாக வருவதும் சாதனைதான்'' என்று மற்ற பாண்டூஸ் அவனுக்கு ஆறுதல் கூறினார்கள்.



இறுதியாக மாணவிகள் பங்கு பெறும் 'லைம் அண்ட் ஸ்பூன்' போட்டி. அகல்யா முதலில் வர வேண்டுமே என்று பாண்டூஸுக்குத் தவிப்பாக இருந்தது. காரணம் அந்த நிலையில் கங்கை அணி பன்னிரெண்டு பாயிண்ட்டுகள் எடுத்திருந்தது. அதற்குச் சமமாக காவிரி அணியும் பன்னிரெண்டு பாயிண்டுகள் எடுத்திருந்தது. பிற அணிகள் எல்லாம் ஏழுக்கும் குறைவான பாயிண்ட்டுகள் என்பதால் கங்கைக்கும் காவிரிக்கும்தான் போட்டி என்ற நிலை.

போட்டி துவங்கிய சிறிது நேரத்திலேயே பரபரப்பு தொற்றிக் கொண்டது. முன்னணியில் வந்து கொண்டிருந்த இருவர் அகல்யாவும், காவிரி அணியைச் சேர்ந்த மைதிலியும்தான். நேரம் ஆக ஆக, மற்றவர்கள் எலுமிச்சம் பழங்களைக் கீழே தவறவிட, இவர்கள் இருவர் மட்டுமே தொடர்ந்து நடந்து வந்து கொண்டிருந்தார்கள்.

திடீரென்று அந்தச் சந்தேகத்தைக் கிளப்பினான் பிரகாஷ். ''டேய் ராஜு, அகல்யா வழக்கத்தைவிட மெதுவாக நடக்கிற மாதிரி இல்லை?''. உற்றுப் பார்த்த ராஜுவுக்கும் அது உண்மை என்றே பட்டது. என்ன இது!

எல்லைக்கோட்டை அடைய இன்னும் நான்கு அடிகள் வைத்தால் போதும் என்ற நிலையில், இருவருக்கும் கடுமையான போட்டி. அப்போது... ராஜுவால் தன் கண்களையே நம்பமுடியவில்லை. அகல்யாவின் ஸ்பூனிலிருந்து எலுமிச்சம் பழம் கீழே விழுந்தது. இது தற்செயலாக விழுந்தது போல் இல்லையே என்றது ராஜுவின் உள்ளுணர்வு. போட்டி தொடங்குவதற்குப் பத்து நிமிடங்களுக்கு முன்பு அகல்யாவும் மைதிலியும் தனியான ஓர் இடத்தில் ரகசியமாகப் பேசிய காட்சி இப்போது அவன் நினைவுக்கு வந்தது. ''அப்படி ஒரு நிலை வந்தால் நிச்சயம் நான் உனக்கு உதவறேன்'' என்று அகல்யா அந்த மைதிலிக்கு வாக்குறுதி அளித்ததையும் அவன் கேட்டிருந்தான்.

''காவிரிக்கு முதலிடம். கங்கை அணிக்கு இரண்டாவது இடம்'' என்று அறிவித்தார் செல்வராஜ் சார்.

'நட்புன்னா அது பாண்டூஸ்தான்' என்ற கணிப்பில்கூட, தங்கள் அணி முதலிடத்திலிருந்து சரிந்துவிட்டதாக எண்ணி வேதனைப்பட்டான் ராஜு.

(தொடரும்)

கூடி உண்ணும் குணத்தைப் பார்!

சின்னச் சின்ன எறும்பைப் பார்!
சேர்ந்து வாழும் இயல்பைப் பார்!
ஒன்றன் பின்னர் ஒன்றாய்த் தான்
ஊர்ந்து போகும் ஒழுங்கைப் பார்!

என்றும் சோம்பல் இன்றித் தான்
இயங்கும் சுறுசு றுப்பைப் பார்!
உண்ணும் பொருளைத் தேடித் தான்
ஊக்கத் துடனே முயல்தல் பார்!

தன்னை விடவும் பளுவாய்த் தான்
தானியம் தூக்கும் துணிச்சல் பார்!
கொண்ட உணவைக் குழுவாய்த் தான்
கூடி உண்ணும் குணத்தைப் பார்!

அன்று கிடைக்கும் இரையைத் தான்
அன்றே தீர்க்கா வழக்கம் பார்!
பின்னர் புசிக்கச் சிறிதைத் தான்
பேணிச் சேர்க்கும் பழக்கம் பார்!

எண்ணி எண்ணி வியக்கத் தான்
எறும்பு கொண்ட சிறப்பைப் பார்!
கண்டு கண்டு அவற்றைத் தான்
கற்று உன்னை உயர்த்தப் பார்!

தளவை இளங்குமரன்



நீல நிற மேடையில் கோடி மலர்!





I. 1. அம்பலத்தில் ஆடும் அழகுக் கண்ணனுக்கு அங்கம் முழுவதும் தங்கக் கண்ணாடி - அது என்ன?

2. கள்ளனுக்குக் காவல், காற்றுக்குத் தோழன் - அது என்ன?

3. ஜாடி மேலே குரங்கு - அது என்ன?

4. வெள்ளை மாளிகைக்கு வாசல் இல்லை; வழியும் இல்லை - எது என்ன?

5. மூன்று கொம்பு மாடு, ஒரு கொம்பால் முட்டுது - அது என்ன?

- ஆர். விக்னிஷா, இடையர்காடு

II. 1. மரக்கிளையே தலையில் இருந்தாலும் மனம் கலங்கித் திரிவான் காட்டுக்குள் - அவன் யார்?

2. நீல நிற மேடையிலே கோடி மலர் பூத்திருக்கு - அது என்ன?

3. தொப்பித் தலையன் சுருக்கென்று குத்துவான் - அவன் யார்?

4. பாடியபடியே வலம் வருவார். பாகவதர் அல்ல; தேடி வந்து ஊசி போடுவார், டாக்டரும் அல்ல - அவர் யார்?

5. ஒரு மின்னல் வெளிச்சத்தில் பிடிபட்டான் - அவன் யார்?

- எம். முனியசாமி, திரு.உ.மங்கை

III. 1. வேகாத வெய்யிலில் வெள்ளையன் விளைகிறான் - அவன் யார்?

2. நீரில் பூக்காத பூ; நிலத்தில் மட்டும் பூக்கும் பூ - அது என்ன பூ?

3. வெள்ளை நிறப் பூ; நீரில் விளையும் பூ - அது என்ன பூ?

4. காற்றில் கரையாது; தண்ணீரில் கரைந்து விடும் - அது என்ன?

- ம. கபிலன், சீர்காழி

IV. 1. படுக்க முடியாத பஞ்சு மெத்தை, பசிக்கு உணவாக செஞ்ச மெத்தை - அது என்ன?

2. வானத்தின் சோப்பு நுரை; தண்ணீர் வழங்கும் சோப்பு நுரை - அது என்ன?

3. ஒன்றுக்குப் பின் ஒன்றாய் வரும்; மந்தை அல்ல, ஓயாத சத்தம் வரும்; சந்தையும் அல்ல - அது என்ன?

- எஸ்.கவிதா, திருநெல்வேலி

V. 1. உடம்பெல்லாம் கண்; உச்சியிலே கிரீடம் - அது என்ன?

2. உச்சானிக் கிளையிலே பிச்சாண்டி தொங்குகிறான் - அவன் யார்?

3. குயவன் செய்யாத பானை; மழை பெய்யாமல் தண்ணீர்; வண்ணான் வெளுக்காத வெள்ளை - அது என்ன?

4. தொப்பையனுக்கு ஒரு வாசல், தோழனுக்கு இரு வாசல் - அது என்ன?

5. மஞ்சள் சட்டை மாப்பிள்ளை. மண மணக்கிறார் வீட்டிலே - அது என்ன?

- குட்டி பிரசன்னா, கரூர்

விடைகள் :

I. 1. மயில் 2. ஜன்னல் 3. முந்திரிக் கொட்டை 4. கோழி முட்டை 5. நெருஞ்சி முள்

II. 1. மான் 2. வானில் நட்சத்திரங்கள் 3. முள் 4. கொசு 5. புகைப்படம்

III. 1. 2. 3. 4. உப்பு

IV. 1. ரொட்டி 2. மேகம் 3. கடல் அலைகள்

V. 1. அன்னாசிப் பழம் 2. தேன்கூடு 3. தேங்காய் 4. சட்டை 5. எலுமிச்சை



உன்னால் முடியுமா?

காட்டில் முனிவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் பழங்களை மாத்திரமே உணவாக உண்டு வந்தார். எப்பொழுதும் தியானம் செய்து கொண்டேயிருப்பார்.

விதுகன் என்பவன் பல கலைகளில் கை தேர்ந்தவன்; ஒரு வீரன். அவன் ஒரு நாள் தன் இரண்டு சிஷ்யர்களுடன் அந்தக் காட்டிற்கு வந்து சேர்ந்தான். காட்டில் முனிவரைப் பார்த்தான்.

"முனிவரே, எங்களுக்குப் பசிக்கிறது. ஏதாவது சாப்பிட வேண்டும். உங்களால் ஏதாவது கொடுக்க முடியுமா?" என்றான்.

அதற்கு முனிவர், "நானே கீழே ஏதேனும் பழங்கள் விழுந்து கிடந்தால் அதைப் புசித்து தான் வாழ்கிறேன். என்னிடம் என்ன இருக்கிறது உங்களுக்குக் கொடுக்க?" என்றார்.

"இங்கு அக்கம்பக்கத்தில் எங்களுக்கு ஏதாவது சாப்பாடு கிடைக்குமா?" என்றான் விதுகன்.

"எனக்கு ஒன்றுமே தெரியாது."

"நீங்கள் எத்தனை வருடங்களாய் இந்தக் காட்டில் இருக்கிறீர்கள்?"

"சுமார் இருபது வருடங்களாக இருக்கிறேன்."

"இருபது வருடங்களாக இங்கு இருந்தும் ஒன்றும் தெரியாதா? அப்படியென்றால் இத்தனை வருடங்களாக இங்கு என்னதான் செய்து கொண்டிருக்கிறீர்கள்?"

"ஒரு சின்ன விஷயத்திற்காக இந்தக் காட்டைத் தேடி வந்தேன். ஆனால் எவ்வளவு முயற்சி செய்தும் இன்னும் என்னால் அதை அடையமுடியவில்லை."

கட,கடவென்று சிரித்தான் விதுகன். "என்ன முனிவரே இப்படி சொல்லி விட்டீர்கள்?" என்று சொல்லிவிட்டுத் தன் முதல் சிஷ்யனைக் கூப்பிட்டான். "சிஷ்யனே, நீ கற்றுக் கொண்ட சக்தியை உபயோகித்துக் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்து விடு" என்றான். சிஷ்யனும் கண்களை மூடிக் கொண்டு ஏதோ ஒரு மந்திரத்தை ஜபித்துக் கொண்டேயிருந்தான். சிறிது நேரத்தில் அவன் உருவம் கண்களுக்குப் புலப்படாமல் காற்றில் கரைந்துவிட்டது.

திரும்பவும் விதுகன் கட,கடவென்று சிரித்துவிட்டு, "முனிவரே, இவன் இந்த வித்தையை என்னிடமிருந்து இரண்டே வருடங்களில் கற்றுக் கொண்டான் தெரியுமா?" என்றான். பிறகு விதுகன் சிஷ்யனைத் திரும்ப உருவத்திற்கு வருமாறு கூற, சிஷ்யனும் பழைய நிலையை அடைந்தான்.

"முனிவரே, இருபது வருடங்களாக முயற்சி செய்தும் அப்படி உம்மால் முடியாதது என்ன?"

"இல்லையப்பா, இதுவெல்லாம் எளிது. இதற்கு இரண்டு வருடங்களே தேவையில்லை. நல்ல குரு கிடைத்தால் இரண்டு மாதங்களிலேயே கற்றுக் கொள்ளலாம்."

விதுகனுக்கு ஒரே ஆச்சரியம்! ஆனாலும் அதை அடக்கிக் கொண்டு, தன்னுடைய இரண்டாவது சிஷ்யனை அழைத்து அவன் கற்றுக் கொண்டதைச் செய்து காட்டச் சொன்னான். இரண்டாவது சிஷ்யனும் ஏதோ மந்திரத்தை ஜபித்தான். உடனே அங்கு நின்ற ஓர் உயரமான மரம் அப்படியே வளைந்து அதனுடைய உச்சி தரையைத் தொட்டது! விதுகன் "முனிவரே, ஏதாவது பழங்கள் இருந்தால் பறித்துக் கொள்ளும்" என்று ஏளனமாகச் சிரித்தான். அதற்கு முனிவர், "வேண்டாமப்பா, அந்த மரம், தனக்கு அந்தப் பழங்கள் வேண்டாம் என எண்ணும்போது, தானே உதிர்த்து விடும். நான் எடுத்துக் கொள்வேன்" என்றார்.

"இதை என் சிஷ்யன் எவ்வளவு சீக்கிரம் கற்றுக் கொண்டான் தெரியுமா? ஒரே வருடத்தில்!" என்றான் விதுகன்.

அதற்கு முனிவர், "ஒரு சில நாட்கள் காத்திருந்தால், அந்தப் பழங்கள் தானா

ஆர். எஸ். நல்லபெருமாள்



கவே உதிர்ந்து விடும். இதற்குப் போய் ஒரு வருடத்தை வீணாக்கி, ஒரு மரத்தையே வளைப்பானேன்?'' என்றார்.

விதுகனுக்கு எரிச்சல்தான் வந்தது. தன்னுடைய மகிமையைப் போற்றாமல் எல்லா வித்தைகளையும் அற்பமாக மதிக்கிறாரே, என்று அவர் மேல் ஆத்திரம் பொங்கியது. இருந்தும் அடக்கிக் கொண்டு, ''முனிவரே, நான் எனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் இன்னும் என் சிஷ்யர்களுக்குச் சொல்லிக் கொடுக்கவில்லை, என்னால் இன்னும் என்னவெல்லாம் செய்து காட்ட முடியும் தெரியுமா?'' என்று அகம்பாவத்தோடு கேட்டான்.

முனிவர் சும்மாயிருப்பதைப் பார்த்து விட்டு, மேலும் தொடர்ந்தான் : ''மதம் பிடித்த யானையையே, என் சுண்டு விரலால் அடக்கி பசுவாக மாற்றி விடுவேன். இங்கு புலிகள் இருக்கின்றனவா? சொல்லும். உமக்குப் புலிப்பால் கொண்டு வந்து தருகிறேன்'' என்று தன் வீரத்தைத் தானே புகழ்ந்தான். அதற்கும் அந்த முனிவரிடமிருந்து ஓர் உணர்ச்சியும் வெளிப்படாததைப் பார்த்த விதுகனுக்கு வெறிதான் கூடியது. எப்படியாவது இந்த முனிவரை 'ஆஹா! அப்படியா உன் திறமை' என்று ஆச்சரியப்பட வைத்து விட வேண்டும் என்ற உத்வேகத்தில் மேலும் தொடர்ந்தான் : ''வித்தை தெரிய வேண்டுமா? கேளும், சொல்லித் தருகிறேன். ஜலம், தீ எதன் மேல் வேண்டுமானாலும் நடக்க உமக்குச் சொல்லித் தரட்டுமா? ஐயோ இருபது வருடங்களாக ஒரு பிரயோஜனமும் இல்லாமல் வயதாகிப் போனீரே! உம்மை வேண்டுமானால் இருபது வருடங்களுக்கு முன்பு இருந்தது போல் மீண்டும் இளமை உருவம் பெறச் செய்யட்டுமா?'' என்று அடுக்கிக் கொண்டே போனான்.

முனிவர் சாந்தமாக ''இல்லையப்பா, ஒன்றுமே தெரியாத எனக்கே இவ்வளவு கஷ்டமாக இருக்கிறது. நீ இத்தனை வித்தைகளைக் கற்றுக் கொண்டிருக்கும் பொழுது, எவ்வளவு அதிகமாகக் கஷ்டப்பட வேண்டியிருக்கும் என்று நினைத்தால் பரிதாபமாக இருக்கிறது'' என்று வருந்

தினார்.

இதைக் கேட்ட விதுகனுக்கு முனிவர் ஏதோ, ஒன்றுக்கு ஒன்று பொருத்த மில்லாமல், முரண்பாடாகப் பேசுவது போல் தோன்றியது.

"நீர் அதைப் பற்றி ஒன்றும் கவலைப் பட வேண்டாம். நீர் எதை அடைய முயற் சிக்கிறீர், அதைச் சொல்லும், போதும்" என்றான்.

முனிவர், "நான் அடைய விரும்புவது ஒன்றும் அப்படி பெரிய விஷயம் இல்லை. ஆனால் அதை அடையும் வழிதான் மிகவும் கஷ்டமாக இருக்கிறது". விதுகன் பொறுமையிழந்து, "சரி முனிவரே, அது என்னவென்று சொல்லும்" என்றான்.

"ஒன்றுமில்லை. என் மனத்தை அங்கும் இங்கும் அலை பாய விடாமல் அடக்கி, ஆண்டவனையே நினைத்துக் கொண் டிருந்து விட்டு, பிறகு அந்த நினைப்பும் அழிந்து, எதையுமே நினைக்காமல், ஒரு நிமிடமாவது, ஒரே ஒரு நிமிடமாவது, நான் இறப்பதற்குள் நிர்மல்யமாக இருக்க விரும்புகிறேன்" என்றார் முனிவர்.

விதுகன் கட, கடவென்று சிரித்து விட்டு, "இவ்வளவுதானா? இதற்காகவா இருபது வருடங்களாகக் கஷ்டப்படுகிறீர்!" என்று சொல்லிவிட்டு, ஒரு மரத்தடியில் போய் உட்கார்ந்து கண்களை மூடிக் கொண்டு முயற்சி செய்து பார்த்தான். சில மணி நேரம் முயற்சி செய்தும் அவனால் முதல் கட்டத்தையே தாண்ட முடிய வில்லை. மேலும், மேலும் முயற்சி செய்து பார்த்தான். அவனுடைய மனம் அலை பாய்ந்து கொண்டேயிருந்தது. பிறகு எழுந்து வந்து முனிவரிடம், "ஒரு வாரத் திற்குள் நன்றாகப் பழகிவிட்டு வந்து உமக் கும் சொல்லித் தருகிறேன்" என்று சவால் விட்டு, விட்டு தன் சீடர்களுடன் அந்த இடத்தை விட்டுப் போனான்.

விதுகனுக்கு வெட்கமாக இருந்தது. தனக்கு இத்தனை வித்தைகள் தெரிந் திருந்தும், இந்த மனத்தைச் சிறிது நேரம் கூட தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளும் வித்தை தெரியவில்லையே; எப்படியும் இந்த வித்தையையும் கற்றுக் கொண்டு, ஒரு நாள் அந்த முனிவரிடம் போய்க் காட்ட வேண்டும் என்று உறுதி எடுத்துக் கொண்டு போனான். எத் தனையோ வருடங்கள் உருண்டு விட்டன. ஆனால் விதுகன் முனிவரிடம் திரும்பி வரவேயில்லை.



பிரான்ஸை 'பத்தாம் சார்லஸ்' என்ற மன்னன் ஆண்டு வந்தான். அப்போது இருந்த காலண்டர் முறையின்படி ஏப்ரல் 1ம் தேதிதான் புது ஆண்டு தொடங்கியது. ஆனால் பத்தாம் சார்லஸ் மன்னன் புதிய காலண்டர் முறைப்படி ஜனவரி முதல் தேதியே புத்தாண்டு ஆரம்பிக்கும் என்று அறிவித்தான்.

தன்னம்பிக்கையே சொத்து!

ஓய்வு!

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் ஒருமுறை நெல்லையிலிருந்து சென்னைக்குத் தனது காரில் வந்து கொண்டிருந்தார். அப்போது ஓர் இடத்தில் கார் மரத்தில் மோதி அப்பளமாய் நொறுங்கி விட்டது. இதனால் கலைவாணருக்கு லேசாய் காலில் அடிபட்டுவிட்டது. வெளியே வந்து விழுந்த அவர், தன் வெற்றிலைப் பெட்டியைத் தேடி எடுத்துக் கொண்டு ஒரு மரத்தின் நிழலில் உட்கார்ந்து கொண்டு வெற்றிலையைப் போட ஆரம்பித்தார். அப்போது அங்கு வந்த ஒருவர் அவரிடம், "என்னங்க, நீங்க கலைவாணர்தானே... இங்க ஏன் உட்கார்ந்திருக்கீங்க?" என்று கேட்டார். அதற்கு அவர், "ஆமாம்ப்பா... ரொம்ப தூரம் பயணம் செஞ்சதால எனக்கும், காருக்கும் களைப்பாயிடுச்சு. அதான் காரை மரத்துல சாய்ச்சு வச்சிட்டு ஓய்வெடுக்கிறேன்" என்றார்!

- ப. ராமகிருஷ்ணன்,
ஆவணத்தாங்கோட்டை.




* காமராஜர்

மூன்று முட்கள்!

தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதன் ஒருசமயம் உரை நிகழ்த்தும்போது "கடிகாரத்தில் மூன்று முட்கள். அதாவது மணியைக் காட்டுகின்ற முள், நிமிடத்தைக் காட்டுகின்ற முள், விநாடியைக் காட்டுகின்ற முள். இவற்றில் மணியைக் காட்டுகின்ற முள், இந்தியர்களுக்காக ஓடுவதாகவும், நிமிடத்தைக் காட்டுகின்ற முள் ஆங்கிலேயர்களுக்கு ஓடுவதாகவும் எண்ணிக் கொள்வேன். ஆனால் அந்த மூன்றாவது முள், வினாடியைக் காட்டுகின்ற முள் யாருக்காக ஓடுகிறது என்று எனக்கு வெகுநாட்களாகத் தெரியாமல் இருந்தது.

"சில வருடங்களுக்கு முன்பு ஜப்பான் நாட்டுக் கப்பல் ஒன்று சென்னைத் துறைமுகத்துக்கு வந்தபோது அந்தக் கப்பலின் கேப்டனைச் சந்திக்க விரும்பி அப்பாய்ன்ட்மெண்ட் கேட்டிருந்தேன். வாய்ப்புக் கிட்டி அவரைச் சந்தித்து கை குலுக்கி என் பெயர், ஊர், விவரம் சொல்லி முடிப்பதற்கும், அவர்கள் எனக்குக் கொடுத்திருந்த நேரம் முடிவதற்கும் சரியாக இருந்தது. நான் அவசரமாக அந்த அறையிலிருந்து வெளியேறி விட்டேன். அவர்கள் எனக்காகக் கொடுத்திருந்த நேரம் இருபது வினாடிகள். இருபது நிமிடங்கள் அல்ல.



* என்.எஸ்.கே.

பிரபலங்களின் வாழ்வில்...



* அலெக்சாண்டர்

அப்பொழுதான் நான் புரிந்து கொண்டேன். அந்த வினாடி காட்டுகின்ற முள் ஜப்பானியர்களுக்காக ஓடுகின்றது'' என்றார்.

- கே.என்.மகாலிங்கம், பாண்டிச்சேரி.

எளிமை...

ஒருசமயம் காங்கிரஸ் தொண்டர் ஒருவர் கல்யாணப் பத்திரிகையுடன் காமராஜரைக் காண வந்திருந்தார். ''எங்கள் இல்லத் திருமண விழாவிற்குக் கண்டிப்பாக வர வேண்டும்; நீங்கள்தான் தலைமை தாங்கி நடத்தித் தர வேண்டும்'' என்று பணிவுடன் கேட்டுக்கொண்டார்.



* கி.ஆ.பெ.வி.

''என்னால் வர முடியாது. எனக்கு வேறு வேலை இருக்கிறது'' என்று கூறி காமராஜர் மறுத்துவிட்டார். தொண்டர் வருத்தத்துடன் திரும்பிச் சென்றார்.

மணநாளும் வந்தது. காமராஜர் சரியான நேரத்தில் வந்து மணவிழாவில் கலந்து கொண்டு மணமக்களை ஆசிர்வதித்தார். நிகழ்ச்சி முடிந்தவுடன் தொண்டரைப் பார்த்து, ''அன்று பத்திரிகை கொடுக்கும்போதே கல்யாணத்திற்கு வர வேண்டும் என்று முடிவு செய்துவிட்டேன். நான் வருகிறேன் என்று சொன்னால், தடபுடலாக ஏற்பாடு செய்வாய்; மேஜை நாற்காலி, வரவேற்பு, பந்தல் அலங்காரம் என்று ஏகப்பட்ட செலவாகிவிடும். இதையெல்லாம் தவிர்த்து செலவைக் குறைக்கவே நான் வர மாட்டேன் என்று சொன்னேன்'' என்றார்.



* சர்ச்சில்

- ஞா. மாடசாமி, சென்னை

சொத்து

மாவீரர் அலெக்சாண்டர் சம்பாதித்த சொத்துகள் அனைத்தையும் நண்பர்களுக்குப் பிரித்து கொடுத்தபோது, ஒருவர் கேட்டார் : ''எல்லா சொத்துகளையும் கொடுத்து விட்டீர்களே! உங்களுக்கென்று எந்தச் சொத்து இருக்கிறது?''

''விலை மதிப்பில்லாத சொத்து என்னிடமிருக்கிறது'' என்று பதிலளித்தார் அலெக்சாண்டர்.

''என்ன அது?'' கேட்டார் நண்பர்.

''தன்னம்பிக்கை'' என்று ஒரே வார்த்தையில் அமைதியாக, அழுத்தமாகச் சொன்னார் அலெக்சாண்டர்.

- ஆர். ராஜலட்சுமி, கரூர்.

யாருக்கு விலை அதிகம்?

பிரிட்டனை எதிர்த்துப் போரிட்ட புரட்சி வீரர்களில் முக்கியமானவர் மைக்கேல் காலின்ஸ் என்ற அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். ஒரு முறை பிரிட்டிஷ் அரசு ''மைக்கேல் காலின்ஸை உயிருடனோ, பிணமாகவோ கொண்டு வந்து ஒப்படைத்தால் 5000 'பவுண்ட்கள்' பரிசாக அளிக்கப்படும் என அறிவித்தது.

பின்னர் ஒருமுறை வின்ஸ்டன் சர்ச்சிலின் வீட்டில் பிரிட்டிஷ் அரசுக்கும், மைக்கேல் காலின்ஸ் குழுவினருக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

அப்போது மைக்கேல் காலின்ஸ் திடீரென சர்ச்சிலிடம், ''நீங்கள் இரவு பகலாக என்னைத் தேடினீர்களே, அத்தோடு என் தலைக்கு 5000 பவுண்ட் விலையும் நிர்ணயித்திருந்தீர்கள் அல்லவா?'' என்று கோபமாகக் கேட்டார். அதைப் பொறுமையோடு கேட்ட சர்ச்சில், ''சற்றுப் பொறுங்கள்'' என்று சொல்லி விட்டு ஒரு விளம்பரத்தைக் காட்டினார். சர்ச்சில் இளைஞராக இருந்த போது ஆப்பிரிக்காவில் அகப்பட்டுப் பிறகு அவர்களிடமிருந்து தப்பி வந்து விட்டார். இதனால் அவர்கள் சர்ச்சிலை, 'உயிருடனோ அல்லது பிணமாகவோ கொண்டு வந்து ஒப்படைப்பவர்களுக்கு 25 பவுண்ட் பரிசாகக் கொடுக்கப்படும்' என்று விளம்பரம் செய்திருந்தார்கள். ''என்னைக் காட்டிலும் உங்களுக்குத்தான் நல்ல விலை!'' என்றார் சர்ச்சில்.

- அ. பேச்சியப்பன், ராஜபாளையம்.

சந்திரனில் பாடம்!



புதிர் உலகம்

1) ஒரு பள்ளிக்கூடத்தில் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்தார்கள். மொத்தம் 59 பேர் செல்வதாக இருந்தது. சுற்றுலாக்களுக்கு வண்டி வழங்கும் ஒரு நிறுவனத்துடன் தொடர்பு கொண்டார் தலைமையாசிரியர். அந்த நிறுவனத்தினர் தங்களிடம் 9 பேர் அமரக்கூடிய வேன்களும், 4 பேர் மட்டும் அமரக்கூடிய கார்களும் இருப்பதாகத் தெரிவித்து சில கார்களையும், சில வேன்களையும் அனுப்பி வைத்தனர். 59 பேருக்கும் இடம் கிடைத்தது. எந்த இடமும் காலியாக இருக்கவில்லை. அந்த நிறுவனம் எத்தனை கார்களையும், எத்தனை வேன்களையும் அனுப்பியது எனக் கூறுங்களேன்?

- ஆர். பிரசன்னா, கரூர்.


2) கிழவர் ஒருவருக்குப் பிள்ளைகளும், பேரர்களும், கொள்ளுப் பேரர்களும், எள்ளுப் பேரர்களும் சேர்த்து மொத்தம் 340 பேர் இருந்தனர். ஒவ்வொரு தலைமுறையினருக்கும் சம எண்ணிக்கையில் பிள்ளைகள் பிறந்தன. ஆனால் எள்ளுப் பேரர்களுக்கு மட்டும் இன்னும் மணமாகவில்லை. இப்போது சொல்லுங்கள்! கிழவர் பெற்றெடுத்த பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

- சிவ. மணவழகி, மயிலாடுதுறை.

3) நான் ஒரு கனவு கண்டேன். அதில் எங்கள் வகுப்பு மாணவர்கள் அனைவரும் சந்திரனுக்குச் சென்றோம். அங்கு வந்த எங்கள் ஆசிரியர் 'சந்திரன்' பற்றிய பாடம் நடத்தினார். எங்களுக்கு மிகவும் எளிதாகப் புரிந்தது. இக் கனவிலுள்ள நடைமுறைத் தவறு என்ன?

- மு. மோசஸ் பிரவின் ஞானக்குமார், பத்தாம் வகுப்பு, ஸ்வார்ட்ஸ் மெட்ரிக் பள்ளி, இராமநாதபுரம்.

4) கடிகாரப் புதிர்



ஒரு கடிகாரத்தின் முகப்பை இரண்டு நேர்கோடுகளைக் கொண்டு மூன்று துண்டுகளாகப் பிரிக்கவும். கிடைக்கும் ஒவ்வொரு துண்டிலுமுள்ள எண்களைக் கூட்டவும். இந்தத் தொகை எல்லாத் துண்டுகளுக்கும் சமமாக வருதல் வேண்டும். எங்கே முயலுங்கள் பார்ப்போம்!

- சி. மணவழகி, மயிலாடுதுறை



5) என்னிடம் ஒரு அதிசய, அற்புதமான பாத்திரம் உள்ளது. அதனுள் நாம் எத்தனை இட்லிகள் வைக்கிறோமோ, ஒரு நிமிடத்தில் அவை இரட்டிப்பாகும்.

இந்த அடிப்படையில், ஒரு மணி நேரத்தில்

அப் பாத்திரத்தில் 1000 இட்லிகள் இருந்தன. அப்படியெனில் எப்போது அப் பாத்திரத்தில் 500 இட்லிகள் இருந்திருக்கும்?

- எஸ். வினோத், சங்கரன்கோவில்.

6) ஒரு போன் நம்பர் 7 இலக்கங்களை உடையது. முதல் எண்ணையும் கடைசி எண்ணையும் கூட்டினால் வரும் கூட்டுத் தொகையும், 2-வது, 4-வது, 6-வது எண்களின் கூட்டுத் தொகையும் சமம்.

முதல் எண்ணையும் 2-வது எண்ணையும் கூட்டினால் 3-வது எண் கிடைக்கும். 3-வது எண்ணிலிருந்து 2-வது எண்ணைக் கழித்தால் முதல் எண் கிடைக்கும். 4-வது, 5-வது, 6-வது எண்களைக் கூட்டினாலும் 3-வது எண் கிடைக்கும்.

2-வது, 4-வது, 6-வது எண்கள் சம மதிப்புள்ள ஒரே எண்களே. 3-வது எண்ணில் பாதி கடைசி எண் ஆகும். எங்கே, கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!

- [illegible], சென்னை.



புதிர் உலகம் விடைகள் :

1) 3 [illegible], 8 [illegible]

2) கிழவர் பெற்றெடுத்த பிள்ளைகளின் எண்ணிக்கை 4. வாரிசு விவரம்:

பிள்ளைகள்	4	
பேரர்கள்	16	(4x4)
கொள்ளுப் பேரர்கள்	64	(16x4)
எள்ளுப் பேரர்கள்	256	(64x4)
மொத்தப் பேர்	340	

3) சந்திரனில் காற்று இல்லாததால் ஆசிரியர் பேசிய சொற்கள் எதுவும் எங்கள் காதுகளுக்கு எட்டாது. எனவே பாடம் புரிந்திருக்காது.

4) கடிகார எண்களின் கூட்டுத் தொகை

1+2+3...12 = 78



முதல் துண்டு

11+12+1+2 = 26

இரண்டாவது துண்டு

10+9+3+4 = 26


மூன்றாவது துண்டு

8 + 7 + 6 + 5 = 26

5) 50வது நிமிடத்தில். (அதன் பின் 60வது நிமிடத்தில் அவை இரட்டிப்பாகி 1000 இட்லிகள் ஆகிவிடும்.)

6) போன் நம்பர் 5383234

குறுக்கெழுத்துப் புதிர் விடை





வண்ணத்துப்பூச்சி ஏன் உயரமாகப் பறப்பதில்லை?

அன்புள்ள ஜக்கு...





● எஸ். அமீர்ஜான், சென்னை

? ஜக்கு, 'சைத்தான்' தெரியும். அது என்ன 'பைத் தான்'?

அனகோண்டா பாம்பைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதேபோல் ஒரு வகைப் பாம்புதான் இந்தப் பைத்தான். இவை இரண்டுக்குமே நச்சுச் சுரப்பி கிடையாது. பைத்தான் ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் மட்டுமே கண்டறியப்பட்டுள்ளது அமீர்ஜான்.

● எம். காயத்ரி, காரமடை

? எலும்புகளை வளைக்க முடியுமா ஜக்கு?

முடியாது காயத்ரி. கை, கால்கள் மற்றும் உடலின் பிற பாகங்களை நாம் அசைக்கும்போது எலும்பு வளைவதில்லை. இரண்டு எலும்புகள் சேரும் இடத்தில் மட்டுமே நம்மால் நீட்ட, மடக்க முடியும்.

● ப. காளிதாசன், நீர் விளங்குளம்

? கிரிக்கெட் விளையாட்டில் பேட் செய்தவர் அடிக்கும் பந்து காணாமல் போய்விட்டால், அதற்கு எத்தனை ரன்கள் கிடைக்கும் ஜக்கு?

பந்து பவுண்டரி கோட்டைத் தாண்டி விழுந்து காணாமல் போனால் ஆறு ரன்கள் கிடைக்கும்.

● ப. சிவசங்கரி, மன்னார்குடி

? பெரியவர்கள், 'முளைச்சு மூணு இலை விடலை' என்று அடிக்கடி கூறுகிறார்கள். அப்படி என்றால் என்ன ஜக்கு?

அதிகப்பிரசங்கித்தனமாக ஏதாவது காரியம் செய்யும் போதோ, அல்லது வயதுக்கு மீறிய செயலைச் செய்யும் போதோ இப்படி குறிப்பிடுவது வழக்கம். 'இந்தச் சின்ன வயதில் இப்படி ஒரு காரியமா?' என்ற தொனியில் 'முளைச்சு மூணு இலை விடலை...' என்கின்றனர்.

● வி. ஸ்டெல்லா ராணி, குளித்தலை

? வண்ணத்துப் பூச்சி ஏன் உயரமாகப் பறப்பதில்லை ஜக்கு?


வண்ணத்துப் பூச்சி மற்ற பறவைகளைப் போல் உயரமாகவோ, நீண்ட தூரமோ பறக்க முடியாது. இவற்றுக்கு வலுவான இறக்கையோ, பறக்க உதவும் தசைகளோ கிடையாது. மெல்லிய இறக்கைகள்தான் உண்டு. வண்ணத்துப் பூச்சிக்கு உயரமாகப் பறக்க வேண்டிய அவசியமும் இல்லை. அவற்றிற்கான வாழிடம் உணவு கிடைக்கக் கூடிய இடத்துக்குப் பக்கத்திலேயே அமைகிறது.



* பைத்தான்

ஆடு ஓவியம் அசத்தல்!

கடிதங்கள்



புதிய தகவல்கள்...

எங்கள் பள்ளி மாணவர்களின் ஓவியங்கள் கோகுலத்தில் வந்தது கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தோம். வரலாற்றுச் செய்திகள் அருமை. சார்லி சாப்ளின் பற்றி நிறையத் தகவல்கள் புதிதாக இருந்தன.

- மாணவர்கள், சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சிக்கோட்டை, விழுப்புரம் மாவட்டம்

சாத்துக்குடி சூப்பர்!

'**கா**ட்டில் படப்பிடிப்பு' அருமையான பாடல். ஆழி அவர்களின் படக்கதை நன்றாக இருந்தது. கழுதையைப் பற்றி நிறையத் தகவல்களை அறிந்து கொண்டேன். சாத்துக்குடி இளவரசி கதை சூப்பர்!

- எஸ்.பி. கண்ணன், பூங்குணம், பண்ருட்டி

பிடித்து விட்டது!

கோகுலத்தை என்னைப் போன்ற சிறுவர்கள் மட்டுமின்றி பெரியவர்களும் விரும்பிப் படிக்கிறார்கள். இதில் வரும் போட்டிகளும், கதைகளும் எனக்கு மிகவும் பிடித்து இருக்கிறது.

- எஸ்.பி. சத்தியநாதன், எட்டாம் வகுப்பு,
ஸ்ரீ ராமகிருஷ்ணாமிஷன் பள்ளி, சென்னை

மக்ரூன் போல்...

தூத்துக்குடி ஸ்பெஷல் மக்ரூன் போல் ரொம்பச் சுவையாக இருந்தது. எத்தனை, எத்தனை?, வழி காட்டுங்கள், ஜோடி சேருங்கள் போன்ற பகுதிகளைப் போட்டிப் போட்டுக் கொண்டு செய்து பார்த்தோம்.

- கே. பவ்யாஸ்ரீ, எட்டாம் வகுப்பு,
துறையூர்

வியந்தேன்!

ஆடு மேயுது... என்ற தலைப்பில் வெளியான ஓவியங்கள் கண்ணுக்கு விருந்து. எஸ். சுஷில் வரைந்த ஓவியம் கார்ட்டூன் டைப்பில் அசத்தலாக இருந்தது. சிலேடைச் சாமியாரின் சிலேடையை எண்ணி வியந்தேன்.

- எஸ்.கே. வனஜா, ஒன்பதாம் வகுப்பு,
மேல்மருவத்தூர்

சிந்திக்க...

கிறிஸ்துமஸ் விருந்து கதையும், கிறிஸ்துமஸ் செய்திகளும் சுவையாக இருந்தன. படங்களும் அருமை. ஜக்குவின் பதில்கள் சிந்திக்க வைக்கின்றன.

- அ. தமிழரசி, எண்ணூர்

தவறு...

நெட் பிட்ஸ் பகுதியில் ஒரு தவறு. நம் நாட்டு அசோகத் தூணில் மூன்று சிங்க முத்திரை என்று பிரசுரமாகியுள்ளது. நம் இந்திய அரசின் சின்னம் நான்கு சிங்க முத்திரை கொண்டது. சரி தானே?

- சே. நம்பி கிருஷ்ணன்,
ஒன்பதாம் வகுப்பு, திருக்குறுங்குடி

தவறுக்கு வருந்துகிறோம். தாங்கள் குறிப்பிட்டபடி நான்கு சிங்கங்கள் என்பதே சரி, நம்பி கிருஷ்ணன். நன்றி.

- ஆர்



விளையாட்டு உலகம்

ஓய்வு பெறுகிறார் ஸ்டீவ் வாஹ்!



• ஸ்டீவ் வாஹ்



கிரிக்கெட் உலகில் மிகச் சிறந்த கேப்டன்களில் ஒருவர் ஸ்டீவ் வாஹ். ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியைப் புகழின் உச்சிக்குக் கொண்டு சென்ற பெருமை ஸ்டீவ் வாஹ்க்கு உண்டு. கடந்த சில ஆண்டுகளாக டெஸ்ட் அணி கேப்டனாக இருந்து வந்த வாஹ் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

ஸ்டீவ் வாஹின் உடல் தகுதியும், ஆட்டத்திறனும் நன்றாக இருக்கிறது என்றாலும் புகழின் உச்சியில் இருக்கும்போதே ஓய்வு பெற வேண்டும் எனத் தீர்மானித்துவிட்டதாகக் கூறியிருக்கிறார்.

வாஹ் தலைமையேற்ற 53 ஆட்டங்களில் 40 ஆட்டங்களில் வெற்றி பெற்றிருக்கிறார். 8 போட்டிகளில் தோல்வியும் 5 போட்டிகளில் டிரா செய்தும் இருக்கிறார்.

1985ஆம் ஆண்டில் இந்தியாவுடனான டெஸ்ட் போட்டியில் அறிமுகமானார் வாஹ். 164 டெஸ்ட் போட்டிகளில் 32 சதங்கள் உட்பட 10,660 ரன்களைக் குவித்திருக்கிறார். அதிக ரன்களைக் குவித்தவர்கள் பட்டியலில் ஆலன் பார்டருக்கு அடுத்த இடத்தில் இருக்கிறார். அதிக சதங்கள் அடித்தவர்கள் பட்டியலில் சுனில் கவாஸ்கருக்கு அடுத்த இடத்திலும் வருகிறார்.

325 ஒரு தினப் போட்டிகளில் விளையாடி 7,569 ரன்களை எடுத்திருக்கிறார்.

16 டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்து வெற்றி பெற்று வரலாற்று சாதனை படைத்திருக்கிறார். 1999ஆம் ஆண்டு நடந்த உலகக் கோப்பை போட்டியில் ஆஸ்திரேலிய அணிக்குத் தலைமை ஏற்று உலகக் கோப்பையைப் பெற்றுத் தந்திருக்கிறார் வாஹ். ஆஸ்திரேலியாவில் நடைபெறும் இந்தியாவுடனான டெஸ்ட் தொடர் தான் வாஹ் விளையாடும் கடைசித் தொடர்.

ஓவியப் போட்டி

வண்ண மீன்கள் தான் இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு. மீன்கள் கண்ணாடித் தொட்டியில் இருக்கலாம்; ஓடைகளில் நீந்தலாம்... இப்படி எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். படம் வண்ணத்தில் தான் இருக்க வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசித் தேதி 07.01.2004.

கோகுலம் – ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்®

இணைந்து வழங்கும் 'புதிய பாரதம்'

'புதிய பாரதம்' நிகழ்ச்சியைப் பள்ளிகளில் நடத்தி வருகிறோம். நவம்பர் 24ந் தேதி சென்னை - பனகல் பார்க்கில் உள்ள ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன் (மெயின்) பள்ளியில் இரண்டாவது நிகழ்ச்சி நடைபெற்றது. இருநூற்றி ஐம்பது மாணவர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

'ஓவியக் கலை' என்ற தலைப்பில் பிரபல ஓவியர் லலிதா தியாகராஜன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

ஓவியக் கலை




ஆய கலைகள் 64. இதில் ஓவியமும் ஒரு கலை. ஓவியக் கலை கற்காலத்திலிருந்தே அதாவது மனிதன் குகைகளில் வசிக்கக் கூடிய காலத்திலிருந்தே இருந்து வந்துள்ளது. அந்த ஓவியங்களிலிருந்து தான் அக்கால மக்களின் வாழ்க்கை முறையை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

சித்திரமும் கைப்பழக்கமும் என்பர். ஓவியம் வரைய, வரையத் தான் வரும். ஓவியக் கலைக்கு முக்கியத் தேவை கற்பனை வளமும் ஆர்வமும் தான்.

முதலில் கோட்டு ஓவியங்களை வரைந்து பழக வேண்டும். ஓவியத்துக்கென எந்தக் கட்டுப்பாடும் கிடையாது. எழுத்து, எண்களை வைத்துக் கூட உங்கள் கற்பனைக் கேற்றவாறு உருவங்களை வரையலாம்.

வட்டம் போட்டு அதில் ஏதாவது உருவங்களை வரையச் சொன்னார் லலிதா. சூரியன், மனிதத் தலை, யானை, நிலா என ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு விதத்தில் தங்கள் கற்பனைகளை வெளிக்







* ஓவியர் லலிதா தியாகராஜன்

காட்டினர்.

நேரம் செல்லச் செல்ல மாணவர்களின் ஆர்வம் அதிகரிக்க, சுரும்பல கையை ஏராளமான மாணவர்கள் முற்றுகையிட்டனர். பள்ளி நேரம் முடிய, நிகழ்ச்சியை வலுக்கட்டாயமாக முடித்துக் கொண்டு கிளம்பினோம்.

ஓவிய ஆசிரியர் குருநாதன் வரவேற்றுப் பேசினார். தலைமை ஆசிரியர், சிறப்பு விருந்தினர், பங்கேற்ற மாணவர்கள் அனைவருக்கும் கோகுலம் - ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் சார்பாகப் பரிசுகள் வழங்கப்பட்டன.

படங்கள் : ஸ்ரீஹரி





முத்துவும் நான்கு

அறுவடை நேரம் அது. முத்து என்ற விவசாயி, இரவில் தன் நிலத்தைக் காவல் காத்துக் கொண்டு வந்தான். அந்த வருடம் நிலத்தில் அமோக விளைச்சல். நிலத்தில் சாகுபடி நிறைய இருந்ததால், தானியங்களைக் கள்வர்கள் களவாடிப் போகாதவாறு, கண்ணும் கருத்துமாகக் காவல் காத்தான். நாட்கள் சென்றன. ஒரு நாள் இரவு முத்து அதிகம் வேலை செய்ததன் காரணமாக அயர்ந்து உறங்கி விட்டான். அந்தச் சமயம் நான்கு திருடர்கள் வயலில் நுழைந்து தானியங்களை அறுத்து சாக்குகளில் வேகமாக நிரப்பிக் கொண்டிருந்தனர். சத்தம் கேட்டு 'சட்'டென்று விழித்துக் கொண்டான் முத்து. நான்கு திருடர்கள் தானியங்களை எடுத்துக் கொண்டு இருப்பதைக் கண்டதும் பதறிப் போனான். உடனே அவன் மூளை வேலை செய்தது. 'திருடர்களோ நான்கு பேர். தானோ ஒரே ஆள். அவர்களிடம் மாட்டிக் கொள்ளாது, தகுந்த திட்டம் போட்டு, அவர்களையும் பிடிக்க வேண்டும், தானியங்களையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்' என்று தீர்மானித்தான். மெதுவாக எழுந்தான்.

"நண்பர்களே! உங்களுக்கு இந்தத் தானியங்கள் தேவைப் பட்டிருந்தால் என்னையும் எழுப்பி இருக்கலாமே! நானும் உங்களுக்குக் கதிரை அறுக்க உதவி செய்திருப்பேனே. இந்தத் தானியங்களை நாங்கள் உபயோகிப்பதே இல்லை" என்று சொல்லவும், திருடர்கள் ஆச்சர்யத்துடன் பார்த்தனர். முத்து சொல்வதை உண்மை என்று நம்பினர். பிறகு அந்த நான்கு பேரும் தங்களை அறிமுகப் படுத்திக் கொண்டனர். "நீங்கள் இந்தத் தானியங்களை எடுத்துச் செல்வதில் எனக்கு ஆட்சேபணை ஒன்றும் இல்லை. ஆனால் பொருள்களை அதிக விலைக்கு விற்று ஏராளமாக லாபம் சம்பாதிக்கும் வியாபாரியும் உங்களில் ஒருவர். அவர் இதை விற்று லாபம் சம்பாதிக்கவே எண்ணுவார். இருந்தாலும் வியாபாரியை மட்டும் அழைத்துச் சென்று இவருக்கு ஒரு பங்கு கொடுக்கலாமா? என்று என் அம்மாவிடம் கேட்டுவிட்டு வந்து விடுகிறேன். அவரை மட்டும் என்னுடன் அனுப்பி வையுங்கள்" என்றான் முத்து. மற்ற மூவரும் "சரி" என சம்மதித்தனர்.

வியாபாரியும், விவசாயியுடன் சென்றான். கொஞ்ச தூரம் சென்றதும், ஒரு மரத்தில் அந்த வியாபாரியைக் கட்டிப் போட்டான் முத்து. பிறகு திரும்பி வந்தான். "வியாபாரிக்குத் தானியத்தை எடுத்துச் செல்ல என் அம்மா சம்மதித்து



திருடர்களும்

ஆர். சாரதா

விட்டார். அவர் என் வீட்டில் அம்மாவுடன் பேசிக் கொண்டிருக்கிறார். உங்களில் ஒருவர் பணக்காரர் என்கிறீர்கள். பணக்காரர் பணம் இருந்தும் ஏன் இப்படி ஆசைப்படுகிறார் என்று புரியவில்லை. இருந்தாலும் அதற்கான காரணத்தைச் சொல்லி என் அம்மாவிடம் சம்மதம் வாங்கிவிடுவார் என்று நம்புகிறேன்'' என்றான் முத்து. உடனே பணக்காரனை மற்ற இருவரும் போய் வரச் சொன்னார்கள். அவனையும் மரத்தில் கட்டிப் போட்டான் முத்து.

இரண்டு பேரில் ஒருவன் ஏன் அவர்கள் திரும்பி வரவில்லை என்று கேட்கவும், ''அம்மா அவர்களுக்கு உணவு அளித்துக் கொண்டிருக்கிறார்'' என்றான். ''ஐயோ! எங்களுக்கும் பசிக்கிறதே'' என்றனர் இருவரும். ''நிச்சயம் பசிக்கும் இவ்வளவு நேரம் வேலை செய்திருக்கிறீர்களே! ஆனால் இரண்டு பேரையும் ஒரே சமயத்தில் அழைத்துச் சென்றால் நீங்கள் கட்டி வைத்திருக்கும் தானியங்களை வேறு யாராவது எடுத்துச் சென்று விட்டால் என்ன செய்வது?




அதனால் ஒருவர் என்னுடன் வாருங்கள். ஒருவர் காவல் இருங்கள். அவர்கள் வந்த பிறகு மற்றவர் சாப்பிடச் செல்லலாம்'' என்று முத்து சொல்லவும் ''சரி, சரி'' என்று வேகமாகத் தலையாட்டினர் இருவரும்.

மூன்றாமவனை அழைத்துச் சென்ற முத்து அவனையும் ஒரு மரத்தில் நன்றாகக் கட்டிப் போட்டான். இனிமேல் ஒருவன்தான் இருக்கிறான். அவனை ஒருகை பார்த்துவிடலாம் என்று எண்ணிக் கொண்டே வந்தான் முத்து. அதற்குள் வயலில் தனியாக இருந்த திருடனுக்குப் பேராசை வந்தது. சரி! அவர்கள் வருவதற்குள் நாமே எல்லாவற்றையும் எடுத்துச் சென்றுவிடலாம் என்று எண்ணி வேக வேகமாகத் தானிய மூட்டைகளை மறைவாக வைத்திருந்த வண்டியில் ஏற்றிக் கொண்டிருந்தான். ''ஐயோ, திருடன், ஐயோ திருடன்!'' என்று முத்து உரக்கக் கத்தவும், ஊர் ஜனங்கள் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்து வந்தனர். கூட்டத்தைக் கண்டதும் பயந்து போய் தப்பித்தோம் பிழைத்தோம் என்று தலைதெறிக்க ஓட்டமாக ஓடினான் திருடன். ஆனால் ஊர் மக்கள் அவனை விட்டால் தானே! அவனைப் பிடித்து நையப் புடைத்தனர். மரங்களில் கட்டப்பட்டிருந்த மற்ற மூவரும் 'திரு திரு' வென விழித்துக் கொண்டு எப்படி தப்பிப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தனர்.

திருடர்களைப் பிடித்ததும், தானியங்களைக் களவு போகாமல் காத்த மகிழ்ச்சியிலும் முத்து வீடு திரும்பினான். ●


சூரியகாந்தி



மூன்றாம் பரிசு :
ஆர். சதீஷ் ப்ரீத்தனா,
எஸ்.எஃப்.எஸ். மெட்ரிக்குலேஷன்
பள்ளி, புதுக்கோட்டை



முதல் பரிசு :
து. இலக்கியா,
பதினோராம் வகுப்பு,
கே.வெங்கடேசலு மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி, கோவை



இரண்டாம் பரிசு :
கே.எஸ். கண்ணன்,
இராசிபுரம், நாமக்கல் மாவட்டம்



வண்ணத்தூரிகை முடிவு

டிசம்பர் இதழில் 'சூரியகாந்தி பூக்கள்' என்ற தலைப்பில் போட்டி அறிவித்திருந்தோம். பரிசு பெற்ற ஓவியங்கள் இங்கே...



ஆறுதல் பரிசு :
சு. வரலக்ஷ்மி, ஐந்தாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி,
விழுப்புரம் மாவட்டம்.

ஆறுதல் பரிசு :
டி. எபனேசர் இராஜதுரை,
நான்காம் வகுப்பு,
T.D.T.A. தொடக்கப்பள்ளி,
கீழவெள்ளமடம், நாசரேத்,
தூத்துக்குடி மாவட்டம்.



"வரி வேண்டாம்; வசனம் பேசு!"





வசனம்...

எங்கள் ஊரில் ஊர்த் திருவிழா நடந்தது. கிராமத்து இளைஞர்கள் நாடகம் போட்டார்கள். அதில் இரண்டு பேர் மேடையேறினார்கள். ஒருவர் கட்டபொம்மனாகவும் மற்றவர் ஜாக்சன் துரையாகவும். கட்டபொம்மன் கம்பீரமாக மேடையேறினார். பின்னால் மேடையேறிய ஜாக்சன் துரை வேகமாக "நீர்தான் கட்ட பொம்மன் என்பவரோ?" என்று கேட்டார். "ஆமாம்! நீர்தான் ஜாக்சன் துரையோ!" என்ற கட்டபொம்மன் அடுத்த வசனத்தை மறந்து திகைத்து நின்றார். ஜாக்சன் துரை "வரி தராவிட்டால் பரவாயில்லை. வசனத்தை ஒழுங்காகச் சொல்" என்று மிரட்டலாய் சொந்த வசனம் பேசினார். கட்டபொம்மன் லேசுபட்டவரா என்ன? "வரியை மட்டுமல்லடா, வசனத்தையும் சொல்லமாட்டேன் போடா" என்று சொல்ல விழா சிரிப்புக் கூடமாகிவிட்டது.

- டேனியல் லியோ பிரபு, மதுரை

உடன் படிப்பவர்கள்

ஐந்தாம் வகுப்பு படிக்கும் கருப்பசாமியிடம் ஒரு நாள் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது "உன்னுடன் யார் யாரெல்லாம் படிக்கிறாங்க?" என்று கேட்டேன். அதற்கு அவன், "கட்டபொம்மன், பாரதி, சுபாஸ் சந்திரபோஸ் இப்படி நிறையப் பேர் என்கூட படிக்கிறாங்க" என்றான். எனக்குத் திகைப்பு ஏற்பட்டது. விளையாட்டாக, பாடப்புத்தகத்தில் படித்த பெயர்களைக் கூறுகிறானோ என்று சந்தேகப்பட்டேன். மேலும் விசாரித்ததில் உண்மையிலேயே அந்தப் பெயர்களில் அவனுடன் மாணவர்கள் படிப்பது தெளிவாகியது. அதை இப்போது நினைத்தாலும் ஆச்சர்யமாக இருக்கிறது.

- அ. பேச்சியப்பன், ராஜபாளையம்

வலி...




என் அப்பா மிகவும் நேர்மையானவர். ஒரு தடவை அப்பாவுடன் கடைக்குச் சென்று 'கோலி சோடா' வாங்கினேன். கை தவறுதலாகக் கீழே போட்டு உடைத்தேன். பயத்தில் அப்பாவைப் பார்த்தேன். அப்பா கடைக்காரரிடம் சோடாவுக்கும் உடைந்த பாட்டிலுக்கும் காசு கொடுத்தார். அம்பத்தூரிலிருந்து ஆவடி வரை டிக்கெட் காசு குறைந்ததால் நடந்தே அழைத்துச் சென்றார். அவர் அடிக்காத வலி என் மனதில் உணர்ந்தேன்.

- சுப்பிரமணியம், சென்னை

நினைவில் நின்றவை...



1000/- ரூபாய் பரிசு!




பள்ளி மாணவர்களுக்கு உதவும் வகையில் ஒவ்வொரு மாதமும் இப்போட்டி நடத்தப்படுகிறது. இந்தப் போட்டியில் பங்கேற்பது மிகவும் சுலபம். சரியான விடைகளைத் தேடிக் கண்டுபிடித்து எழுத வேண்டும். பெற்றோர் கையொப்பம் கண்டிப்பாக இருக்க வேண்டும். முகவரி கூப்பனை ஒட்டி உங்கள் முழு முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மொத்தப் பரிசு ரூ.1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசித் தேதி 20.01.2004

இந்த மாதப் போட்டி
ஸ்விட்சர்லாந்து



1. தலைநகரம் ....
2. முக்கிய நகரங்கள் ...., ...
3. மொழிகள் ...., ...
4. கரன்ஸி ....
5. பிரபலமான பொருட்கள்

..................................., ...

6.  இது எந்த நாட்டுக் கொடி?

ஆசிரியர்,
கோகுலம்,
கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.



GOKULAM

The magazine for children

CALENDAR 2004

JANUARY 2004 Rs.6/-

CELEBRATE NEW YEAR WITH A CHINESE PLAY

-Cover Story

NEW SERIAL

THE GUAVA TREE CAPER



SPECIAL SUPPLEMENT 16-PAGE BOOKLET BY FIRST TIME WRITERS!

For Subscriptions mail to :
Gokulam, 47-NP, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600097
E-mail : subscription@kalkiweekly.com



வாகை சூட வயது தடையில்லை!

"இந்திய அணியில் இடம் பெறுவேன்!"

கடலையே வெறித்துப் பார்த்துக் கொண்டு கரையில் உட்கார்ந்து கொண்டிருந்தான் அந்தச் சிறுவன். "என்னடா முரளி, காலையிலேயே இங்கே வந்துட்ட?" என்றார்கள் வலைகளை காயப் போட்டுக் கொண்டிருந்த அவனது உறவினர்கள். "அப்பா ரொம்ப விடியலிலேயே கடலுக்குப் போயிட்டார். இன்னிக்கு எனக்கு கிரிக்கெட் பேட் வாங்கித் தருவதாகச் சொல்லியிருக்கிறார். அவருக்காகத் தான் காத்துக் கொண்டிருக்கிறேன்" என்றான் முரளி. சுள்ளென அடித்துக் கொண்டிருந்த காலை வெயிலால் முரளியின் முகத்தில் முத்து முத்தாக வியர்வைப் பூக்கள். தூரத்தில் புள்ளியாகத் தெரிந்த கட்டுமரம் நெருங்கி நெருங்கி வந்தது. "அப்பா வந்தாச்சு... அப்பா வந்தாச்சு.." என்று அலைகளூடே ஓடினான் முரளி. கட்டுமரத்தைக் கரையில் ஒதுக்கிவிட்டு கூடையில் இருந்த மீன்களை இறக்கி வைக்க, வியாபாரிகள் மொய்த்துக் கொண்டனர். பணம் கைக்கு வந்தவுடன் கடைக்குக் கிளம்பிவிட்டனர் அப்பாவும், மகனும்.

அன்று மிகக் குறைவான விலையில் வாங்கிய புது பேட்டில் கிரிக்கெட் போட்டியில் சக்கைப் போடு போட்டான் முரளி. அது ஒரு துவக்கம்தான். மெரினா கடற்கரை உள் சாலைகளையே சேப்பாக்கம் மைதானமாக நினைத்து ஆடிய சிறுவனுக்கு அடுத்த சில வருடங்களில், சேப்பாக்கம் மைதானத்திலேயே ஆடும் அரிய வாய்ப்புக் கிடைத்தது. சென்னை நகர அணிக்கும், மாவட்ட அணிக்கும் நடந்த போட்டியில் 113 ரன்கள் அடித்து அனைவரையும் ஆச்சரியத்துடன் பார்க்க வைத்தான் முரளி. இன்று சென்னை கிரிக்கெட் வட்டாரத்தில் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரமாகப் பார்க்கக் கூடிய மிகச் சில ஆட்டக்காரர்களில் முரளியும் உண்டு.

மெரினா கடற்கரைப் பகுதியில் பக்கிங்காம் கால்வாயை ஒட்டி பழனியம்மன் கோயில் பகுதி ஒரு மீனவர் குப்பம். இங்கு தான் முரளியின் வீடு. கடற்



• முரளி



கரைக் காற்றோடு, இங்கு கிரிக்கெட்டும் கலந்திருக்கிறது என்று சொல்லலாம். இதற்குக் காரணம் அருகில் இருக்கும் சேப்பாக்கம் மைதானம். அங்கு ஆவலைத் தூண்டக் கூடிய வகையில் நடக்கும் போட்டிகள். கடற்கரை மண் சாலையில் தான் துவங்கியது முரளியின் கிரிக்கெட் பயணம். அந்தப் பயணம் மெரினாவில் தொடர்ந்து, பின்னர் மாநிலக் கல்லூரி மைதானத்தில் சங்கமமாகி, இப்போது சேப் பாக்கம் 'பி' பிட்சிங் பிராக்டீஸ் செய்வதில் வந்து நிற்கிறது. அப்பா சேகர் தினமும் கடலுக்குச் சென்றால்தான் காசு பார்க்க முடியும். "நல்ல பள்ளியில் சேர்த்துவிட் டால் பள்ளியின் டீம் மூலமாகப் பையன் முன்னேற வாய்ப்புண்டு" என்று சிலர் யோசனை சொல்ல, சிபாரிசு பிடித்து முரளியை ஹிந்து மேல்நிலைப் பள்ளியில் சேர்த்துவிட்டார் சேகர். பள்ளியில் முரளியை ஊக்குவித்து தயார் செய்து கொண்டிருக்கிறார் பி.டி. மாஸ்டர் ஆசைத் தம்பி. பள்ளிகளுக்குள் நடக்கும் போட்டி களில் முரளி பதித்துள்ள முத்திரைகள் நிறைய. இரண்டு வருடங்களில் ஆறு சதம்.

குறிப்பாக சென்னை கிறித்துவக் கல்லூரி பள்ளியுடன் நடந்த போட்டியில் 251 ரன்கள் அடித்து சாதனை புரிந்தார். ஆதர்ஷ் பள்ளியுடன் நடந்த போட்டியில் அவுட்டாகாமல் 125. பெங்களூரில் நடந்த போட்டியில் 193. பேட்டிங்கில் வெளுத்து வாங்குவது ஒரு பக்கம் இருக்க, சுழல் பந்து வீசுவதிலும் முரளி முன்னணியில் இருக்கிறார். இவரது ஆட்டத் திறமையால் ஐந்தாவது டிவிஷன் ஆட்டத்திலிருந்து இப்போது மூன்றாவது டிவிஷனில் சென்னை துறைமுக அணிக்காக ஆடிக் கொண்டிருக்கிறார்.

"சென்ற வருடம் மே மாதம் நடந்த ஒரு போட்டியை என்னால் மறக்க முடியாது. நான் ஒரு முனையில் ஆடிக் கொண் டிருக்க எதிர் முனையில் விக்கெட்டுகள் வீழ்ந்து கொண்டிருந்தன. எட்டு விக் கெட்டுகள் விழ ஓவர்களும் முடிவுக்கு வந்து கொண்டிருந்தன. வெற்றி பெற இரண்டு பந்துகளில் இரண்டு ரன்கள் அடிக்க வேண்டும். என் அணியினர் காலரி யில் பயந்தவாறு கூச்சல் போட்டுக் கொண் டிருந்தனர். ஒரு பவுண்டரி அடித்து அணிக்கு வெற்றி தேடிக் கொடுத்தேன். டன்லப் மைதானத்தில் நடந்த அந்தப் போட்டியை மறக்க முடியாது" என்றார் முரளி.

முரளிக்குப் பிடித்த ஆட்டக்காரர்கள் சச்சினும், மார்ட்டினும் (ஆஸ்திரேலியா).

"எல்லோரும் சகஜமாகப் பழகுகிறார்கள். திறமையை வளர்க்க உதவி செய்கிறார்கள். என் தகுதியின் காரணமாகவே உயர்வேன் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது" என் கிறார் முரளி. பேட், பேட் கிளவுஸ் என்று வருஷத்துக்கு ஒரு முறை அவருக்கு அன் பளிப்பாகத் தருகிறது சுமேரு மென் பொருள் நிறுவனம். "நல்ல பேட் ஒன்றின் விலை ஆறாயிரம், ஏழாயிரம். எங்க குடும் பத்துக்கு இது சாத்தியமா?" என்று கேட் கிறார் முரளி.

"ஒரு நாள் நிச்சயம் இந்திய அணியில் இடம் பெறுவேன். இதுவே என் லட்சியம்" என்கிறார் முரளி. அன்பளிப்பாகக் கொடுத்த ஸ்போர்ட் ஷூ பிய்ந்து போக, நண்பனின் ஷூவை அணிந்து கொண்டு பிராக்டீஸுக் குக் கிளம்பிக் கொண்டிருக்கும் முரளியின் கண்களில் ஒளி தெரிகிறது. நடையில் சச்சினும்தான்!


- ப்ரியன்

படங்கள் : ராஜன்



லத்தீன் மொழியில் காலண்டர் என்பதற்கு 'கணக்குப் புத்தகம்' என்று பொருள்.

450 கோடி புதையல்!





செய்தி நேரம்

அதி நவீன விமானம்

உலகின் எந்தப் பகுதியையும் இரண்டு மணி நேரத்தில் குண்டு வீசித் தாக்கிவிட்டுத் திரும்பக் கூடிய அதி நவீன விமானத்தைத் தயாரிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இது ரோபோ வகையைச் சேர்ந்த 'ஹைப்பர்சானிக்' விமானம். பாதுகாப்புப் படை, விமானப்படை இரண்டும் இணைந்து இவ்விமானத்தை உருவாக்க உள்ளன. இந்தப் போர் விமானம் ஒலியை விட 8 மடங்கு வேகத்தில், அதாவது மணிக்கு 32,200 கி.மீ. வேகத்தில் செல்லக் கூடியது. இந்த விமானம் 2025ல் செயல்பாட்டுக்கு வரக் கூடும் என்கின்றனர். சிறிய ரக ஹைப்பர்சானிக் விமானங்கள் இன்னும் பத்து ஆண்டுகளில் பயன்பாட்டுக்கு வந்து விடும் என்கின்றனர் அமெரிக்க விமானப்படை அதிகாரிகள்.

மக்கள் தொகை

2050ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகை இன்னும் 260 கோடி அதிகரிக்கும். தற்போது 630 கோடியாக உள்ளது உலக மக்கள் தொகை. இன்றைய நிலையை ஒப்பிடும்போது மக்கள் தொகை பெருக்கத்தின் அளவு எதிர்காலத்தில் குறைவாகவே இருக்கும். வளரும் நாடுகளில், குறிப்பாக நகர்ப்புறப் பகுதிகளில் அதன் தாக்கம் அதிகமாக இருக்கும்.

சீனப் பெருஞ்சுவர்

சீனப் பெருஞ்சுவரின் மூன்றில் ஒரு பகுதிதான் இப்போது ஓரளவுக்கு உறுதியாக இருக்கிறது. ஒரு பகுதி முற்றாகப் பாழாகிவிட்டது. மற்றொரு பகுதி பலமாகச் சேதமடைந்து இருக்கிறது.

வடக்கிலிருந்து வரும் பழங்குடி மக்களின் தாக்குதலிலிருந்து சீனாவைக் காப்பாற்ற, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுப்பப்பட்டது சீனப் பெருஞ்சுவர்.

சீனப் பெருஞ்சுவரில் உள்ள கற்களைப் பெயர்த்து மக்கள் தங்கள் சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்தியதன் விளைவுதான், சுவர் பாழானதற்குக் காரணம். தற்போது பெருஞ்சுவரை காப்பாற்றும் முயற்சி நடைபெற்று வருகிறது.

450 கோடி புதையல்!

அமெரிக்கக் கடல் பகுதியில் 138 ஆண்டுகளுக்கு முன் மூழ்கிய கப்பலிலிருந்து 450 கோடி மதிப்புள்ள தங்க, வெள்ளி நாணயங்கள் மீட்கப்பட்டுள்ளன. எஸ்.எஸ். ரிபப்ளிக் கப்பல், நியூயார்க்கிலிருந்து நியூ ஆர்லியன்ஸ் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது 1865ஆம் ஆண்டு கடலில் மூழ்கியது. அப்போது அதில் 540 கோடி மதிப்புள்ள தங்க, வெள்ளி நாணயங்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. அந்தக் கப்பல் மூழ்கிய இடத்தில் நவீனக் கருவிகளைக் கொண்டு ஆராய்ந்தபோது நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வெள்ளி நாணயங்கள் புத்தம் புதிதாக இருந்தது கண்டு அனைவரும் ஆச்சரியம் அடைந்துள்ளனர்.


அரிசி
அமைப்பு : வில்வேல் படம் : சேகர்
உலக மக்களின் முக்கிய உணவுப் பயிர்களில் அரிசியும் ஒன்று. உழுத வயலில் விதை நெல் முதலில் விதைக்கப் படும்.
நெல்லிலிருந்து செடி முளைக்கிறது. இந்த நாற்றுகளைப் பறித்து மொத்தமாகக் கட்டுவார்கள்.
பிறகு போதிய இடைவெளி விட்டு மீண்டும் வயலில் நாற்றுகள் நடப்படும்.
பயிர் வளரும்போது கூடவே தேவையற்ற களைச் செடிகளும் முளைக்கும். அதைப் பறித்து எறிவர்.
நெற்பயிர்களைப் பூச்சிகள் தாக்கும். எனவே பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்கப்படுகிறது.
நெற்கதிர் முற்றியதும் அறுவடை செய்யப்படும்.
அறுவடை முடிந்ததும் களத்து மேட்டில் போர் அடிப்பர்.
உதிர்ந்த நெல்மணிகளை மூட்டையாகக் கட்டி வைப்பர்.
அரவை இயந்திரத்தில் நெல், உமி நீங்கி அரிசியாக வெளிவரும். இதைத்தான் நாம் அனைவரும் உண்கிறோம்.

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05"
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 * Registered as a Newspaper in Srilanka